உ

கணபதி துணை

பாலவைத்தியத்திரட்டு

முதலாம் பாகம்.

இஃது

யாழ்ப்பாணம்

அளவை நகர்

ஆயுர் வேத வைத்தியர்

க. வே. கந்தையா பிள்ளை

அவர்களால்

பலவைத்திய நூல்களிலிருந்து திரட்டி

பிணாங்கு

கிறிரெறியன் அச்சு இயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

அக்ஷய வருஷம்.

7

உ

கணபதி துணை

பாலவைத்தியத்திரட்டு

முதலாம் பாகம்.

இஃது

யாழ்ப்பாணம்

அழவை நகர்

ஆயுர் வேத வைத்தியர்

க. வே. கந்தையா பிள்ளை

அவர்களால்

பலவைத்திய நூல்களிலிருந்து திரட்டி

பிணங்கு

கிறிரெறியன் அச்சு இயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

அக்ஷய வருஷம்.

மதிப்புரை.

எப்பிறவியினும் மக்கட்பிறவியேசிறந்ததென்பதும் அப்பிறவி பூர்வபுண்ணியத்தினலெய்தப்பெற்றாலும் நோய்வாய்படாதிருத்தலே சாலச்சிறப்புடைத்தென்பதும் மறுக்கொணு உண்மை. கர்மத்தால் நோய்வாய்ப்பட்டினும் அதை மணிமந்திர அவுடதங்களால்நீக்கித் தேகத்தை நன்னிலையில்வைத்து சற்கருமம்புரிந்து. இப்பிறவி எடுத்தபயனை கடவுளின் திருவடித் தாமரைகளை அடைவதே இப்பிறவியாலெய்தற்பாலபயன் என்பது வேத ஆகமங்களின துணிவு.

இத்தேகவளர்ச்சியில், பாலப்பருவமே அதிசசிரத்தையுடன் காப்பாற்றப்படவேண்டியது. சிறுமகார்கள் நோய்வாய்பட்டகாலத்தில் தக்கவைத்தியர்களை அடைந்து அந்நோயின் இலக்கணங்களைச்செவ்வனே அறிந்து ஏற்ற மருந்துகளை புகட்டப்பட்டாலொழிய நோய் நீங்காது, அவ்வாறு நோய் நீங்கப்பெறாது எத்தனையோ பாலர்கள் அரிஷ்டமுறுவதைக்கண்ணுற்ற நம் நண்பர், யாட்பாணம் அளவைநகர் ஆயுள்வேத வைத்தியன், க. வே. கந்தையாபிள்ளை யென்பார் பண்டைக்காலத்தில் நம்நாட்டை அலங்கரித்திருந்த வைத்திய சிரோமணிகளின அனுபவமுறைகளை ஒருங்கேதிரட்டிப் பாலவைத்தியத்திரட்டென நாமஞ்சூட்டி, எல்லோர்க்கும் பயன்படுமாறு இலகுவான தமிழில் வெளியிட்டுள்ளார் அன்னார் முயர்சிபோற்றற்பாலதே.

இவர் அந்நகரின்கண்ணே சிறந்துவிளங்கி, இலக்கண இலக்கியத்தில் பாண்டித்தியமுற்று ஆயுள் வேத வைத்தியத்தில் கீர்த்திப்பெற்ற க. அருளம்பலம், அவர்களின் நன்மாணவராய்விளங்கி யாட்பாணம் எங்கணும் தங்கீர்த்தி நாட்டிய அம்பலவாணர், கதிரித்தம்பி வைத்தியன் அவர்களின் மாணுக்கனாய் ஆயுள் வேத வைத்தியத்தில் நல்லதிறமைபூண்டவர். இந்நூலும் ஏற்றகாலத்திலோர் வைத்தியன்போன்று கஷ்டமுறுவார்க்கு கடமைபுரியுமென்பது பொருத்தமுடைத்து.

டாக்டர். K. முத்துகுமாரு, J.P.,
சிலோன் டிஸ்பென்ஸரி,
பினங்கு.

உ

சிவமயம்.

முகவுரை.

இவ்வுலகில் வாழும் மாந்தர்கள் பெறுவதாகிய பேறுகளுள் மக்கட்ப்பேறே சிறந்ததாகும். அம்மக்கட்ப்பேற்றையருந்தவத்தாற் பெறுந் தந்தை தாயார் தாம்பெற்ற பாலரைப்பாதுகாக்கும் வழிவகையறியாது நோய்வாய்ப்படுத்தித் துன்புறுவதை யான் நேரிற்கண்டும் பலர் சொல்லக்கேட்டுமிருக்கின்றேன்.

முதியோர்க்குண்டாகும் வியாதிகளிலும் பாலர்க்குண்டாகும் வியாதிகளே மிகக் கொடிதென முனீந்திரராகிய அகத்தியமுனிவர் முதலான மகாரிஷிகள் தங்கள் அனுபூதியினால் நாமெல்லோரும் நல்வாழ்வடையும் பொருட்டு முன்னரே அருளிச்செய்த வைத்திய நூல்கள் பலவுளவாயினும் அவ்வைத்ய நூல்களைக்கற்று வைத்தியஞ்செய்து வல்லுனரெனப்பெயர்பூண்டார் சிலரேயாவார்.

அவர்களுள் இற்றைக்குப் பலவருடங்களுக்குமுன் யாழ்ப்பாணத்தை அரசு புரிந்திருந்த செகராசசேகர மகாராசாவின் சகோதரரும் இலங்கை யரசனாலும் ஏனைய அரசர்களாலும் நன்கு மதிப்புற்றவருமாகிய வைத்தியராஜேந்ர பரராசசேகர மகாராசா? எழுதிவைத்துள்ளகைவாகடமுறைகளைக்கொண்டும் ஆங்கில வைத்தியராலும் ஆயுள்வேத வைத்தியராலும் வியந்து புகழப்பெற்ற இருபாலைச்செட்டியார் அவர்களாலும் எழுதிவைத்துள்ள ஏட்டுப்பிரதிகளைக்கொண்டும் பாலர்வைத்தியத்தை வைத்தியரல்லாதவரும் தங்கள் தங்கள் பாலர்களுக்குண்டாகும் நோய்களை எளிதிலுணர்ந்து அந்நோய்க்குத்தகுந்த ஒளடதங்களைத் தாங்களே யியற்றிக் கொடுத்துக் குழந்தைகளைப் பாதுகாக்கத்தகுந்ததாக வசனநடையில் ஓர் நூலியற்றித்தரும்படி எனது நண்பர்கள் பலர் கேட்டுக்கொண்டமையால் அவர்கள் கேள்விக்கிசைந்து யான கையாண்டுவந்த ஏட்டுப்பிரதிகளையும் வேறுசில வைத்தியர்

களின் ஏட்டுப்பிரதிகளையும் நன்காராய்ந்து வெளிப்படையாக எழுதி **பாலர் வைத்தியத்திரட்டு** எனப்பெயரிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

இந்நூலிற் கூறப்பட்டவையாவும் மேலேகுறிக்கப்பட்ட பெரியோர்களின் நூலாதாரத்தைக்கொண்டும் எனது அனுபவ ஆராட்சியைக்கொண்டும் பாலர்க்குண்டாகும்வியாதிகளையும் அவ்வியாதிகளை நீக்கும்ஔஷதங்களையும் அவ்வௌஷதங்களை யியற்றும் முறைகளையும் நன்குவிளக்கிக் காட்டுகின்றனவென்பதை இந்நூலை நன்கு வாசிப்பாரனைவரும் இனிதுணர்வாராக.

இங்ஙனம்,

க. வே. கந்தையா பிள்ளை,

ஆயுள்வேதவைத்தியன்.

சிவமயம்.

பால வைத்தியத்திரட்டு.

காப்பு.

வெண்பா.

காவிவிழிச்கிஞ்சுகவாய்க் கஞ்சமலர்ச் செஞ்சரணத்
தேவியரவாகவெனச் செப்புமொழி—பூவைவனற்
கன்றொழிக்குமைந்துகரத் தந்திமுகற் சிந்திப்பாம்
இன்றொழிக்கு மெம்மிடருமென்று.

பாலர்களைப்பராபரிக்கும் விதம்.

(1) குழந்தைபிறந்தவுடன் இளவெந்நீரிற் குளிக்கவார்த்துச் சரீரத்தை வஸ்திரத்தால் மூடித்தாயினருகே கிடத்தல்வேண்டும். குளிர்காலமாயின் கம்பிளியால் மூடிவிடுவது நல்லது. மாதாகளைதெளிந்து சொற்பநேரத்தின் மேல் தனதுபாலையே பிள்ளைக்குக் கொடுக்கவேண்டியது. அப்படிக் கொடாமல் விடுவதினால் தாய்க்குப்பால் சுரக்காது தடைபட்டுக் காய்ச்சலுண்டாவதற்கேதுவாகும். பிள்ளை தாய்முலையையுமிழ்வதினால் பாலூறவதுடன் துவாலையுமதிகப்படாது. முதல் பால்ப்போஜனையும் விதேசனத்தன்மையுடையதாதலால் பிள்ளையின் கருமலத்தைக் கழியச்செய்தற்குத்தகுந்த ஔடதங்கொடுக்கவேண்டியதவசியம். உடனே பாலில்லாவிடின் பனங்கருப்புக்கட்டியைக் கரைத்து அதிற் கோரோசனையுரைத்துக் கொடுத்தல்வேண்டும். மறுநாளும் மலங்கறுப்பாயிருந்தால் கருஞ்சீரகம் நாயுருவிவேர் கடுக்காய்த்தோல் இவை வகைக்குக்களஞ்சு (ஒ) எடுத் தவித்து அக்கஷாயத்தில்

கோரோசனை கருப்புக்கட்டி யிரண்டையுமுரைத்துத் தேய்க்கரண்டிப்பிரமாணங்கொடுக்க வேண்டியது.

(2) பிரவசமாகி ஆறு மணித்தியாலங்கள்சென்றும் பால்சுரக்காது விட்டால் துஷ்ட ரோகமில்லாத நல்லஸ்திரீ மூலமாகப் பாலூட்டுவிப்பது நல்லது.

(3) பிள்ளை பிறந்தவுடன் குரல் கம்மியழுதால் கோரோசனையை முலைபாலிலுரைத்துக்கொடுக்க நிவிர்த்தியாகும். இதில் சாந்தமாகாவிடின் கற்பூரவல்லியிலை குன்றிமணியிலை ஈரவெண்காயம் இவைகளின் சாறு வகைக்கோர் துளியும் கற்கண்டுத்தூள் பேன்பிடியளவு எடுத்து ஒன்றுபடச்சேர்த்து ஒரு தேய்க்கரண்டியளவு வெந்நீரிற்கலந்து நாளொன்றிற் கிருமுறை ஒரு நாள் அல்லது இருநாள் கொடுக்கவும்.

(4) பிள்ளைபிறந்து மூன்று அல்லது நான்கு வாரங்கள் வரையும் பகலில் 2 அல்லது 3 மணித்தியாலத்திற் கொருமுறை தவறாது பால் கொடுத்து வரவேண்டும். இரவில் அவ்வளவு நெருக்கமாகக் கொடுக்க வேண்டியதில்லை. பிள்ளை அழுத நேரங்களிலெல்லாம் பால்கொடுத்தல், குழந்தைக்கும் தாய்க்கும் நோயுண்டாவதற்கேதுவாகும் அதனாற் பிள்ளைக்கு வாய்வுப் பொருமலும் அசீரண மூமுண்டாகும் கூடியதளவு நேரக்கணக்குத்தவறாது பாலூட்டிவருதல் உத்தமம். 10 அல்லது 12 மாசங்களானவுடன் தாயின் பாலைக்கொடாமல் நிற்பாட்டிவிடல்வேண்டும். அதன்பின்பும் கொடுத்தவரின் தாய்க்கும் பிள்ளைக்கும் சுகக்குறைவையுண்டாக்கும். தாய் வீட்டுக்கு விலக்கான காலத்தில் அல்லது கெற்ப உற்பத்தியான காலங்களிற் பால் குறைவுபடின் அவ்வேளையில் மேலே இரண்டாம்பிரிவிற் சொல்லியபிரகாரம் பாலூட்டுவித்தல் நல்லது.

நித்திரை.

(5) பாலர்கள் பிறந்தமுதல் மூன்று மாசங்களும் ஏறக்குறைய மூழு நேரமும் நித்திரைசெய்யவிடுதல் நல்லது முதல் இரண்டு மாசங்களும் மாதாவின் தேக அனல்பெறும்பொருட்டு பிள்ளையுடன் சயினித்தலவசியம் அதன்

பின் பிரிம்பான இடத்தில் சயனிக்கவைப்பது சுத்தவாயுவைச் சுவாசிப்பதற்குத்தகுந்ததாகும் பிள்ளையை மடிமேல்வைத் துறங்கச்செய்தல் நல்லதல்ல. பிள்ளைக்குக் குளிர்படாவண்ணம் மெல்லிய வஸ்திரத்தால் போர்த்துத் தொட்டிலில் சயனிக்கவைப்பது நன்று. பிள்ளை மூன்றுவயசு நிறைவேறும் வரையும் பகல் நித்திரை செய்தல்வேண்டும் சுகரோயுற்ற காலங்களிலன்றி மற்றுப்படிபிள்ளையை மாதா இடமாவது மற்றெவருடனாவது படுக்கவையாது ஏகாந்தமாய்த் துயிலவைத்தல் நல்லது.

குளிப்பு.

(6) பிள்ளைகட்கு நாளொருமுறை தவறாது வெந்நீரிற் குளிக்கவார்த்து வருதல்வேண்டும். நெடுநேரஞ்செல்லவிடாமல் சீக்கிரம்வார்த்து முடித்தல் நல்லது. உடனே மெல்லியவஸ்திரத்தால் ஈரம் துவட்டிவிடுதல் வேண்டும். பிள்ளைகட்கு வயசு 3 அல்லது 4 சென்றதின்மேல் குழிக்கவார்க்கும் வெந்நீரின் சூட்டைக் குறைத்துக்கொள்ளுதல் நல்லது. வளர்ந்த பிள்ளைகள் குளிர்ந்த நீரிற் குளிப்பது நன்று. சிறுவர்கள் பெலவீனமான காலங்களிலெல்லாம் வெந்நீரில் குளித்தலே உத்தமம்.

போசனம்.

(7) பிள்ளைக்கு இரண்டு பற்கள் முளைத்துச் சரியொத்து வந்ததின் மேற்தான் பாலொழிந்த மற்றைய ஆகாரமெதுவுங் கொடுக்க ஆரம்பித்தல் வேண்டும்.

பாலர்களின் சுகத்துக்கு மாறான செய்கைகள்.

1. பாலர்களை எவ்வகையாலும் பயமுறுத்தி உரத்தசத்தத்தால் அவர்களை திடுக்கிடச்செய்தல்.

2. உணவூட்டும் வேற்றுப்போத்தலையாவது தனது அல்லது பிறரின் கை விரலையாவது பிள்ளையை உமிழும்படி விடுதல்.

3. பிள்ளையை தொட்டிலிலிட்டு வேகமாய் ஆட்டுதல்.

4. சூடுள்ள பதார்த்தங்களைப் பிள்ளை தன்வாயால் ஊதி ஆறச்செய்தல்.

5. சிரசில் சலமூற்றின்னனம் செய்தநேரங்களில் ஈர்க்கிலாவது வேறு தடிக்குச்சிகளிலாவது வஸ்த்திரத்தைசுத்தி காதுகளிலிட்டு சோரும்படி அவைகளில் செறிந்துள்ளநீரை எடுத்தல்.

6. நோயாயிருந்து சவுக்கியமடைந்து வருகையில் கடும்பசி எடுப்பது இயற்கை. அவ்வேளைகளில் ஒரேமுறையில் அதிக போசனத்தை செலுத்தி இரைப்பையின் பாரத்தினால் முட்டுப்படச்செய்தல்.

7. மலங்கழியச்செய்தற்க்காக புகையிலைக்காம்பை யாகுதல் மறுயிலைகளின் காம்பை யாகுதல் சாறணைவேர் முதலியவற்றையாவது அபானத்திற் செலுத்துதல்.

8. முலைகொடுக்கும் மாதார்கள் எண்ணெ தேய்த்து ஸ்னானம் செய்தவுடன் தலையிலுள்ள ஈரம் அவட்டாது குழந்தைக்குபால் கொடுத்தல்.

9. மாதா பிறயிடங்களிற்சென்று வீட்டுக்குத்திரும்பிவந்து கால்முகங்கழுவித்தனது நியம நிஷ்டைகளை முடித்துத் தான் குழந்தையை எடுத்து பால் ஊட்டவேண்டியது.

10. தூரஸ்திரீகளும் தொற்று நோயுள்ளவர்களும் குழந்தைகளைத் தூக்குதல் கூடாது.

பால ரோக வுற்பத்தி.

செங்கிரந்தி, கருங்கிரந்தி, பட்சிதோஷம், மாந்தம், கணை, கரப்பன், செவ்வாப்பு, கருவாப்பு, தொண்டைக்கட்டு, அக்கரம் முதலியவைகளும் இன்னும் அனேககொடிய ரோகங்களும் உற்பத்தியாகின்றன. மேற்படி மாந்தம் தாய் முலைப்பாலாலும் கணை கெற்பச்சூட்டினாலும் மற்றைய நோய்கள் யாவும் தந்தை தாயாரின் செயற்கையால் எழுந்த உட்டனத்தினாலும் உண்டாகின்றன.

நோய்களின் குணங்கள்.

செங்கிரந்தியின் குணம்.

பிள்ளை பிறந்தவுடன் தொண்டைசட்டிய் பூனைக்குரல்போலழும் சிறு நீரும் மலமும் சட்டுப்பட்டு வயிறூதும். கால் சிவப்பேறும்.

கருங்கிரந்தியின் குணம்.

குழந்தை யலறியழுது குரல்கம்மும் முலையுண்ணாது மூர்ச்சையாகும் உடல் வெதும்பும் கண்திறவாது நாவறட்சிகாணும் கீழுதடு கை கால் கறுப்பேறும் வயிறூதி வலிகாணும்.

பட்சிதோஷக்குணம்.

குழந்தை முலையுண்ணாது தண்ணீராய் வயிறுகழியும் உவாந்திக்கும்! தலையெடாது கண்குழியும் பீழைசாறும் உடல் பேதப்படும் உஷ்ணம் அதிகரிக்கும் சீறியழும் கழுத்தும் முகமும் சிறுக்கும்.

பறவைத்தோஷத்தின் குணம்.

சிரசிற்கனலேறி உடல்நொந்து வெப்புக்கொண்டு நாவுலரும் சத்திக்கும் நெஞ்சைச்சுழியவாங்கும் வலிப்புக்காணும் இளைக்கும் உச்சியுங் கண்ணும் குழியும் குழந்தை அடிக்கடி திடுக்கிட்டு எழுந்துசீறும் வயிறுகழியும் விழி வெளுக்கும் முகம் மஞ்சள்போலிருக்கும்.

எட்சி தோஷக்குணம்

உதரத்தில் கனலேறி உடம்புமெலியும் மலம்நாறும் கண்ணில் பீழைகட்டும் வயிறுகழியும் குழந்தை முலையுண்ணாது பதறியழும் மயக்கிப்புரளும்.

வீங்குபுள்ளின் தோஷக்குணம்

குழந்தை உவாந்திபண்ணும் பால்போற்கழியும் பின்கையால் முகத்தை தடவும் உச்சிகுளிரும் நாவுலரும்.

தூங்குபுள்ளின் தோஷக்குணம்

வயுறுகழியும் உவாந்திபண்ணும் மயக்கமாய் தூங்கி வீறிட்டலறி எழுந்திருக்கும் முகத்தைபார்க்கும் அடிக்கடி தாகித்து தண்ணீரைவிரும்பும் முகம் வேறுபடும் கண்கள் இருண்டுசோரும் நெறநெறனப்பற்கடிக்கும் உச்சிபள்ளம்விழும்.

விளக்கொளிக்கண்புள்ளின் தோஷக்குணம்

குடித்தபாலெதிரெடுக்கும் உடம்பு அடிக்கடிகாயும் குழந்தை முலையுண்ணாது பெருந்தாகம்கொண்டு சோரும்.

வெங்கண்புள்ளின் தோஷக்குணம்

பால்போற்சழியும் உடம்புகாயும் வெழுக்கும் வயிற்றில் இரைச்சல் வலிகாணும்.

கெருடக்கண் புள்ளின் தோஷக்குணம்

வாய் நீர்வடியும் உவாந்திபண்ணும் இருகண்களும் தாழும் பீளைகட்டும்

செங்கண் புள்ளின் தோஷக்குணம்

கண்சிவந்துநீர்வடியும் தலைகுளிரும் குழந்தை தவழ்ந்துபோய் நிலத்தில் விழும் கையால் முகத்தை துடைக்கும் சிறியழும் வெப்புநீராய் மலங்கழியும்

அந்திப்புள்ளின் தோஷக்குணம்

தேகம்வெளுக்கும் சுரமதிகரிக்கும் இடைக்கிடை கால்குளிரும் குடித்த பாலெதிரெடுக்கும்.

நீர்ப்புள்ளின் தோஷக்குணம்

நெஞ்சுவறண்டிடும் கண் குளிர்ந்துவெளுக்கும் பாலன் பெருமூச்செறியும் பாலுண்ணாது இரவும் பகலும் அலறியழும் உடல்வெயர்க்கும்.

புள்ளின் தோஷக்குணம்

உச்சியும் கண்ணும் குழியும் குடித்தபால் பச்சை நிறமாக வயறுகழியும் பறவைக்குரல்போல் குழந்தை சீறியழும் இளைக்கும் தண்ணீரைவிரும்பும் உடம்பு அசதிகாணும்.

முட்டேத்தோஷக்குணம்

மாதவிடையானவர்கள் குழந்தையை தூக்கினால் மேனிவாடும் வேறுபடும் உவாந்திபண்ணும் உச்சியும் கண்ணும் குழியும் நாக்கும் வாயும்கறுக்கும்

குளித்தோஷக்குணம்

உச்சியும் கண்ணும் குழியும் உவாந்தி வெயர்வை யதிகரிக்கும் பலநிறமாய்க்கழியும் உடம்பு அக்கினிபோல் காய்ந்தவற்றும் நெஞ்சுலரும் தாகமதிகரிக்கும் கண்ணீர்வடியும் கால்வீங்கும் தூய்யம்புண்படும்.

கெற்பமளிந்த தோஷக்குணம்

உடம்பு நொந்துசிவக்கும் இளைக்கும் நாறும், உவாந்திக்கும் நெஞ்சுலரும் கைகாலமுச்சடையும் கால்பின்னும் கழியும் விழிசொருகும் மயங்கும்.

தேரைத்தோஷக்குணம்

உடம்பு உலர்ந்துவற்றும் வெளுக்கும் நெஞ்சுலரும் கண்பொடிக்கும் கைகால் வற்றிச்சுருங்கி முடங்கும் வயறுபொருமும் மலந்தீயும் நாவுலரும் தாகிக்கும் முகம்வாடும் செவிதாழும் மூச்சுவாங்கும் நெரிகுரற்படும் குழந்தை சற்றும்தேறுது.

கிரந்தி—இரண்டு (2)

தோஷவகைகள்—பதினாறு (16)

மாந்தவகைகளின் குணம்.

வாதமாந்தக்குணம்.

குழந்தைவயிறு பொருமியழும் உடல்வெயர்க்கும். பலவிதமாய்க்குழிய வலிக்கும் அடிக்கும் கொட்டாவி விடும் நாசிபுண்ணாகும்.

பித்தமாந்தக்குணம்.

வாந்திபேதி வலிப்பு மூர்ச்சைகாணும் குரல்கம்மும் தேகம் மஞ்சளித்து வெயர்த்துக்குளிரும்.

சிலேற்பன மாந்தக்குணம்.

தேகப்சிலிர்த்து நளிரும் நாவெளுக்கும் நெஞ்சு கபம்கட்டும் வயிறாதிக் கழியும் குழந்தைமயங்கும்.

ஊதுமாந்தக்குணம்.

உடலூதும் வயிறிரையும் களிச்சல் கடுப்பு வாந்தி தொண்டைவலி சுரம் தோன்றும்.

நீர்மாந்தக்குணம்.

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும் வாய்நீர் சுழற்றிக்குழந்தை வாந்தி பண்ணும் முலையுண்ணாது தூங்கிவிழித்தூச்சிரிக்கும் வயிறுபொருமிக்கழியும் உடம்பு கைகால் தினவெடுக்கும் வீங்கும் தலைவலிக்கும் முகம் மினுமினுக்கும் மலம்வறண்டு நீர்க்கடுத்து இறங்கும்.

விஷமாந்தக்குணம்.

மலம்சிக்கி வயிறுவலித்திரைந்து கழியும் நின்று நின்று சுரங்காயும் மேனிவாடும் அரையின்கீழ்க் குளிர்ந்திருக்கும் உடல் வெயர்க்கும் கையில் பிள்ளை தங்காது அடிக்கடி வாந்திபண்ணும்.

பேர்மாந்தக்குணம்.

குழந்தைபாலுண்ணாது வார்திடண்ணும் மயங்கும் தலையசைக்கும் மார்பு அடிக்கும் தேசம்வாடும் நெற்றிநரம்பு புடைக்கும் கண்குழியும் தாகமிகும் நெஞ்சுலரும்.

பால்மாந்தக்குணம்.

வயிறூதிப்புண்போல் நொந்து புளித்த நாற்றமாய் வயிறுகழியும் கண் குழியும் செவிதாழும் தொண்டையிற் கோழைகட்டும் கைகால் வெதும்பும் குளிரும் குழந்தை வாந்திபண்ணிப் பரதவிக்கும்.

செரியாமாந்தக்குணம்.

சுரங்காயும் தலைவலிக்கும் வயிறுநொந்து குழந்தைசீறியழும் மாக்கரைத் ததபோற்கழியும் அரைக்கண் நித்திரையாய்த் தூங்கிக்கிரைத் தண்டுபோற் சோரும்.

கட்டுமாந்தக்குணம்.

மந்தித்து வலித்துக் குழந்தை அடிக்கடியழும் மலஞ்சிக்கி வயிறுகழியும் சற்றேபாலுண்ணும் திகைத்திருக்கும் தூக்கம்போற்சோர்ந்துவிழும் சொர்ப இருமல் சுரம் கொட்டாவி தலைவலி வெயர்வை யுண்டாகும்.

தலைமாந்தக்குணம்.

உடலூதிப்புண்போல்நோகும் வயிறுபொருமி வலித்துக்குழந்தை துள் ளிவிழும் ஏப்பம் கொட்டாவி விடும் கைகால் குளிரும் முகம் வெயர்க்கும் தலைகனத்துவலிக்கும நாசியிலிருந்து நீர்வடியும் குளிர்சுரங்காணும்.

துலைமாந்தக்குணம்.

அதிகமாய்க்குழந்தை வாந்திபண்ணும் அடிக்கடி வயிற்றை முறுக்கிக் கொட்டாவி விடும் உடல்வெயர்க்கும் முகம் மாறுதலடையும் வலிப்புக்கண்டு கால் கை விறைப்புக்கொள்ளும்.

சுளிமாந்தக்குணம்.

சுரமூண்டாகும் இரைப்பு சுவாசம் விக்கல்கக்கல்காணும் குழந்தைமுலை யுண்ணாது நித்திரைசெய்யாது.

வீக்கமாந்தக்குணம்.

சுரங்காயும் காதும் கண்ணும் வீங்கிவற்றும் நாப்புண்ணாகும் கைகால் நோகும் போசனஞ்செல்லாது.

முக்குமாந்தக்குணம்.

குழந்தை முக்கி முக்கி சீதமும் மலமுமாய்க்கழியும் உடலுருகி மெலியும் சுரங்காயும் தாகங் காணும் பின் கால்வீங்கும்.

வறள்மாந்தக்குணம்.

உடல் திரைக்கும் வெளுத்துவற்றிக் குழந்தை உருக்கெடும் கடுப்பு வலிப்பு முதலிய பலகுணங்கள் காணும்.

ஊழைமாந்தகுணம்.

மலசலங்கட்டி வயிறுவலித்துக் குழந்தையலறியழுது பாலுண்ணாது மிரண்டு பார்க்கும்.

அட்சரமாந்தக்குணம்.

அஸ்தியிற் கனலேறி குளிர் சுரம் பேதிகாணும் உதடும் கையும் வெடிக்கும் புண்ணாகும் குழந்தை உடல் மெலியும்.

மாந்தங்கள்—பதினெட்டு (18)

கணவகைகளின் குணம்.

வரட்கணக்குணம்.

உடல் கனத்துக்குழந்தை புகைந்திருமும் இரைப்பு நாவரட்சி தாகம்

சுரம் பசிமந்தம் நீர்ச்சுருக்குக்காணும் மலங்கருகும்.

பித்தசணக்குணம்.

குழந்தை மஞ்சள் போற்கழியும் நாக்கும் கடைவாயும் புண்ணாகும் உடல் எரிச்சல் சுரம் தலைகிறுகிறுப்பு பயக்கங்காணும்.

சிலேற்பனசணக்குணம்.

உடம்பிற்றினவு சொறி கைகால்வீக்கம் வாய்நாற்றம் வெப்பு இருமல் கோழை ஆருத்தவனங்காணும் கீழ்வாயும் மேல்வாயும் வெடித்துப்புண்ணாகும்

பாலக்கணக்குணம்.

குழைந்தையின் தேகமிளைக்கும் பொருமல் வாந்தி வாய்நீர்வடிதல் தலை சுழற்றல் சோபதாபம் அசதிகாணும் வயிறு இரைந்து பாசிபோற்கழியும் கண்சுழலும் நாவுலரும்.

ஊதுமாந்தகணக்குணம்.

குழந்தை உடல் கண் கால் வீக்கும் நாப்புண்ணாகும் சுரங்காயும் அன்னம் தண்ணீர்செல்லாது கால்கைசோரும் சுவாசமிகுதியாகும்

மாந்தநீர்சணக்குணம்.

இருமல்காணும் மூக்கில் நீர்வடியும் இடைக்கிடை சுரங்காயும் வயிறு பொருமியிரைந்து பலவிதமான கழிச்சல் தலைபுரட்டல் மயக்கங்காணும் உடம்பு முகம் கண்சோரும்.

சிங்கிமாந்தகணக்குணம்.

உந்தியிற் கனலேறி ஈரல்வெந்து புண்ணாய் உடலாதியந்தமும் தீபோற் காயும் சுவாசம் மேல்நோக்கி இளைக்கும் குழந்தை முக்கி முக்கி மயங்கும் இதை விஷமாந்தமென்றுஞ்சொல்லுவார்கள் இது அசாத்தியம்.

நீர்க்கணக்குணம்.

சுரம் விட்டுவிட்டுக்காயும் மிகுந்ததாகம் வெயர்வைகாணும் கண்குழியும் நாக்கு வாய்வெடித்துப்புண்ணாகிவறளும் தண்ணீர்போற்கழியும் தலைசுழலும் வயிறுநோகும் கைகால் சோர்ந்துகுளிரும் முகம் கால் புறக்கை மினுமினுப்பாயிருக்கும்

சுழிக்கணக்குணம்.

குளிர்சுரம் சுவாசக்காணும் கண்பஞ்சடையும் உச்சிகுழியும் நெஞ்செரிக்கும் உடல்நொந்து குழந்தை அயரும் இன்னும் சுவாசம் இருமல் காணும் முகம் மார்பு புடைத்துக்காணும் வயிறு ஈரல் நெஞ்சு தொண்டை நாவெந்து புண்ணாகும் முலையுண்ணாது அளரியழும் கைகால் குளிரும் வயிறு பொருமும் சுரங்காயும் கண்சொருகும் நாவுலரும் இன்னும் நெஞ்சு கபங்கட்டி இருமல் இளைப்பு மயக்கங்காணும் மார்பு குழியாய்வாங்கும் வாயில் நுரைதள்ளும் சாந்திபண்ணும் சுரம் காயும் கழியும் முகம் மஞ்சள்போலிருக்கும் தலைநோகும் இந்தக்குணங்கள் கஷ்டசாத்தியம்

குலிக்கணக்குணம்.

நெஞ்சு வாய் தொண்டை வெந்து புண்ணாகி இருமல் சுவாசம் பொருமல் கண்டு குழந்தை முலையுண்ணாது முகம் நாறும்.

மகாகணக்குணம்.

முகம் புறங்கால் புறங்கை பின்னுக்கிழும் விழிவெளுக்கும் உடல் வெதுப்பும் நாவுதடு புண்ணாகும் குழந்தை மயங்கும்.

பிரளிக்கணக்குணம்.

வயிறுபொருமி எப்பமுண்டாகும் உடல் புண்போல் நொந்து குழந்தை அடித்தேங்கியழுதலறும் மாப்போல் மலங்கழியும் வேறு மலங்கட்டி வயிறு பொருமி யடிக்கடி முக்கும் குடலைப்பிரட்டி வலிக்கும் முலையுண்ணாது நாவுலரும் மேல்மூச்சு இளைப்புக்காணும் முத்துப்போல் மூக்கிலிருந்து நீர்வடியும் முகத்தில் மஞ்சள் வாசனைவீசும்.

பிறக்கணக்குணம்.

வயிறு பொருமி பசுமையாயும் உறையாத தயிர்போற்கழியும் தூக்க மிகும் டாலருந்தி உவாந்திப்படண்ணும் சுரங்காயும் விழிசொருகும் புறங்கை கால் சில்லென்றிருக்கும் தலையைப்புரட்டும்.

வறள்கணக்குணம்.

சரீரமெல்லாஞ் சிவந்து நெஞ்சு துடிக்கும் குழந்தை புகைந்திருமும் நாக்குக்கறுக்கும் வயிறெரியும் வேறு நாக்கில் மஞ்சளாயும் வெண்மையாயும் முட்டாளும அந்நடுவில் மூன்றுவெடிப்புத்தோன்றும் இருமல் சளி மிகுந்த தூக்கம் மயக்கங்காணும் முகம் மஞ்சள் பூத்திருக்கும் உடல் வற்றும்.

சொதிப்புக்கணக்குணம்.

நெஞ்சும் விலாவும் சொதிக்கும் நெற்றிவெயர்க்கும் பஞ்சுபோற் கண் வெளுக்கும் இருமல் தலைவலிகாணும் குழந்தை குரல்கம்மும்.

அந்தக்கணக்குணம்.

மூளையிற் கணலேறி உடல் வெதும்பும் நாவுலரும் விழிவெளுத்து முகம் மஞ்சள் நிறமாக மினு மினுக்கும்.

மந்தாரகணக்குணம்.

வயிறூதி சுரம் மயக்கம் சுவாசம் காணும்.

எரிகணக்குணம்.

உடலாதியர்தமுமெரியும் வாயால் மூச்சுப்போகும் வாயிலிருந்து நீர் வடியும் குழந்தையலறியழும் நித்திரைகொள்ளாது.

ஆமகணம் அல்லது சீதகணக்குணம்.

சாமந்தோறும் உடல்வெதும்பி நாளுக்குநாள் தேகம்வற்றும் தாகமிகும் பசிமந்திக்கும் வயிறுபொருமியிரைந்து கழியும் சுவாசமிகும் கால்குளிரும் குழந்தை கண்விழியாது அயரும் திடுக்கிட்டெழுந்து சீறியழும் மூக்குயரும் புருவஞ்சுளிக்கும்.

நிராமக்கணக்குணம்.

தண்ணீருஞ்சீதமுமாயும் பச்சை மஞ்சள்போலும் குழந்தை கழியும் கண்ணில் நீரும் பீளையும் வடியும் மயக்கமும் கடுப்பும் காணும்.

பேராமக்கணக்குணம்.

கைகால் குளிரும் கண் வளையமாகும் சுரங்காயும் குழந்தை உவாந்தி பண்ணும் திடுக்கிட்டு எங்கும் வயிறு பொருமிக்கழியும் சோரும் முலையுண்ணாது சீறிவெருவிப்பார்க்கும்.

முக்குற்றக்கணக்குணம்.

குழந்தை யடிக்கடி உவாந்திபண்ணும் முலையுண்ணாது சோரும் மலத்தில் இரத்தம் விழும் நாக்கு வெளுக்கும் சுரம் தலைவலிநடுக்கம் உவாந்தி நாவரட்சி தாகங்காணும் சந்துபொருத்துகளுளையும் முக்கிச்சீதமும்மலமுமாய் கழியும் ஆசனவாய் கடுத்து தீப்போலெரியும் அடிதள்ளும் மேனிசுறுத்துவற்றும்.

மூலகணக்குணம்.

வாதபித்தமதிகரித்து குழந்தை சீதம் இரத்தமுமாய்க்கழியும் ஆசனங் கடுத்துளையும் காச்சல் வயிற்றிரைச்சல் விடாத் தலைவலிகாணும் முகம் கருக்கும் சிவக்கும் அடிதள்ளும்.

இரத்தகணக்குணம்.

குழந்தையடிக்கடி இருமும் கழிச்சல் இரத்தக்கடுப்புக்காணும் இடுப்புந் தொடையும் உளையும் சுரங்காயும் தாகிக்கும் நாடியயரும் உடல்வாடும் போசனஞ்செல்லாது.

கணவகைகள்—இருபத்துநான்கு (24)

கரப்பன்வகைகளின் குணங்கள்.

———————: o: ———————

விஷவாதகரப்பனின் குணம்.

குடல்வெதும்பும் உளையும் பரபரவென ஊதும் கைகால் அரையிறு வீங்கிவறண்டு வெடித்துப் புண்ணாகும்.

வாதக்கரப்பனின் குணம்.

உடல் கனத்தும் வெளுத்தும் பிரண்டைபோற் றடித்துக்காட்டும் கண் சிவக்கும்.

பித்தக்கரப்பனின் குணம்.

உடம்பிற்றினவு காச்சல் தலைவலி உவாந்திகாணும் நீர் சிவந்திறங்கும் மலம் சிவக்கும்.

செங்கரப்பனின் குணம்.

தேகம் மெலியும் சிவக்கும் வெடித்து நீரோடும் தலைவலிகாணும் நீர்கட்டும் மரணக்குறிகாணும்.

கருங்கரப்பனின் குணம்.

உடல்வெதும்பும் பசுநரம்புதோன்றி நிறம்பேதப்படும் தேகம் பாபரத்து முறுக்கி குழந்தை தள்ளியழும் முலையுண்ணாது முகம் கால் ஊதும்.

சூலைக்கரப்பனின் குணம்.

தேகமெல்லாம் வெழுத்து முழங்கால் முழங்கையில் சூலைகட்டும் முகம் வாடும்.

ஊதுகரப்பனின் குணம்.

குளிர்காச்சல் களைக்கட்டிகாணும் நாள்தோறும் பூதம்போல் உடல் வீங்கும் புண்ணாகும் மூக்கரிக்கும்.

பாலகரப்பனின் குணம்.

தேகமெலியும் சந்துகால் கடுக்கும் கண்டம் வெடித்துப் புண்ணாகி கடுவிஷம்போல்நாறும் இன்னும் தேகமெல்லாம் பரபரத்து சொறிவோராகி சாரை உடற்போற்காணும் புண்ணில் விஷசலம் உதிரம்போல்வடியும் தேகம் வற்றி உருவளியும்.

அரிகரப்பனின் குணம்.

யோனிலிங்கம் முதலிய தானங்களில் குற்றுண்டாகி புண்பட்டு ஆறாமல் தசையை அழித்து உருவை அழிக்கும்.

கொள்ளிக்கரப்பனின் குணம்.

பாலர்களுக்கு இது பெரும்பாலுமுண்டாகும் துண்டு துண்டாய்த் தடித்து சரீரத்திற்தோற்றி சிவதியாய்மாறி உடனே திரும்பவும் உண்டுபடும் இது தோற்றத்திலும் கடுமையான சொறிவிலும் காஞ்சோன்றி பட்டாற்போலிருக்கும்.

வறட்சிக்கரப்பனின் குணம்.

உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் சிறுசிரங்குமிருந்து வெடித்து தினவு சொறிகாணும் நித்திரைவராது.

கரப்பன்வகைகள்—பத்து (10)

சுரவகைகளின் குணங்கள்.

உடம்பு நோய்க்காய்ச்சலின் குணம்.

உடம்பு நொந்துகாயும் குழந்தை உதட்டைக்கடிக்கும் கை பூட்டியை இறுகப்பிடிக்கும் கண்களைப்பிரட்டும் பால்குடிக்கும்பொழுது முலையைப்பிடித்திழுக்கும்.

உட்காய்ச்சலின் குணம்.

உட்சுரங்காயும் வயிறு அபானமெரியும் மயக்கங்காணும் மலந்தீயும்.

ஆமசுரத்தின் குணம்.

சாமந்தோறும் ஒரளவாய்ச்சுரங்காயுங் குழந்தைசீதியமும் பாலுண்ணாது உடல்கருகும் இளைக்கும் நடுங்கும் தண்ணீர்த்தாகம் தலைவலிகாணும் கைகால் குளிர்ந்திருக்கும்.

இரத்தசுரத்தின் குணம்.

வயிற்றுவலி தாகம்களிச்சல் தலைச்சுற்றல்காணும் சுரம் விட்டுவிட்டுக் காயும் கண்தாழும் நாவுலரும் கைகால்சோர்ந்து தண்ணீர்போலிருக்கும்.

அன்பணுதிசுரத்தின் குணம்.

வெயர்க்கும் வெதும்பும் கண்சிவக்கும் அடிக்கடிதாகமிகும் பார்க்கப்பயமாயிருக்குதெனப்பதறி அலறிக்குழந்தை அழும் வயிறுமந்திக்கும் குழந்தை வெளியிலோட எத்தனிக்கும்.

மாங்கிஷசுரத்தின் குணம்.

அதிகமாய்ச்சுரங்காயும் உடல் நடுங்கும் மூச்சு மெத்த அதிகரிக்கும் உதிரம் வற்றி உடல் வெழுத்துருகிக்கருகும் மூர்ச்சைகாணும் ரோமங்கள் சிலிர்க்கும்.

அஸ்திசுரத்தின் குணம்.

அனல்போல் வெதும்பும் முலையுண்ணாது பதறிக்கலங்கும் உளையும் வெள்ளோங்காளமிகும் சத்திக்கும் நீர்சிவக்கும் சாமத்திற் சுரங்காயும் உடல்வற்றி யூதும் இருமல் சோகை கடுப்புக்காணும்.

வாதசுரத்தின் குணம்.

உடல்கடுக்கும் சந்துபொருத்துகள் உளையும் இருவிலாவும்நோகும் தலைவலிக்கும் உடல் குளிர்ந்து நடுங்கி மயிர்சிலிர்த்துச் சுரந்தோன்றும் கவங்

கட்டும் பசிமந்திக்கும் வாய்துவர்க்கும் இளைக்கும் இரண்டுகாலும் குளிர்ந்திருக்கும் முகம் வாய் கண் மலங்கறுக்கும் இரவும் பகலும் நித்திரைவராது தாகம் அசதி கொட்டாவி இவையுண்டாகும்.

பித்தசுரத்தின் குணம்.

கொரேமாய்ச்சுரங்காணும் புலம்பல்காணும் பிதற்றும் நெஞ்செரிக்கும் கிறுகிறுக்கும் சத்திக்கும் ஆயாசங்காணும் இன்னும்வேறுசில குணங்களுமுண்டாகும்.

சிலேற்பனசுரத்தின் குணம.

தேகத்தில் அனல்மிகுந்து திமிரேறிச்சிரசில் நீர்க்கொண்டு தலைவலிக்கும் உடம்பு உழைந்து தடித்துச் சுரங்காயும் மூக்கில் நீர்வடியும் சத்தம்பிறக்க இருமலுண்டாகும் கோழைவரும் நெஞ்சுவலிக்கும் மயக்கங்காணும் கண்ணும் நாசியும் காந்தம்விட்டுவிட்டுச்சுறங்காயும் சிரசில் வெயர்வைபொழியும் கர்த்தவத்தின் நீர்போலிறங்கும் மலந்தீயும் நாத்தடிக்கும் வெளுக்கும் அடிக்கடி இனிப்புக்கசப்புண்டாகும் வாய் நீரூறும் உடல் கண் வெளுக்கும் கவம்மிகும் மலம் வெளுத்திறங்கும்.

அசீரணசுரத்தின் குணம்.

காய்ச்சல்காயும் வயுறுபொருமிக்கழியும் வலிக்கும் வாங்வு மிகப்பறியும் அடிக்கடி புளித்தேப்பம் கொட்டாவி விக்கல்காணும் நாவுலரும் கசக்கும் உடல்நோகும் குரல்கம்மும்.

கிரந்திச்சுரத்தின் குணம்.

சுரம் தோய்வு இருமல் இவைமுதலியவை தோற்றும்.

முறைக்காச்சலின் குணம்.

இதுதொடங்கும்பொழுது தலையிடியிருக்கும் கைகால்குளிரும் நடுக்கமுண்டாகும்கொஞ்சவேளையாற் சரீரம் சூடாய்விடும் தாகமிகும் பின்புவெயர்வுகொண்டு காச்சல்விடும்.

விடாச்சுரத்தின் குணம்.

இது மலச்சிக்கலாலும் குடலழற்சியாலும் உற்பத்தியாகிறது வெய்யில் அல்லது குளிர்படுதலினாலும் இந்நோய் உண்டாகிறது மேற்படி தலைக்னகம் குளிர் ஆயாசம் உண்டாகி சொற்பகாய்ச்சலிருக்கும் சாயந்திரத்தில் காய்ச்சல் அதிகப்படும் இரவில் வெயர்க்கும் விடியக்காய்ச்சல் சொற்பமாகத்தணியும் மலவறட்சி அல்லது சழிச்சலிருக்கும் அதிற் சிலவேளை சீதஞ்சேர்ந்து புளிப்புமணங்கொள்ளும் மலம் வெண்மை கருமை பச்சையெனப் பலமாதிரியாய்மாறும் வயிறு பொருமும் சிலசமயம் விபாதிநெடுகும் நாவெடித்தல் செம்மண்நிறமாய்மலம் சழிதல் அல்லது இரத்தமாய்க்கழிதல் முதலியகுணங்கள் பலவுண்டென்பதைக் காட்டும் முகம் வாக்குக் கண்வலி மூச்சு கொதி கடுமையான வயிற்றுக்கழிச்சல் தலையிலதிக சூடு முதலிய குணங்கள் தோற்றுவது கஷ்டசாத்தியம்.

அவியல்சுறத்தின் குணம்.

காய்ச்சல் இருமல் வயிறவியல் ஆயாசம் அடிக்கடி மயக்கம் இவை காணும்.

சுரவகைகள்—பதினைந்து (15)

சன்னிவகைகளின் குணங்கள்.

மாந்த சன்னிக்குணம்.

மாந்தத்தின்பேரிற் சன்னி தோன்றி சுரம்மயக்கம் தாகங்காணும் நாக்கு முள்ப்போலிருக்கும் கண்தாழும் புத்திகலங்கும்.

ஆம சன்னியின் குணம்.

குழந்தை முலையுண்ணுதமும் கண் விழியாது மயங்கும் முகம் வேறுபடும் பற்பலவலியுண்டாகும் குரல்கம்மும் மலங்கட்டும் சுரங்காயும் தாகிக்கும் வயிறூதும் நெற்றிசுளிக்கும் மயக்கங்காணும்.

கோராம சன்னியின் குணம்.

வாய்வுமிகும் உடம்பு தீபோற்காயும் சதைகளுலுங்கி வலிக்கும் விழி கால் கைகள் பதைக்கும் வாதநீர் பாதத்திலிறங்கும்.

தாந்திரிக சன்னியின் குணம்.

குழந்தை முலையுண்ணாது சுரம்காணும் தாகிக்கும் மேனி பதைக்கும் அரைகுளிர்ந்திருக்கும் மூர்ச்சைகாணும்.

அந்தகசன்னியின் குணம்.

அகோரமாய்ச் சுரங்காயும் உடம்பு விறைக்கும் வாய்நீர்வடியும் விக்கல் உவாந்தி இருமல் தாகம் பிரமை பிரதாபம் வீக்கம் நடுக்கம் மாருட்டங்காணும் தலைநடுங்கும் சிமிட்டும் வயிறெரியும் பிதற்றும் பலநினைவுண்டாக்கும் இந் நோய் பத்துத்தினத்தில் அசாத்தியமாய்முடியும்.

வலிகள்வருவதற்குக் காரணம்.

பாலர்களின் போசனபதார்த்தங்களினால் மந்தமதிகரித்து பலவிதவலிப்பு மயக்கம் இசிவு பற்களை நெறநெறனக்கடித்தல் பற்கிட்டல் இவைமுதலிய ரோகங்கள்காணும் அன்னந் தண்ணீர் செல்லாது.

சன்னிவகைகள்—ஐந்து (5)

சோகை காமாலை இவைகளின் குணங்கள்.

வாதசோகையின் குணம்.

சோகைநோய் தோற்றும்பொழுது சுரங்காயும் தாகமதிகப்படும் சிரசில் நீர்கொண்டு தலைவலி களைப்புச் சோகம் கைகால் அசதிகாணும் தேகந் தடிக்கும் உதடுவெளுத்து வெடிக்கும் முகம் வேறுபடும் பசிமந்திக்கும் மூலத்திற் கடுப்புக்காணும்.

பித்தசோகைக்காமாலையின் குணம்.

பித்தநீரதிகரித்துச் சரீரமுழுதும் மஞ்சள் வர்ணமாகத்தோற்றும் வெளுத்து களைப்பு அசதிகாணும்

ஊதுகாமாலையின் குணம்.

முகம் கால் அதைக்கும் பசித்தவுடன் மந்திக்கும் சுரம் காதடைப்பு இளைப்புக்காணும் நாப்புண்ணாகும் கைகால் சோரும்.

மஞ்சள்க் காமாலையின் குணம்.

உடல் இரத்தம் வற்றி வெதும்பிக் குளுப்பைபாய்ந்து முகங்கால் வீங்கும் மலம்சிக்கும் மஞ்சள்போல் நீரிறங்கும் கண் வெளுத்திருக்கும்.

வறட்காமாலையின் குணம்.

கண்பழுத்திருக்கும் கால்களோயும் உடம்புலரும் தாகமிகும்.

காமாலைவகைகள்—ஐந்து (5)

வைசூரிவகைகளின் குணங்கள்.

பனைமுகரி அம்மையின் குணம்.

காய்ச்சல் அதிகமாய்க்காய்ந்து உடல் கடுக்கும் கண்சிவக்கும் கண்டம் வீங்கும் உதரகொதிப்புக்காணும் பிதற்றல் சன்னிதோன்றும்.

பால் அம்மையின் குணம்.

அகோரமாய்க் காச்சலடிக்கும் மூன்றுநாளிரவில் சிரசின்மேலம்மை தோன்றி உடம்பு கடுக்கடுக்கும் 4 நாளில் நீர்கோத்து 9 நாள் இறங்கும் 15 16 நாளில் ஆரோக்கிய ஸ்நானஞ்செய்யவும்.

வரகுதிரி அம்மையின் குணம்.

காச்சல் அதிகமாய்க்காய்ந்து 3 நாளில் சிரசிலம்மைதோன்றும் வாயால் இரத்தம்விழும் 7ம் நாளில் நீர்கட்டி 11 நாளில் இறங்கும் நீர்த்தாரையில் இரத்தங்காணும்.

கொள் அம்மையின் குணம்.

காச்சல், பிதற்றல், சன்னி, வலிப்புத்தோன்றி 3 நாளில் சிரசிலம்மைத் தோன்றி 13 நாளில் இறங்கும்.

கல் உதிரி அம்மையின் குணம்.

அகோரமான காச்சல் உவார்திபேதி இவைகள்கண்டு 3ம் நாளிற சிரசில் அம்மை தோன்றி 7ம் நாளில் இறங்கும் பழம்போல நீர்கட்டி 10 நாளில் இறங்கும் 11ம் நாள் ஸ்நானஞ்செய்யவும்.

கடுகு அம்மையின் குணம்.

காச்சலடித்த 3 நாளில் சிரசிற கடுகுபோலம்மை தோன்றி உடம்பெல்லாமதிகமாய் வலிக்கும் தொண்டைகட்டும் குரல்கம்மும் பேதிகாணும்.

மெழுக்கள் அம்மையின் குணம்.

காச்சல் மட்டாயக்காயும தேகமெல்லாங்கடுக்கும் இடுப்பு வழங்காது சரீரம்வீங்கும் காந்தல் காணும் 7 நாளில் அம்மை தோன்றும் பரிகாரஞ் செய்யக்குணமாகும்.

உப்புதிரியம்மையின் குணம்.

காச்சல் கண்டு 3 நாளில் சிரசில் அம்மை தோன்றி உடம்பெல்லாம் உப்புப்பூத்ததுபோலிருக்கும். 5 நாளில் நீர்கட்டி 7 நாளில் இறங்கும் 11 நாளில் ஸ்நானஞ்செய்து ஔடதங்கொடுக்கவும்.

கரும்பனசை அம்மையின் குணம்.

காச்சல் அடித்தநாலாம்நாளில் சிரசில் அம்மைதோன்றும் உடம்பெல்லாப்குத்தும் கருக்கும் வைசூரியுள்ளேவாஙகும்பேதி மூர்ச்சைகாணும் மலம் கட்டினால் 13 நாளில் இறங்கும் உடம்பெல்லாம் விரிந்து ரணமாகி கிருமி யுண்டாகும் பிரக்கினையற்று சுவாசம் மேல்நோக்கும் 21 நாள் சென்றால் ஸ்நானஞ்செய்து ஔடதம் கொடுக்கவும் இது அசாத்தியம்.

வெர்தய அம்மையின் குணம்.

காச்சலடித்து 3 நாளில சிரசில் அம்மைதோன்றி 7 நாளில் நீர்கட்டி 9 நாளில் இறங்கும் 15 நாளால் ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யவும்.

பாசிப்பயற்றம்மையின் குணம்.

காச்சலும் பிதற்றலுமுண்டாகி 2 நாள் சிரசில் அம்மை தோன்றும் 7ம் நாள் நீர்கட்டி 9ம் நாள் ஸ்நானஞ்செய்து சரீரம் பெலக்க நீர்மோரசனம் கொள்ளவும்.

விச்சுருப்பன் அம்மையின் குணம்.

காச்சலடிக்கும கண்சிவக்கும் உவாந்தி பேதிகாணும் 3 நாள் சிரசில் அம்மை தோன்றி தேகமெல்லாம் உமிபோல் வாரியிட்டு மறையும் 7ம் நாள் ஸ்நானஞ்செய்யவும்.

நீர்க்குளுவான் அம்மையின் குணம்.

காச்சலடித்து 3 நாள் இயங்கம் பழம்போற் தோன்றும் 7 நாளில் இறங்கும் 9ம் நாளில் ஸ்நானஞ்செய்து தேகத்தைக் குளிர்ச்சியாக்கவும்.

தவளை அம்மையின் குணம்.

காச்சல்கண்டு நடக்கவொட்டாது சூலையைப்போல் வலிக்கும் அன்னஞ் செல்லாது 6ம் நாள் சிரசில் அம்மை தோன்றி 9ம் நாள் இறங்கும் 11ம் நாளில் ஸ்நானஞ்செய்யவும்.

சின்னம்மை அல்லது சின்ன முத்துவின் குணம்.

இதில் முதற் குணங்கள் சலத்தோஷம் போலிருக்கும் இருமலும் தும்மலும் சுரத்தின் பொதுக்குணங்களுமிருக்கும் மிகுதியாய் 4 நாளில் தெள்ளுக்கடிபோன்ற வட்டித்த நுண்ணிய சிவப்படைந்த புள்ளிகள் முதல் முகத்திலும் கழுத்திலும் கைகளிலும் திரும்பச் சரீரத்திலும் மற்ற உறுப்புகளிலுமுண்டாகும் பருக்கள் கூட்டங்களாயிருக்கும் இது உண்டான ஒழுங்கின்படியே மேலே நின்று கீழே வரவர மடியத்தொடங்கி நிறம்மிகுதியாய் 6 நாளில் 7 நாளில் மறைந்துவிடும் திரும்ப அசறாய்ச்சொரியும்.

கொப்பிளிப்பானின் குணம்.

இது சொற்ப காச்சலுடன் துவங்கி ஒரு நாளைச்குநின்று பின் வைசூரிப் பருக்களைப்போன்ற நுண்ணிய சிவத்தப்பருக்கள், முதலிற் கைகளிலும் முதுகிலும் உண்டாகும் 2ம் நாள் தெளிந்த நீர்கொண்டு சிறுகொப்பழமாகும் 3ம் நாளிற் கொப்பழங்கள் பழுத்துத்தகர்த்து நீர்பாய்ந்து அசறுபிடிக்கும் சீழ் கொள்ளாது 5ம் நாளின்பின் கொப்பழங்கள் மடிந்துபோகும் நிலையான தழும்புகளிராது.

கொப்பிளிப்பானுக்கும், அம்மைக்குமுரிய வித்தியாசங்கள்.

கொப்பிளிப்பான்காச்சல் மிகச்சொற்பமாயிருக்கும் பருக்கள்மார்பிலும் முதுகிலுமுண்டுபடும் கொப்பழங்கள் காச்சலுண்டாகி 6 மணிதுவக்கி 12 மணிக்குள்ளாக உண்டாகும். கொப்பழத்தினடுவிற் பதிவிராது சிதலாய் மாறுவதில்லை. 3 நாள் அல்லது 4 நாளிற்தகரும்.

வைசூரி கருமையாயிருக்கும். முகத்திலும், சரீரத்திலும், மற்ற உறுப்புகளிலுமுண்டுபடும். 2 நாள் அல்லது 3 நாள்களிலுமுண்டுபடும். கொப்பழத்தின்னடுவிற் பதிவிருக்கும், சிதலாய்மாறும். 8 நாள் அல்லது 9 நாளிற் கருகும்.

கைக்கட்டின் குணம்.

சொற்பகாச்சல்கண்டுபிற்பாடு, காதடியில் அதைப்பும் வாய்திறக்கமுடி

யாது கண்ட்டமாகும். வீக்கம் படிப்படியாய் பரக்கும். 4 நாளில் அமரத்துவல்லும் இந்நோய் பெரும்பாலும் ஒருபக்கத்தில்வரும். பிற்பாடு மற்றப்பக்கத்திலும் தாவும் இது தொற்றுவியாதி யெனப்படும்.

ஆக்கரத்தின் குணம்.

இதுசீரணியாப்பிசகுடனும், பெலயீனத்துடனுந்துவக்கும். வாய்சிவந்து தடித்த தயிராடைத்துண்டுமாதிரியான ஆடைபிடித்திருக்கும். இவ்வாடையுதடுகளிலும், கதிர்ப்புகளிலும், நாக்கிலும், அதிகமாய்ப்பிடித்திருக்கும். இவ்வசறுகளையுடைத்தால் இரத்தம்பாயும்.

தடிமனின் குணம்.

நாசியுள்சவ்வு வீங்கியுரப்புக்கொண்டு காய்ச்சல்போலிருக்கும். பிள்ளை சுவாசிக்கவில்லாதகப்பட்டு வாயாலே சுவாசிக்கும் துவக்கத்தில், நாசியிலிருந்து மெல்லியநீரும், பின்பு தடித்தசளியும்வரும். நீர்வடியும், தும்மலிருக்கும் இரைச்சல்சத்தம்போற் சுவாசிக்கும் இவ்வியாதி இரண்டு மூன்று நாட்களில் சவுக்கியப்படும் அல்லது தொண்டைப்புண், இருமல், முதலியவைகளாய் மாறும்.

காதுக்குத்தின் குணம்.

இதுசடுதியாய் அல்லது காதிலே கட்டுண்டாய்த்தோற்றும். சிலவேளை பற்கொதியுடன் சம்மந்தப்பட்டிருக்கும். அவ்வேளையிற் பற்கொதியை முதல் மாற்றவேண்டும். வேறுகுளிர்படுவதினாலும், காதிற்குள் அழுக்கடைவதினாலும், காதிற்பூச்சிபறப்பதினாலும், பல்முளைக்கும்போதும், இந்நோயுண்டாகும்.

இருமலின் குணம்.

சொற்பகாச்சல், மூச்சுமுட்டு, நெஞ்சில் சத்தமிருக்கும். அடிக்கடி இருமும்.

கண்ணோயின் குணம்.

கண்ணின்வெள்ளைமுளிசிவந்து சொற்பமாய் நீர்வடியும். திரும்ப கண்ணில் அதிகப்பீழைசாறிப்பிடிக்கும் பிள்ளைபேசக்கூடுமாகில் கண்ணில் மண்ணுருட்டுவதுபோன்ற வுணர்ச்சியிருக்கிறதென்று சொல்லும். இந்நோய் குளிரினாலும், தொற்றினாலும், உண்டாகிறது.

உடற்கிருமியின் குணம்.

நாக்குழிப்பாம்புபோல் நாலு அங்குலந்தொடக்கம் 12 அங்குலம்வரைக்கும் நீளமுள்ளதாயிருக்கும். இன்னொருவகை கடைக்குடலிலுண்டாகிறது நூலைப்போல் ஏறக்குறைய ஒரு அங்குல நீளமுள்ளதாகவிருக்கும். கீரைப்பாம்பு வழர்ந்தவர்களிலும்பார்க்க பிள்ளைகளிலே மிகுதியுண்டு.

செரியாமைக் குணம்.

சத்தி, களிச்சல், ஆயாசமுமிருக்கும் பிள்ளை இராப்பகலாயழும் வயிற்றுக்குத்து செமியாத சாப்பாட்டிலிருந்து வாய்வு பொருமுதலாலுண்டாகும் முலையுண்ணாது நாவுலரும் சீதமாய்க்கெட்ட பால்போலும் தெளிந்த தண்ணீர்போலும்களியும்.

காய்ச்சல்க்கட்டியின் குணம்.

இது முறைக்காய்ச்சல் வழக்கமாயுண்டாவதினால் கட்டியதிகமாய்ப்பழுத்துநோகும் முட்டுத்தொய்வும் முகம்வெழுறுதலும் சரீரமெலிவுமுண்டாகும் காய்ச்சல் இடைக்கிடைகாயும்.

வெள்ளைபடுதலின் குணம்.

மெலிந்த பெண்பிள்ளைகளின் பிரதானமாய் வெளிறினபெல்லிய கணையுள்ளவர்களுக்கு தயிரைப்போன்றநிறமானநீர் நிதம்பத்திலிருந்துவடியும்.

வயிற்றுளைவின் குணம்.

இது சிலவேளை சடுதியாயும் சிலவேளை கழிச்சல்கண்டு துவங்கும் ஒரு நாளில் 10 அல்லது 15 முறைகழியும் முதல் மலமாய்க்கழியும் திரும்ப வெண்மையாக இரத்தமும் சீதமும் கலந்ததுபோல வயிற்றைமுறுக்கும்.

செங்கண்மாரியின் குணம்.

சலம்விடும்போது சீலையில் மஞ்சள்வர்ணம்போலத்தோன்றும் தோலும் கண்ணும் மஞ்சள்நிறமாயிருக்கும் மலம் வெண்மையாயிருக்கும் சிலவேளைகளில் பிள்ளைபிறந்த இரண்டொருநாட்களாய் செங்கண்மாரிதொடங்கி இரண்டொரு கிழமையால்மாறியும்போகும் வளர்ந்த பிள்ளைகளுக்குண்டாகும் பொழுது சொற்பகாய்ச்சல், உவாந்தி, தலையிடி, முதலியகுணங்களுண்டாகும் பிள்ளைகளுக்குச்சிலசமயம் வயிற்றுழைவு வெப்பமுண்டாகும்.

குக்கலின் குணம்.

இது சலதோஷத்தின்குணங்கள்கண்டபின் உண்டாகும் இருமல், பாட்டப்பாட்டமாய்வந்து நெடுநேரத்திற்குநின்று திக்குமுக்கடைக்கப்பண்ணும் இரவில் அதிகப்படும் இருமல்வரும்போது பிள்ளை அங்கலாய்த்து மாதாவைக்கட்டிப்பிடிக்கும் இருமும்பொழுது ஒருவித இழுப்புச்சத்தமிருக்கும். உவாந்திக்கும் சிலவேளைவியாதி 2 கிழமைதுவக்கி 3 மாசவரைக்குமிருக்கும்.

தொய்வின் குணம்.

தூக்கமும் பசியின்மையும் மூச்சுவிடத்தடங்கப்படுதலும் நெஞ்சில் இரைப்பும் சத்தத்துடன்வறட்சியான இருமலுமிருக்கும் சரீரத்தை முன்னுக்குவளைத்துத்திக்குமுக்கடையத்தக்க ஏக்கமுமிருக்கும் இந்நோய் இரவில்முற்பகுதியிற் தொடங்கும் இக்குணக்கள்காலமேகுறைந்து இழகியநுரைச்சளிபோகும் அப்பொழுது மூச்சுவிடலேசாய்க்குழந்தை நித்திரைசெய்யும்.

வாதத்தின் குணம்.

காய்ச்சலிராது உடம்புநோய் சொற்பமாயிருக்கும் பொருத்துகளிலும் பார்க்கநோ தசைகளில்மிகுதிபற்றியுண்டாகும். வெயர்வை சடுதியிற் தடைபடுதலும் குளிர்படுதலுமே இந்நோய்க்குக் காரணமாகும்.

வேறு சோர்வாதத்தின் குணம்.

பிள்ளைகளுக்குப்பெரும்பாலும் இந்நோய் 6 மாசந்துவங்கி 3 வயதிற்கிடையில் சடுதியிலுண்டாகும் சிலவேளைசொற்பகாய்ச்சலுடனும் வலியுடனுமுண்டாகும் நெடுநாட்பட்ட மலக்கட்டினாலும் பெலவீனத்தினாலும் அல்லது

குளிர்படுவதினாலும் இந்நோயுண்டாகும்.

படர்தேமலின் குணம்.

தோலில்வட்டிப்பாய்ச் சிறு பருக்களுண்டாகி உரிந்து அசறுகிச்செதிள்த் தன்மைபோலாகிப்போகும் இது தொற்றுநோய்.

கணைநோயின் குணம்.

இது எலும்பைப்பற்றியநோய் தாயின்பாலைப்புசியாது பிறவாகாரங் களைப்புசித்து வளர்ந்துவருகிறபிள்ளைகளிடம் பத்துநாள் இந்நோய்சாதாரண மாய்க் காணப்படுகிறது பிள்ளைபிறந்த 6 மாசந்துவக்கி 18 மாசத்திற் குள்ளாகத்தான் கணைரோகந்தோன்றுகிறது.

வலியின் குணம்.

பல்முளைக்கும்போது அசீரணம் மலக்கட்டு கிருமி முதலியகாரணத்தின லும் இந்நோயுண்டாகும் சிலவேளைகாய்ச்சல் முதலிய வேறுநோய்கள் உண் டாகிறபொழுது கரப்பன் சடுதியில்மாறினாலும் தலையிலேதும் விழுந்தாலும் இந்நோயுண்டாகும் பெரும்பாலும் வலிதொடர இரண்டொரு நாளைக்குமுன் பிள்ளைநித்திரையில் ஆறுதலற்று அரைக்கண்மூடியிருக்கும் முகத்தைச்சுளி த்து பல் இறுமும் திடுக்கிடும் இவ்வியாதி உண்டாகுபபோது கைவிரல்கள் பொத்தப்பட்டிருக்கும் முகம்வெளிறும் பற்கடித்தலும் ஏதுமொரு அவயவத் தின் தசைதுடித்தலும் உதட்டில் நுரையிருக்கும் வெயர்க்கும் சுவாசம்சொற்ப அளவிற்குத்தடைபடும் நாக்கு நீண்டிருக்கும் வலியாறியபின் சுவாசம்லேசாய் பிள்ளை அழுதுநித்திரைகொள்ளும். ஒருமுறைவலிவந்து நின்றுவிடும் அல் லது மென்மேலுமுண்டாகும்.

வீக்கத்தின் குணம்.

பெரும்பாலும் முறைக்காய்ச்சல்வந்தபின் அல்லது வயிற்றுக்கழிச்சல் வந்தபின் உண்டாகும் அதிகமாய்வளியசனங்களுக்கே இவ்வியாதியுண்டாகிறது முகம் வெளிறிக்கண்ணிமையும் வயிறும் அவயவங்களும்வீங்கி இரத்தாசயத் துடிப்புமுதலியகுணங்களிருக்கும்.

பாலரோக ஔஷதங்கள்.

செங்கிரந்தி.

இதற்குகோரோசனைமாத்திரை, கோரோசனைகளஞ்சு (இ) குங்குமப்பூ, களஞ்சு (வ) கஸ்தூரிகளஞ்சு, அரைக்கால் இவைகளை முலைப்பாலில் ஒருசாமமரைத்துக்குன்றிபோல் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி ஒவ்வொருமாத்திரை முலைப்பாலிலுரைத்துக்கொடுக்கவும்.

மேற்படி புங்கவேர்த் தயிலம்.

புங்கம்வேர், ஆடாதோடைவேர், நாய்வேளைவேர், இயங்கம்வேர் வகைக்கொருபிடி, வசம்பு, உள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், வெளுத்தற்பிசின், கடுக்காய்த்தோல், பொடுதலைக்காய் கஸ்தூரிமஞ்சள் வகைக்குகளஞ்சு மூன்றுவேர்வகைகளையும் சரக்குவகைகள்யாவற்றையும் நறுக்கிக்காயவைத்து இடித்து மாவாக்கிவைத்துக்கொண்டு, ஆமணக்கெண்ணை படி ஒன்று, பீச்சுவிளாத்திச்சாறு படி ஒன்று, ஈரவெங்காயச்சாறு படி (வ) இச்சாறுகளையும் எண்ணையுடன்கலந்து சூரணத்தையும் போட்டுக்கலக்கிச் சூரியபிடம்வைத்து உடம் பிற்பூச இந்நோய் தீரும்.

கருங் கிரந்தி.

இதற்குபரிகாரம். கழுதைப்பாலில் ஒருகாசு இடை ஓணான் இரத்தம் விட்டுக்கலந்து கொடுக்கவும்.

மேற்படி ஏரண்டத்தைலம்.

முத்தாமணக்கெண்ணெ படி அரைக்காலில் சாறணைவேர், முடக்கத்தான் வேர், செப்புநெரிஞ்சுவேர், முத்தெருக்கஞ்செவிவேர், ஓரிதழ்த்தாமரை சமூலம் ஈரவெங்காயம், மயிலிறகு, சுட்டசாய்பல் வகைக்குக்களஞ்சு (க) நறுக்கிக் காயவைத்து மாவாக்கி எண்ணெயிற்போட்டுக்காய்ச்சி தேய்க் கரண்டிவீதம் உள்ளுக்குக்கொடுக்கவும். மேற்படி செங்கிரந்திக்கு உடம்பிற் பூசுந்தைலத்தையும் பூசவும்.

பட்சி தோஷம்.

(சூரியபுடத் தைலம்.)

முத்தாமணக்கெண்ணெ படி அரைக்காலில் மணித்தக்காளிவேர், பிச்சிவேர், ஈரவெங்காயம் இவைகளை இடித்து எண்ணெயிற்போட்டு வெய்யிலில் வைத்து தேய்க்கரண்டியளவு உள்ளுக்குக்கொடுத்துத் தலைக்குவைக்கவும்.

பறவைத் தோஷம்.

இற்குப்பரிகாரம்—நற்சீரகப், ஈரவெண்காயம், வாட்பூலாவேர், இவைகளைச்சமமாக எடுத்துக்கஷாயம்செய்து தேய்க்கரண்டிவீதம்கொடுக்கவும்.

எட்சி தோஷம்.

இதற்குப்பரிகாரம்—நற்சீரகம், வில்வமிலை, இவை சமமாக எடுத்து கஷாயம்செய்து தேய்க்கரண்டி வீதக்கொடுக்கவும். மேற்படி வில்வமிலையை யவித்துக்குளிப்பாட்டவும்.

வீங்குபுள்ளின் தோஷம்.

அதிமதர மாத்திரை.

இதற்குப்பரிகாரம்:—அதிமதூரம், கோரைக்கிழங்கு, அதிவிடயம், கடுக்காய்த்தோல், வசும்பு, தேவதாரம், மஞ்சள், வகைக்குக்களஞ்சு (க) இவைகளை, இடித்து மாவாக்கி பொடுதலைச்சாற்றால் ஒருசாமமரைத்து குன்றிபோல் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி ஒருமாத்திரை காலை மாலை முலைப்பாலில் கொடுக்கவும.

தூங்குபுள்ளின் தோஷம்.

இதற்குப் பரிகாரம்:—மஞ்சள், வசம்பு, ஏலம், வேம்பங்கூர், அசும தாகம், குட்டிவிளா, வகைக்குக் களஞ்சு (க) நறுக்கிக் கஷாயம்செய்து தேய்க்கறண்டிவீதம் எடுத்து கோரோசனைகலந்து உள்ளுக்குக்கொடுக்கவும்.

மேற்படி இம்மருந்துகளையரைத்து உடம்பிற்பூசிக் குளிப்பாட்டவும்.

விளக்கொளிக்கண்புள்ளின் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—சிறுசின்னி, வசம்பு, குட்டிவிளா இவைகளை சமன் எடுத்தரைத்துக் குளந்தையின் உடம்பிற்தேய்த்து முளுக்காட்டி இம்மருந் தைத் துணியில் முடிந்து கையிலும் கழுத்திலுங்கட்டவும்.

வெங்கண்புள்ளின் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—பிள்ளைக்கற்றுளஞ் சோற்றில் கடுக்காய்த்தோலி டித்ததூள் தூவிப்பிசைந்துவைக்க நீரூறும் அந்நீரில் ஒரு தேய்க்கரண்டி எடு த்து அரிசித்திற்பிலியை வறுத்துத் தூள்செய்து ஒருபேன்பிடிபோட்டுக் கல ந்து கொடுக்கவும்.

கருடக்கண்புள்ளின் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—கோரோசனை, அதிமதூரம், அரிசித்திப்பிலி ஓாள வாய் எடுத்து முலைப்பாலிலரைத்து அப்பாலில்கலைத்து ஒரு தேய்க்கறண்டி யளவு கொடுக்கவும்.

செங்கண்புள்ளின் தோஷம்.

வரண்டசஞ்சீவித் தைலம்.

முத்தாமணக்கெண்ணெய்ப்படி (இ) அதிமதூரம், நற்சீரகம், கோரைக் கிழங்கு, ஏலரிசி, வசுவாசி, சாதிக்காய், கிராம்பு, செண்பகப்பூ, இலவங்கப் பட்டை, வகைக்குக்களஞ்சு (வ) மொசுமொசுக்கையிலைச்சாறு, பொன்னாங்

சாணிச்சாறு, சிறுகீரைச்சாறு, சீந்தில்தண்டுச்சாறு, ஈரவெங்காயச்சாறு இவை வகைக்குப்படி அரைக்கால் ஆவிரைவேர்களஞ்சு (உ) சாக்கையும் வேரையும் இடித்து மாவாக்கி சாறுகளிலரைத்துக்கரைத்து எண்ணெயுடன் கலந்து பதத்திற்காச்சி காலை மாலை தேய்க்கறண்டிவீதங்கொடுக்கவும்.

அந்திப்புள்ளின் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—சிறுசின்னி, குட்டிவிழா, நொச்சி, சீந்தில், வேம்பு, வசம்பு, உள்ளி, இவைகளை ஓரளவாய் எடுத்து அரைத்து உடம்பிலும் பூசி மேற்படி மருந்துகளைத்தட்டி சிறுபொட்டணமாய்க்கட்டிக் கண்டத்திலுங் காலிலுங்கட்டவும்.

நீர்ப்புள்ளின் தோஷம்.

இதற்குப்ரிகாரம்:—நற்சீரகம், விஷ்ணுகிராந்தி சமூலம் இவைசமன் கூட்டி கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

புள்ளின் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—ஓரிதழ்தாமரைசமூலம், வெந்தயம், விடத்தல் வேர், சுக்கு, வால்மிளகு இவைசமனெடுத்து ஒன்றுபடக்கலந்து நறுக்கிக் கஷாயஞ்செய்துகொடுக்கத் தீரும்.

முட்டுத் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—சுக்கு, மிளகு, அரிசித்திற்பலி, நற்சீரகம் இவை சமனெடுத்துச் கஷாயஞ்செய்து அக்கஷாயத்தில் கோரோசனை யுரைத்துக் கொடுக்கவும்.

குளித் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—குட்டிவிழா, வேம்பு, பெருஞ்சீரகம், மஞ்சள், வசம்பு, சுக்கு, சித்தரத்தை இவை சமன் வாகை இலை பிடியொன்று இவைகளை நறுக்கி தண்ணீர்விட்டவித்துக் குளிப்பாட்டவும்—மேற்படி இதற்குப் (பொன்னுங்காணி நெய்), பொன்னுங்காணிச்சாறு படி (இ) நல்லெண்ணெய் படி (வ) பசுநெய் படி (இ) சாத்தாவாரிக்கிழங்குச்சாறு படி (வ) பசுப்பால்

படி (இ) நற்சீரகம், ஏலம், கரந்தைவேர் வகைக்குக்களஞ்சு (ந) இவைகளைப் பால்விட்டரைத்துக் கரைத்து பதமாய்க்காச்சி காலே மாலே தேய்க்கரண்டி வீதங்கொடுக்கவும்.

கெற்பமழிந்த தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—கழுதைலத்திச்சாற்றில் பருத்திவேரை யரைத்து அத்துடன் பனம்வெல்லமுஞ்சேர்த்துக்கலக்கி காலே மாலே தேய்க்கரண்டி வீதங்கொடுக்கவும்.

தேரைத் தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—சிறுபுள்ளடி, சிறுகீரை, நீராரை, பொன்னாங் காணி, நீர்முள்ளி, இவைசமூலம் கழா, காட்டுமல்லிகை, அவுரி, கையாந் தகரை, நிலக்குமிழ், முடக்கொத்தான், இவைகளின்வேர் ஓர்நிறையாய் இடித்து மூன்றுபடிதண்ணீர்போட்டு நாலிலொன்ருய்வற்றவைத்து வடித்து அக்கஷாயத்துடன் அதிமதுரம், அரிசித்திற்பிலி, மிளகு, வகைக்குக்களஞ்சு (உ) இவைகளை இடித்துமாவாக்கி பசுவின் பாலிவிட்டரைத்து அக்கஷாயத்திற் போட்டுக்கரைத்து, பசுவின்நெய் படி (வ) விட்டுப் பதமாய்க்காச்சி தேய்க் கரண்டி வீதங்கொடுக்கவும்.

சகலதோஷங்களுக்கும் பொது.

கோரைக்கிளங்கு மாத்திரை.

கோரைக்கிளங்கு அதிமதுரம், மஞ்சள், அதிவிடயம், வசம்பு, கடுக்காய்த் தோல், தேவதாரம் வகைக்குகளஞ்சு (க) இவைகளை இடித்து மாவாக்கி பொடுதலைச்சாற்ருல் ஒருசாமமரைத்து குன்றிபோல் மாத்திரைசெய்து நிழ லுலர்த்தி ஒருமாத்திரை காலே மாலே முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்கவும்.

வாத மாந்தம்.

(வாய்விளங்காதி மாத்திரை.)

இதற்கு:—வாய்விளங்கம், ஆமையோடு, மிளகு, பொடுதலைக்காய், வசம்பு, அரிசித்திற்பிலி, களற்சிப்பருப்பு வகைக்குக்களஞ்சு (க) இவைகளை இடித்து மாவாக்கி பொடுதலைச்சாற்றால் ஒருசாமமரைத்து தூதுளங்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை வழுதலைக் கஷாயத்தில் கொடுக்க இதற்கு மாந்தம், கழிச்சல், இருமல்தீரும் மேற்படி உத்தமாகாணிச் சாற்றில்கொடுக்க உவாந்தி, பொருமல் தீரும் இன்னும் ஓமக்கஷாயத்தில் கொடுக்க அதிகமாய் பேதிக்கிற மாந்தக்கழிச்சல்தீரும்.

பித்த மாந்தம்.

திரிகடுகு மாத்திரை.

இதற்கு:—சுக்கு, மிளகு, அரிசித்திற்பிலி, உள்ளி, ஓமம், பெருங்காயம், கருஞ்சீரகம் வகைக்குக்களஞ்சு மூன்று வசம்பு களஞ்சு (உவ) இரண்டேகால் கடுக்காய்த்தோல் களஞ்சு (கo) சாறணைவேர் களஞ்சு மூன்றேமுக்கால் இவைகளை இடித்து மாவாக்கி பொடுதலைக்கொழுந்து, பெருந்தும்பைக்கொழுந்து, உத்தமாகாணி இலை வகைக்குப் பிடி ஒன்று இவைகளை இடித்துச் சாறு பிழிந்து இச்சாற்றால் ஒருசாமமும் பெருந்தும்பைசாற்றால் ஒருசாமமும் பொடுதலைச்சாற்று லொருசாமமும் அரைத்து தூதுளங்காய்ப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை பாலர்களின் வயசுக்குத்தக்கபடி கால் அரை முக்கால் ஒன்று இந்த வீதம் வெந்நீரிற் கொடுக்கவும்.

கோரோசனை மாத்திரை.

இதற்கு:—கோரோசனை, செண்பகப்பூ, கோஷ்ட்டம், இலாம்பிச்சம் வேர், ஏலம், சாஸ்திரவேதி, அதிமதூரம், வெட்டிவேர், வகைக்குக்களஞ்சு (க) இடித்து மாவாக்கி வெட்டிவேர்க்கஷாயத்தில் அரைத்துத்துவரைப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை முலைப்பாலில் காலை மாலை கொடுக்கவும்.

ஊது மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—பொடுதலைக்கூர், வேப்பம்கூர், மாங்கூர், புளியம் கூர், மஞ்சவெண்ணுக்கூர், உத்தமாகணியிலைக்கூர் இவை யோரமழவெடுத்து இத்துடன் ஓமம், உள்ளி, திப்பிலி இவை சமன் சரக்குகளைநறுக்கி கூர்வகை களையும்சேர்த்துப் பொன்னிறமாகவறுத்து ஒருபடிதண்ணீரில் போட்டவித்து எட்டொன்ருகக் கஸாயம்செய்து தேய்கறண்டியழவுகொடுக்க ஊது மாந்தம், யோர மாந்தம், சத்தி மாந்தம், செரியா மாந்தம், கட்டு மாந்தம் இவை கள்யாவும்திரும். மேற்படி கோரோசனைமாத்திரை, கோரோசனைகளஞ்சு (இ) உள்ளி, அரிசித்திப்பிலி, அதிமதூரம் வகைக்குக்களஞ்சு (க) கோரோசனை பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை இடித்து கோழிமுட்டை வெள்ளைக் கருவாலரைத்து அரைத்தமுடிவில் கோரோசனையைப்போட்டு ஒன்றுபடச் சேர்த்தரைத்து குன்றிபோல்மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை முலைப்பாலில்கொடுக்கவும்.

நீர் மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—நொச்சி, தயிர்வேளை, குப்பைமேனி, மஞ்சவெண்ணு, பெருந்தும்பை, இவைகளின் இலை சமன் வெதிப்பிச்சாறுபுளிந்து அச்சாற்றில் மிளகு, உள்ளி, வசம்பு, ஓமம், இவைசமன் வறுத்திடித்து சூா

ணம்செய்து பேன்பிடி அல்லது வெருகடிசூரணம்போட்டுக்கலந்து தேய்க் கறண்டிவீதம்கொடுக்கவும். மேற்படி அவுரிவேர், செவ்வியம் ஓர்நிறையாய் தட்டிப்போட்டுக் கஷாயம்செய்துகொடுக்கவும்.

விஷ மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—மஞ்சவெண்ணு, நொச்சி, தயிர்வேளை இவைகளி ன் வேர், அசமதாகம், பொடுதலை, உள்ளி, வசம்பு இவையாவற்றையும் சம னாய்தட்டி வெதுப்பிக் கஷாயம்செய்து கறண்டிவீதம்கொடுக்கவும்.

போர் மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—ஓமத்தை பொன்னிறமாகவறுத்து சூரணஞ்செய் து பேன்பிடி அல்லது வெருகடி முலைப்பாலிலாவது அல்லது வென்னீரிலா வது கொடுக்கவும். மேற்படி உப்பை சட்டியில்வறுத்துக் கொட்டிப்போட்டு அதில் உத்தமாகாணி, தும்பை, வெற்றிலை இவைகளைச் சமனாய்வெதுப்பிச் சாறுபுளிந்து சட்டியிலிட்டு ஆமையோடும் வசம்புமுரைத்துக் கொடுக்கவும்.

பால் மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—மாம்பழக்கொட்டைப்பருப்பு, இந்துப்பூ, வசம்பு, உள்ளி, மிளகு இவைகள் வகை சமன் பொன்னிறமாய்வறுத்துக் கஷாயம் செய்துகொடுக்கவும்.

செரியா மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—வசம்பு, சடாமாஞ்சில், உள்ளி, சுக்கு, மிளகு, அருசித்திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், ஆமையோடு வகைசமன். இவைகளை பொடியாக்கிக் கஷாயம்செய்துகொடுக்கவும். மேற்படி உத்தமாகாணியிலை யை வதக்கிப்புளிந்து அதில் மிளகு, வசம்பு, உள்ளி இவைகளையுமரைத்து சாற்றில்கலக்கிப் பசுநெய் ஒருதுளி சேர்த்துக்கொடுக்கவும். மேற்படி ஓமம், கோஷ்டம், வசம்பு வகைக்குக்களஞ்சு முக்கால். இதுகளையுங்கஷாயஞ் செய்துகொடுக்கவும்.

கட்டு மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—சித்தகத்தி, துளசி, தகரை, களற்சியிலை, நொச்சி, செம்முள்ளி, மணித்தக்காளி இவையிலை சமனெடுத்து இடித்துப்பிளிந்த சாறு படி (வ) ஆமணக்கெண்ணை படி (வ) சாற்றையும் எண்ணையையும் ஒன்றுபடக்கலந்து இதில் கடுகுரோகணி, கடுக்காய்த்தோல், நற்சீரகம், கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு, பூதகரப்பன்பட்டை வகைக்குக்களஞ்சு (உ) இவைகளைச்சூரணஞ்செய்து எண்ணையில்போட்டுக்காச்சி ஒருகாசிடைகொடுக்கவும். மேற்படி சீந்தில்தண்டு, களிப்பாக்கு, சிவதைவேர், கடுக்காய்தோல், சுக்கு, கடுகுரோகணி இவைகளையோர் நிறையாய்தட்டிப்போட்டுக் கஷாயஞ்செய்து மூன்றுதினம்கொடுக்கவும்.

தலை மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—வெதுப்படக்கி, பெருந்தும்பை, உத்தமாகாணி, வெள்ளறுகு இவைகளின் இலையைக்கசக்கிச்சாறுபுளிந்து அதில் உள்ளி, தேசாவரம், சதகுப்பை, அரிசித்திப்பிலி, வசம்பு இவைகளை ஓர்நிறையாய்ச் சூரணஞ்செய்து சாற்றிற்போட்டுக்கலக்கி ஒருதேய்க்கரண்டியளவு உள்ளுக்குங்கொடுத்து உடம்பிலும்பூசவும்.

தலை மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—வெள்ளைக்காக்கணம்வேர் கொட்டைப்பாக்களவு எடுத்து முலைப்பால்விட்டரைத்து முலைப்பாலில்கொடுக்கவும். மேற்படி வசம்பு, தயிர்வேளை, முடக்கொத்தான், சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லி, தான்றி, கடுக்காய், இவைகளின்மேற்தோல் அளிஞ்சில்வேர் இவைகளெல்லாம் ஓரளவாய்ச்சூரணம்செய்து ஆமணக்கெண்ணை காற்படியில் போட்டுக்காய்ச்சி ஒருகாசிடை உள்ளுக்குக்கொடுத்து உடம்பிலும்பூசவும்.

சுளி மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—கோடகசாலை, சீதுளாய், ஆடாதோடை, முடிதும்பை, முதியாள்கூந்தல், இய்ங்கிலை, சீந்தில், நறுந்தாளி, சித்திலைச்செடி இவைகளின்சாறும் ஆமணக்கெண்ணையுஞ் சமன்கலந்து இதில் சாதிக்காய்

திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, உள்ளி வகைக்குக்களஞ்சு (க) சூரணஞ்செய்துபோட்டுக்காச்சி ஒருகரண்டிவீதம் கோரோசனை சேர்த்துக் கொடுக்கவும்.

வீக்க மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—இயங்கங்கிளங்கு, சீந்தில்தண்டு, சீதளாய், நீர்முள்ளி, பிரமி பூவரசமிலைப்பழுப்பு இவைசாறு வகைக்குப்படி கால், தூதுளை, சிறுகுறிஞ்சா, சாரணை இவைகளின்வேர் வகைக்குக்களஞ்சு (க) சுக்கு, ஓமம், சதகுப்பை, கருஞ்சீரகம் வகைக்குக்களஞ்சு (க) சரக்குகளையும், வேர்களையுமிடித்துச் சூரணஞ்செய்து மேற்சொல்லிய சாற்றில்போட்டுக்காச்சி முன்னேரம் பின்னேரம் தேய்க்கரண்டியளவுகொடுக்கவும்.

முக்கு மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—ஓமம், திப்பிலி, மிளகு, உள்ளி, ஆமையோடு, ஓர்நிறையாயெடுத்திடித்து சீலையில்முடிந்து ஒருபடிதண்ணீரில்போட்டு நாலொன்றுயக்காச்சி இக்கஷாயத்தில் முடிந்துபோட்டவித்தமருந்தை அரைத்துக் கலக்கி தேய்கரண்டியளவு மூன்றுநேரமல்லது ஆறுநேரம்கொடுக்கவும்.

வறள் மாந்தம்.

இதற்குப்பரிகாரம்:—ஆடுதின்னாப்பாலை, தயிர்வேளை, மணித்தக்காழி, சழற்சி, கையாந்தகரை, துளசி, அவுரி, இவைகளை யோரளவாயெடுத்து இடித்துச்சாறெடுத்துப் பசுநெய் படி யரைக்கால் விட்டுக்கலந்து இதில் கஸ்த்தூரிமஞ்சள் கோஸட்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்குகளஞ்சு (இ) சூரணமாக்கிப் போட்டுக்கலந்து பதமாய்க்காச்சி முன்னேரம் பின்னேரம் காசிடைகொடுக்கவும்.

உழை மாநதம்.

இதற்குப்பரிகாரம்:—பூநாகம், வசம்பு, வேப்பம்வேர், உள்ளி, பெருங்காயம், நல்லாய்ச்சுத்திசெய்து நேர்வாழம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளைப்பொடித்து நல்லெண்ணெயிற்போட்டு பதமாய்க்காச்சிவடித்து முன்னேரம், பின்னேரம் ஒருகாசிடைகொடுக்கவும்.

அட்சர மாந்தம்.

இதற்குப்பரிகாரம் :—மணித்தக்காளி அகத்தி, பிள்ளைக்கற்றாளை, ஈரவெங்காயம் இவைகளின்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி (க) காரை, புல்லாந்தி, அத்தி இவைகளின்வேர் வகைக்குக்களஞ்சு (அ) சூரணஞ்செய்து பொன்னிறமாய்வறுத்து வெந்தயங்களஞ்சு (அ) இவைகளைச் சாறுவிட்டரைத்து எண்ணெய்யுடன்கலந்து பதமாய்க்காச்சி தேய்க்கறண்டிவீதம் உள்ளுக்குங்கொடுத்து வாய்ப்புண்ணிலும்பூசவும்.

வாத கணம்.

இதற்குப்பரிகாரம் :—வில்வயிலை, நற்சீரகம், வெந்தயம், ஈரவெண்காயம் இவைகளை யோர்நிறையாய்வெதுப்பிக்கஷாயஞ்செய்து முன்னேரம், பின்னேரம் இருவேளை தேய்க்கறண்டிவீதங்கொடுக்கவும்.

மேற்படி சூரியபுடத் தைலம்.

பொன்னாங்காணிவேர், புளியிலைக்கூர், வேப்பங்கூர் வகைக்குப் பிடியொன்று, கோழியவரைவேர்களஞ்சு (௪) இவைகளைச் சூரணஞ்செய்து ஆமணக்கெண்ணெய் படி காலில் போட்டு சூரியபுடம்வைத்து ஒருதேய்க்கறண்டிவீதங் காலை மாலை கொடுக்கவும்.

பித்த கணம்.

ஏரண்டத் தைலம்.

ஆமணக்கெண்ணெய் படி அரைக்கால் இதிற் கடுக்காய்த்தோல், சருஞ்சீரகம், கடுகுரோகணி, காட்டுமல்லிகையிலை, ஈரவெண்காயம் வகைக்குக்

களஞ்சு (க) இவைகளைத்தட்டிப்போட்டுக்காச்சி காலை மாலை முலைப்பாலிற் கலந்து தேய்க்கரண்டிவீதங்கொடுக்கவும்.

சிலேற்பன கணம்.

சண்பகப்பூ நெய்.

சண்பகப்பூ, கோஷ்டம், கடுகுரோகணி, கிராம்பு, இலாம்பிச்சம்வேர், ஈரவெண்காயம், அவரிவேர், நிலக்குமிழ்வேர் வகைக்குக்களஞ்சு (க) சூரணமாக்கி பசுநெய் படி (அரைக்கால்) நல்லெண்ணெய் படி (அரைக்கால்) இவைகளில் சூரணத்தைப்போட்டுப் பதமாய்க்காச்சி முன்னேரம், பின்னேரம் தேய்க்கரண்டிவீதங்கொடுக்கவும்.

பால கணம்.

சண்பகப்பூ மாத்திரை.

சண்பகப்பூ, வால்மிளகு, உள்ளி, ஓமம், வசம்பு, கிராம்பு, வகைக்குக் களஞ்சு (க) இவைகளைப் பொடிதலைச்சாற்றால் நாலுசாமமரைத்து தூதுளங் காய்பிரமாணம் மாத்திரைசெய்து முன்னேரம், பின்னேரம் ஒருமாத்திரை நொச்சி, துளசி, மொசுமொசுக்கை இவையிலை வகைக்குப்பிடியொன்று இவைகளையிடித்து பிட்டவியல்செய்து சாறுபிழிந்து தேய்க்கரண்டியளவு சாற்றிலுரைத்துக்கொடுக்கவும்.

ஊது மாந்தகணம்.

செங்கழுநீர்க்கிழங்குத் தைலம்.

செங்கழுநீர்க்கிழங்கு, வெண்டாமரைக்கிழங்கு, செந்தாமரைக்கிழங்கு, ஓரிலைத்தாமரைக்கிழங்கு இவை வகைக்குச்சாறு படி (௨) மாதுளம்பழச்சாறு படி (௨) வல்லாரலிலைச்சாறு படி (௨) தேங்காய்ப்பால் படி (௨) ஆமணெக் கெண்ணெய் படி (க) இவைகள் யாவற்றையுமொன்றுபடக்கலந்து இதில் கண்டங்கத்திரிவேர், செங்கத்தாரிவேர், மாயாக்காய், கடுக்காய்த்தோல், அதி விடயம், வால்மிளகு, வசுவாசி வகைக்குக்களஞ்சு (௨) இவைகளைச் சூரணஞ் செய்துபோட்டுப் பதமாய்க்காச்சி வடித்துவைத்துக்கொண்டு முன்னேரம், பின்னேரம் தேய்க்கறண்டி வீதம்கொடுக்கவும்.

முலைகொடுக்கும்மாதர் உப்பு, புளி நீக்கவும்.

மாந்தநீர்க் கணம்.

கோரோசனை மாத்திரை.

கோரோசனை, அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம், சாத்திரவேதி, வெட்டி வேர், கோஷ்டம், மாசிபத்திரி, இலாம்பிச்சம்வேர் வகைக்குக்களஞ்சு (இ) இவைகளை முத்தாமணக்கமிலைச்சாற்றால் ஒருசாமமரைத்து குன்றியளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை காலை, மாலை, முலைப்பாலில் கொடுக்க மாந்தம் எட்டும் உடற்படுவன், நீர்படுவன், நீர்ப்பாடு, கெற்பப் பாடு, நாவரட்சி, சுரம், வெப்பு இவைகள்தீரும்.

சிங்கிமாந்தக் கணம்.

இலவங்கப்பூ மாத்திரை.

இலவங்கப்பூ, அதிமதுரப், கோஷ்டம், ஏலம், சாலதிரபேதி, சண்பகப் பூ, மாயாக்காய் வகைக்குக்களஞ்சு (உ) கோரோசனைகளஞ்சு (இ) வெட்டிவேர், மாசிபத்திரி, கருந்துளசி, இலாம்பிச்சம்வேர் வகைக்குக்களஞ்சு (உ) இவைகளைக்கஷாயஞ்செய்து முற்சாக்குகளில்விட்டு இரண்டுசாமமரைத்து குன்றிபோல்மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை யொருமாத்திரை மாசிபத்திரிகஷாயத்தில்கொடுக்கவும். மேற்படி இலவங்கப்பூக்கஷாயத்தில் கொடுக்க, மாந்தம், சுரம், உவாந்தி, மந்தம் இவைதீரும். இன்னும் முலைப் பாலில்கொடுக்க முலைப்படுவன், நீர்ப்பாடு, மாந்தம், கரப்பன், நாவரட்சி, வயிற்றெரிவு, சுரம், உப்பிசம், இருமல் இவைதீரும்.

நீர்க் கணம்.

இதற்குப்பரிகாரம்:—சாறணைக்காய், முக்குரட்டைக்காய், பொடுதலைக் காய், சுக்கு, மிளகு, திற்பிலி, துளசி, நற்சீரகம் ஓர்நிறையாய்த்தட்டிப் போட்டுக் கஷாயஞ்செய்து தேய்க்கரண்டிவீதங்கொடுக்கவும்.

சுழி கணம்.

இதற்குப்பரிகாரம்:—கற்கடகசிங்கி, சீந்திற்றண்டு, நற்சீரகம், வில்வப் பழவோடு, அதிவிடையம், கடுகுரோகணி, கண்டங்கத்திரி, மொசுமொசுக்கை, நீர்முள்ளி, தூதுளை, திற்பிலி இவைகளை யோரழவாய்யெடுத்துத்தட்டி இரண்டு படிதண்ணீரில்போட்டு எட்டொன்றாய்க் கஷாயஞ்செய்து தேய்க்கரண்டிப் பிரமாணங்கொடுக்கவும்—மேற்படி சண்பகப்பூகளஞ்சு (உ) சாதிபத்திரி, கோரோசனை வகைக்குக்களஞ்சு (இ) சூரணமாக்கி காற்படி ஆமணக்கெண் ணெயிற்போட்டுக் கொதிக்கவைத்து ஒருகாசிடை முன்னேரம், பின்னேரங் கொடுக்கவும்.

சூலிக் கணம்.

இதற்குப்பரிகாரம் :—துளசி, நிலத்துளசி, கஞ்சாங்கோரை, மாசிபத்திரி, வில்வம், உள்ளி இவைகளின்சாறு வகைக்குப் படி அரைக்கால் ஆமணக்கெண்ணெய் படி (வ) சுக்கு, மிளகு, திற்பிலி வகைக்கு களஞ்சு (கஉ) சூரணமாக்கி எண்ணெய் சாறுகளுடன் போட்டுக்கலந்து தேன் அளவாகவிட்டுப் பதமாய்க்காச்சி ஒரு தேய்க்கறண்டியளவுகொடுக்கவும்.

மகா கணம்.

இதற்குப்பரிகாரம் :—சிறுகீரை, விஷ்ணுகிராந்தி, கீழ்காய்நெல்லி, சிறுபூழை, வெதுப்படக்கி, சீந்தில், ஆடாதோடை இவைகள் வேர் ஓர்நிறையாய் நறுக்கி இளவறுப்பாய்வறுத்து இரண்டுபடி தண்ணீரில் எட்டிலொன்றாய்க் கஷாயஞ்செய்து காலை, மாலை, கறண்டிவீதங்கொடுக்கவும்.

பிரளிக் கணம்.

இதற்குப்பரிகாரம் :—சிற்றாமணக்கெண்ணெய் படி (க) இதில் பேய்க்கொம்மட்டிக்காய்ச்சாறு படி (இ) ஈரவெங்காயச்சாறு படி (இ) கலந்து கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகணி வகைக்குக்களஞ்சு (க) இவைகளைச் சூரணஞ்செய்து எண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காச்சி ஒருகாசிடை இருநேரங்கொடுக்கவும்.

பிறக் கணம்.

இதற்குப்பரிகாரம் :—வல்லாரை, கொழியவரை, கஞ்சாங்கோரை, தயிர்வேளை, சிறுபுள்ளடி இவைகள் இலை ஓரளவாய் எடுத்து இடித்துச் சாறுபிழிந்து சாறுபடி (க) ஆமணக்கெண்ணெய் படி (க) ஒன்றாய்க்கலந்து இதில் பெருங்காயம், உள்ளி, கருஞ்சீரகம், வசம்பு வகைக்குக்களஞ்சு (க) சூரணஞ்செய்துபோட்டு பதமாய்க்காய்ச்சி வடித்து இருநேரம் காசிடை கொடுக்கவும்.

வறட் கணம்.

சுகசீதத் தைலம்.

ஆமணக்கெண்ணெய், பசும்பால் வகைக்குப்படி (க) கீழ்காய்நெல்லிசாறு படி அரைக்கால், அதிமதுரம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், சுக்கு, விஷ்ணுகிராந்திவேர், துளசிவேர், ஆதளைவேர் வகைக்குக்களஞ்சு (உ) இவைகள்யாவற்றையும் செவ்விளநீரில் விட்டரைத்துக் கரைத்து பதமாய்க் காச்சி இரவில் சாப்பாட்டுக்குப்பின் ஒரு தேய்க்கரண்டிவீதங்கொடுக்க காலமே மலநிவிர்த்தியாகும். மேற்படி மற்றநாட்களிலும்காசிகூட வீதங் கொடுத்துவரவும்.

கொதிப்புக் கணம்.

இதற்குப்பரிகாரம் :—ஆமணக்கெண்ணெய் எலும்பிச்சம்புளி இலந்தையிலைச்சாறு வெண்காயம் வகைக்குச்சாறு படி (வ) கருஞ்சீரகம் களஞ்சு (உ) கற்றாளஞ்சதை களஞ்சு (அ) இவைகளை யொன்றாய்க்கலந்து எண்ணெயிற் போட்டுக்காச்சி கற்றாளஞ்சோற்றைச் சிவந்தபதத்தில்வடித்து முன்னேரம், பின்னேரம் காற்கரண்டிவீதங்கொடுக்க கணைபதினெட்டு அஸ்திசுரம், அஸ்திவெட்டை, மேகசுரம், பித்தவெட்டை இவையாவுந்தீரும்.

அந்தக் கணம்.

இதற்குப்பரிகாரம் :—சிறுகீரை, பொன்னாங்காணி, புல்லாந்தி, அவுரி இவைகளின்வேர், தேற்றாவிதை, கடுக்காய்த்தோல் வகைக்குக்களஞ்சு (அ) இவைகளையரைத்து ஆவின்வெண்ணெயில் வேகவைத்து பதத்தில்வடித்து மூன்றுநாள் ஒருதேய்க்கரண்டியளவுகொடுத்து மேற்படி மருந்தை முலைப்பாலிலரைத்துத் தலையில்பூசிவரத்தீரும்.

மந்தார கணம்.

இதற்குப்பரிகாரம்:—நாயுருவி, கையாந்தகரை, வல்லாரல், கவுன்தும்பை, கண்டங்கத்திரி, நொச்சி இவைகளின்சாறு வகைக்குப்படி (வ) ஆமணக்கெண்ணெய் படி (க) உள்ளி, சுக்கு, மிளகு, திற்பிலி, நெல்லி, தான்றி, கடுக்காய் வகைக்குக்களஞ்சு (அ) இலவங்கம்பூ, வசம்பு வகைக்குக்களஞ்சு (இ) இவைகளைப்பொடித்துப்போட்டுச் சிவந்தபதத்தில்காச்சி வடித்து இருநோங்காசிடைகொடுக்கவும்.

எரி கணம்.

இதற்குப்பரிகாரம்:—தென்னங்குரும்பை, தகரை வகைக்குச்சாறுபடி (வ) பளம்பாசி, கற்றாளஞ்சதை, உள்ளி இவைகளின்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி (இ) ஏலம், இலவங்கம், கோஷ்டம், நற்சீரகம், சந்தணம், அதிமதுரம் வகைக்குக்களஞ்சு (இ) இவைகளைச்சூரணம்செய்து எண்ணெயிற்போட்டு பதமாய்க்காச்சி ஒருகாசிடை முன்னேரம், பின்னேரங்கொடுக்கவும். மேற்படி மற்றக்கணங்களுக்கும் பாவிக்கலாம்.

ஆமகணம் அல்லது சீதகணம்.

இதற்குப்பரிகாரம்:—உத்தமாகாணி, கோளியவரை, கிளுவை, பொடுதலை, சிவதை, இவைகளின்வேர், வெளுத்தற்பிசின், வசம்பு, உள்ளி, கடுகுரோகணி, நற்சீரகம், கருஞ்சீரகம், வகைக்குக்களஞ்சு (க) இவைகளைச்சூரணஞ்செய்து ஆமணக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் இவைகளைப்போட்டுக்கலக்கி பதமாய்க்காச்சி வடித்து மூலைக்காம்பிற்தடவி குளந்தைக்குப் பால்கொடுத்து வரத்தீரும்.

நீராமக் கணம்.

இதற்குப்பரிகாரம்:—மணித்தக்காளிச்சாறு, பசுவெண்ணெய் வகைக்கு நாழி அரைக்கால் சட்டியிலிட்டு அடுப்பில்வைத்தெரித்துப் பதத்திலிறக்கி காலை, மாலை காசளவு ஐந்துநாள்கொடுக்கவும். மேற்படி வளர்ந்தபிள்ளைகளுக்கு இரண்டுகாசிடைகொடுக்கவும்.

பேராமக் கணம்.

இதற்குப்பரிகாரம்:—முடிதும்மை, பொடுதலை, சொளிஞ்சி இவைக ளின்வேர், திற்பிலி, நற்சீரகம், ஓமம், இந்துப்பு வகைக்குக்களஞ்சு (க) ஒரு நாழி பசுவின்மோரிலரைத்துக்கலக்கிக்காச்சி ஒருகறண்டி அல்லது இரண்டு கறண்டி வீதம் முன்னேரம், பின்னேரம் கொடுக்கவும்.

முக்கு கணம்.

இதற்குப்பரிகாரம்:—முலைப்பால், பிள்ளைகற்ருளஞ்சாறு வகைக்குப்படி (வ) எலுமிச்சம்பழச்சாறு படி அரைக்கால் ஆமணைக்கெண்ணெய் படி (க) இவைகள்யாவும் ஒன்றுபடக்கலந்து இதில் வில்வம், இலாம்பிச்சு, விஷ்ணு கிராந்தி, ஓரிலைதாமரை இவைகளின்வேர், கோரைகிளங்கு, முருங்கைவித்து, அளசிவித்து, கோங்கிலவம்பிசின், ஆவரைப்பிசின், கோஷ்டம், அதிமதூரம், அக்கரா, தாளிசபத்திரி, இவைகள் வகைக்குக்களஞ்சு (உ) சூரணமாக்கிப் போட்டு பதமாய்க்காச்சிவடித்து முன்னேரம், பின்னேரம் தேக்கரண்டி வீதங்கொடுக்கவும். மேற்படி எழுதாங்கழுவின பிள்ளைகற்ருளஞ்சதை எலும் பிச்சம்பழச்சாறு வகைக்குப்படி அரைக்கால் இவைகளையொன்ருக்கலந்து வெந்தயங்களஞ்சு (ச) எலும்பிச்சச்சாறுவிட்டரைத்துக்கரைத்து குளம்புபத மாய்க்காச்சி முன்னேரம், பின்னேரம் கறண்டிவீதங்கொடுக்கவும்.

மூல கணம்.

சந்தனாதி லேகியம்.

சந்தனத்தூள், நற்சீரகம், அதிவிடயம், கடுக்காய்த்தோல், சுக்கு, பறங் கிக்கிளங்கு, கசகசா, வசுவாசி, நெல்லிவற்றல், சிற்ருமுட்டிவேர், செம் பருத்தியிலை, வில்வமிலை, இலாம்பிச்சம்வேர் இவைவகைக்குக்களஞ்சு (அ) கற் கண்டுகளஞ்சு (கசு) இவைகளைச்சூரணம்செய்து பசுநெய் அளவாய்விட்டு லேகியஞ்செய்து கொட்டைப்பாக்களவு காலை, மாலை கொடுக்கவும்.

வெந்தய லேகியம்.

அரைப்படி பசுவின்பாலில் எட்டுக்களஞ்சு வெந்தயத்தைப்போட்டவித்துக் கடைந்து பனைவெல்லமும் பசுநெய்யும்விட்டு லேகியமாக்கி அந்திசந்தி கொட்டைப்பாக்குபிரமாணம் கொடுக்கவும்.

சகல கணங்களுக்கும் பொதுவான மாத்திரைகள்.

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைச்கற்பூரம், கல்நார், கிராம்பு, லவங்கபத்திரி, செவ்வியம், திற்பிலி, அதிவிடயம், தான்றி, கருஞ்சீரகம், அக்கரா, கடுகுரோகணி, சாதிக்காய், வசுவாதி, கற்கடகசிங்கி குராசாணி, நற்சீரகம் வகைக்குக்களஞ்சு (வ) இவைகளைச்சூரணமாக்கி கல்வத்தில்போட்டு இஞ்சிச்சாறு கையாந்தகரையிலைச்சாறு இவைகளின்சாற்றால் வகைக்கு ஒருசாமமும், நாரத்தங்கனிச்சாற்றால் மூன்றுசாமமரைத்து சிறுபயறுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை காலை மாலை முலைப்பாலில் கொடுக்க எட்சிதோஷம், நீர்ப்புண், பறவைதோஷம், நளிர்சுரம், கழிச்சல், இருமல், ஈளை, காசம், கணமாந்தம் இவைகள்யாவும்நீங்கும்.

மேற்படி அதிமதுர மாத்திரை.

அதிமதுரம், சாஸ்திரவேதி, கோஸ்டம், ஏலம், இலவங்கம், சந்தணம், கடுகுரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரிவேர், இலாம்பிச்சம்வேர், வெட்டிவேர்,

திற்பிலி, கோரைக்கிழங்கு, கொடிமுந்திரிப்பழம், பேரீச்சம்பழம் வகைக்குக் களஞ்சு (இ) பழவகைகள் பிறநீங்கலாக மற்றுஞ்சரக்குகளை இடித்து கல்வத்தில்போட்டுப் பழங்களைச்சேர்த்து வையாந்தகரைசாற்றால் இரண்டுசாம மரைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை முலைப்பால் அல்லது வெந்நீரிற் காலை மாலை கொடுக்க அட்டகணங்கள் மாந்த சுரம் தாகந்தீரும்.

மேற்படி கோரோசனை மாத்திரை.

கோரோசனை, சந்தனப், நன்னாரிக்கிழங்கு, புளியம்விதைத்தோல், சால்திரவேதி, கோரைக்கிழங்கு, ஓரிதழ்த்தாமரை, சிறுகீரை, நாயுருவிவேர், வல்லாரை, சாதிக்காய், வசுவாசி, சண்பகப்பூ, கல்நார், திற்பிலி, இருவாட்சி, கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், இலவங்கம், உருத்திராட்சம், பொன்னாங்காணிவேர், குப்பைமேனிவேர், கலைக்கொம்பு வகைக்குக்களஞ்சு (உo) இவைகளை இடித்துக் கல்வத்தில்போட்டு வல்லாரையிலைச்சாற்றால் ஒருசாமமும் பொன்னாங்காணியிலைச்சாற்றால் ஒருசாமமுமரைத்து தூதுளங்காய் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒவ்வொருமாத்திரை முலைப்பாலில் அல்லது வெந்நீரில்கொடுக்கச் சகலகணங்களும்தீரும்.

விஷவாத சுரப்பன்.

இதற்குப்பரிகாரம் :—உத்தமாகாணி, தழுதாழை, ஓரிதழ்த் தாமரை, வெள்ளறுகு, யார், நாயுருவி, நாய்ச்கடுகு, நன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறியாள்நங்கை, கவுழ்தும்பை, வெள்ளெருக்கு, மாவிலங்கை இவைகளின் வேர், வகைக்குக்களஞ்சு (அ) இவைகளை நறுக்கி இடித்து (அ) படி தண்ணீர் விட்டவித்து ஒருபடியாகவெடுத்து இக்கஷாயத்துடன் சிற்றாமணக்கெண்ணெய், தேங்காய்ப்பால் வகைக்குப் படி (க) இதில் கோரோசனைகளஞ்சு (இ) பஞ்சலவணம், சுக்கு, மிளகு, திற்பிலி, நெல்லி, தான்றி, கடுக்காய், கோரைக்கிழங்கு, பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம், சற்கண்டு வகைக்குக்களஞ்சு

(உ) இவைகளைச் சூரணஞ்செய்துப்போட்டுப் பதமாய்க்காச்சிவடித்து முன்னேரம் பின்னேரம் ஒரு தேய்க்கரண்டிவீதம்கொடுக்கவும். மேற்படி பூவரசம்பூத்தைலம், பூவரசம்பூ, சுட்டசாம்பல், நெல்லி, முள்ளி இவை வகைக்குச் சாம்பல் பிடி (க) மிளகு, உள்ளி, வசம்பு வகைக்குக்களஞ்சு (கஉ) ஈரவெண்காயம்களஞ்சு (உ) இவைகளையெல்லாம் ஆடுதின்னாப்பாலைச்சாற்றிலரைத்து காற்படி நல்லெண்ணெயிற்போட்டு பதமாய்க்காச்சிவடித்து புண்ணிற்போடவும்.

வர்த கரப்பன்னுக்கு.

புங்கம்வேர்த் தைலம்.

புங்கம்வேர், ஆடாதோடைவேர், நாய்வேளைவேர், இயங்கம்வேர் வகைக்கு ஓர்பிடி, வசம்பு, உள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், வெளுத்தறப்பிசின், கடுக்காய்த்தோல், பொடுதலைக்காய், கஸ்தூரிமஞ்சள் வகைக்குக்களஞ்சு (ரு) இவைகளைச்சூரணஞ்செய்து ஆமணக்கெண்ணெய் படி (க) பீச்சுவிளாத்திச்சாறு படி (க) ஈரவெண்காயச்சாறு படி (வ) எண்ணெய்சாறு இவைகளைக் கலந்து சூரணம்போட்டுக்கலக்கி சூரியபுடம்வைத்து உடம்பிற்பூசிவர கரப்பன் கெற்பத்திலொட்டிய கருங்கிராந்தி, செங்கிராந்திதீரும்.

பித்த கரப்பன்.

இதற்குப்பரிகாரம்:—கொடிவேலிவேர், குறுஞ்சாவேர், குளப்பாலைவேர், சிவனார்வேம்புவேர், பெருமரத்துப்பட்டை, வெள்ளறுகிலை, மிளகு, கருவேப்பிலைகூர், செங்கத்தாரிபட்டை வகைக்குக்களஞ்சு (க) இவைகளை இடித்து இரண்டுபடிதண்ணீர்விட்டவித்து எட்டொன்றாக்கிக் காலை மாலை இரண்டு தேய்க்கரண்டிவீதங்கொடுக்கவும். மேற்படி கொடிவேலிச்சூரணம், கொடிவேலிவேர், குருஞ்சாவேர், கருநொச்சியிலை, விஷ்ணுகிராந்தியிலை, சிறுசின்னியிலை, வசம்பு, கடுகுரோகணி, செங்கத்தாரிப்பட்டை, மிளகு வகைக்

குக்களஞ்சு (க) இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து காலை மாலை பேன்பிடி அல்லது வெருகடிசூரணம் வெந்நீரிற்போட்டுக் கலக்கிக்கொடுக்கவும்.

செங் கரப்பன்.

இதற்குப்பரிகாரம்:—முத்தாமணக்கம்வேர், முதியாள்கூந்தல்வேர், முருக்கிலை, நெருஞ்சிவேர், முடக்கொத்தானிலை, பூவரசம்பட்டை, ஈரவெண்காயம் வகைக்குக்களஞ்சு (உ) இவைகளைச்சூரணமாக்கி பசுநெய் கால்படியில் போட்டுக்காச்சிச் சிவந்தபதத்தில்வடித்து காலை மாலை தேய்க்கரண்டி வீதம் கொடுக்கவும்.

கருங் கரப்பன்.

திரிகடுகுத் தைலம்.

இதற்கு சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், கோஷ்டம், கருஞ்சீரகம் ஓமம், கஞ்சாங்கோரை, ஈத்தைச்சூரி, சிற்றவரை, ஆவரை, சிவனார் வேம்பு, உத்தமாகாணி இவைகளின் வேர் வகைக்குக்களஞ்சு (க) இவைகளைச் சூரணம் செய்து அரைப்படி ஆமணக்கெண்ணெயிற்போட்டு பதமாய்க்காச்சிவடித்துக் காலை மாலை தேய்க்கரண்டிவீதம்கொடுக்கவும்.

சூலைக் கரப்பன்.

இயங்கம்வேர்த் தைலம்.

இதற்கு இயங்கம்வேர், புங்கம்வேர், ஆமணக்கம்வேர் வகைக்குக்களஞ்சு (ரு) ஈர வெண்காயச்சாறுவிட்டரைத்து ஆமணக்கெண்ணெய் படி ஒன்றில் கரைத்து இதில் கடுகுரோகணிகளஞ்சு (உ) முடக்கொத்தான் களஞ்சு (க) இவைகளைச் சூரணமாக்கி போட்டுக்கலக்கி சூரியபுடம்வைத்து காலை மாலை

தேய்க்கறண்டி வீதஞ்சாப்பிட சூலைக்கரப்பன், முட்டுச்சூலை, புண், கரப்பன், சொறிசிரங்கு இவையாவுந்தீரும்.

ஊது கரப்பன்.

கற்பூரவல்லித் தைலம்.

இதற்கு கற்பூரவல்லி, அகத்தி, அவுரி, வெள்ளறுகு, இயங்கு, ஆடாதோடை, மணித்தக்காளி, ஆவரை, பீச்சுவிளாத்தி, நிலக்கடம்பு, கிரந்திகள் நாயன், நொச்சி, முருக்கு, ஈரவெண்காயம் இவைவகைக்குச்சாறு படி (வ) ஆமணக்கெண்ணெய் படி (க) சரக்குவகை கறிமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிவதைவேர், கடுகுரோகணி, கருஞ்சீரகம், நற்சீரகம், திரிகடுகு, திரிபலை வகைக்குக்களஞ்சு முக்கால் இவைகளைச்சூரணமாக்கி மேற்படி சாற்றிலரைத்து எண்ணெய்சாறுகளுடன்கலந்து பதமாய்க்காச்சி காலை மாலை தேய்க்கறண்டிவீதம்கொடுக்கவும்.

பால கரப்பன்.

பூவரசம்பட்டைத் தைலம்

இதற்கு பூவரசம்பட்டைச்சாறு படி (க) ஆமணக்கெண்ணெய் படி (க) பசுப்பால் படி (க) இவைகளையொன்றாய்க்கலந்து காச்சி மெழுகுபதத்தில் வருப்பொழுது நற்சீரகம், கருஞ்சீரகம், கார்கோலரிசி, ஏலம், இலவங்கம், சடாமாஞ்சில், கையாந்தகரைவேர், நுணாவேர் வகைக்குக்களஞ்சு (உ) இவைகளைச்சூரணஞ்செய்து தைலத்தில்போட்டுக்கிண்டி நெய்ப்பதத்திலிறக்கி காலை மாலை தேய்க்கறண்டிவீதம் உள்ளுக்குக்கொடுத்து கரிகை உடம்பில்தேய்க்கவும்

அரி கரப்பன்.

குண்டலாதித் தைலம்.

இதற்கு இயங்கம்கிளங்கு சாயவைத்திடித்த சூரணம் முத்தல் ஒன்றே முக்கால் இரண்டுபடிதண்ணீர்விட்டவித்து அரைக்கால்படியாயெடுத்து நல்லெண்ணெய் படி (இ) இதில் மிளகு, சருஞ்சீரகம், ஏலம், மாயாக்காய் வகைக்குக்களஞ்சு (உ) இவைகளையிடித்து பசுப்பால்விட்டரைத்துக்கரைத்து எண்ணெய் கஷாயத்துடன் கலந்து பதமாய்க்காச்சி தேய்க்கறண்டிவீதம் காலைமாலை உள்ளுக்கும்கொடுத்து உடம்பிலும்பூசவும்.

மேற்படி மருக்காரைத் தைலம்.

மேற்படி மருக்காரை, கிலுகிலுப்பை, உத்தமாகாணி இவைகளின்வேர்ப்பட்டை கடுக்காத்தோல், உள்ளி வகைக்குக்களஞ்சு (உ) இவைகளை இடித்துச் சூரணமாக்கி நல்லெண்ணெய் படி (வ) அடுப்பில்வைத்துக்காச்சி வெற்றிலை வெடிபதத்தில் இறக்கி முற் சூரணத்தைப்போட்டுக்கிண்டி ஆறவைத்துப் புண்ணில்தடவவும்.

கொள்ளிக் கரப்பன்.

வெள்ளறுகுத் தைலம்.

இதற்கு வெள்ளறுகு, சிவனார்வேம்பு, பீச்சுவிளாத்தி, பொடுதலை, வீழி, கோளியவரை, கையாந்தகரை, கருநொச்சி, களற்சி, சாறணை, தூதுளை இவை

ளின்சாறு வகைக்குப்படி (வ) ஆமணக்கெண்ணெய் படி (௧) ஒன்ருய்க்கலந்ததில் கருஞ்சீரகம் களஞ்சு (ச) ஈரவெண்காயம்களஞ்சு (அ) இவைகளை முற்சாற்றிலரைத்து எண்ணெயுடன்கலந்து பதமாய்க்காச்சி காலை மாலை தேய்க்கறண்டிவீதம் உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும்பூசவும்.

வறட்சிக் கரப்பன்.

சிங்கவல்லித் தைலம்.

இதற்கு தூதுளை, ஓரிதழ்த்தாமரை, வெள்ளறுகு, கொடிவேலி, அவுரி இவைகளின்வேர், கருஞ்சீரகம், சுத்திசெய்தநெல்லிக்காய்க்கெந்தகம், கார்போலரிசி, ஓமம், நற்சீரகம் வகைக்குக்கழஞ்சு (உ) இவைகளைச்சூரணஞ்செய்து நல்லெண்ணெய் படி (வ) அடுப்பிலேவைத்துக்காச்சி வெற்றிலை வெடிபதத்திலிறக்கி முற்சூரணத்தைப்போட்டுக்கிளறியிறக்கி ஆறவைத்துக் காலை மாலை தேய்க்கறண்டிவீதம் உள்ளுக்குங்கொடுத்து உடம்பிலுந்தடவி விடவும்.

வாத கரப்பன்.

வீக்கத்துக்குக் கஷாயம்

தூதுளையிலை, இயங்கங்கிளக்கு, சுரையிலை, சிறு நெருஞ்சி சமூலம், நீர்முள்ளிசமூலம், ஈரவெண்காயம் இவைகளை யோர்நிறையாய்க் கஷாயஞ்செய்து அதில் வெண்காரம், பொரிகாரம் வகைக்குக்களஞ்சு (இ) ஓட்டில்போட்டுப் பொரித்து மாவாக்கி மூன்றுகறண்டி அல்லது நாலுகறண்டி கஷாயத்தில் போட்டு மூன்றுநாள் ஆறுநேரம்கொடுக்கவும்.

மாந்தம், செவ்வாப்புக்கழிச்சல்.

வில்லைக் குளிகை.

திற்பிலி, கிராம்பு, ஏலம், கடுக்காய்த்தோல், ஓமம், நற்சீரகம், வசம்பு, மாயாக்காய், உள்ளி, மிளகு, மதூரம், சுக்கு, சாதிக்காய், வசுவாசி, படிகாரம், சதகுப்பை, கருஞ்சீரகம், வெளுத்தறப்பிசின், அக்கரா, நற்பெருங்காயம், செஞ்சந்தணம், பலாமரக்காளான் வகைசமன் வெந்நீர்விட்டரைத்து மாதுளங்காயைக்குடைந்து யதின்கொட்டையைத்தள்ளி அதற்குள் அரைத்த மருந்தைவைத்துமூடி நெருப்புத்ததணலில் கருகாமல்சுட்டு எடுத்து அரைத்து காசுபோல் வில்லைகளாகச்செய்து நிழலுலர்த்திக் காலை மாலை ஒருவில்லை அல்லது இரண்டுவில்லை வெந்நீரில் அல்லது ஓமக்கஷாயத்தில் உரைத்துக் கொடுக்கவும்.

கபால கரப்பன்.

சிவனார்வேம்புத் தைலம்.

சிவனார்வேம்பு, சோரைக்கிழங்கு, அதளை, பொன்னாங்காணி, சீதேவியார், செங்கழுநீர், ஓரிதழ்த்தாமரை, நிலவேம்பு, குப்பைமேனி, இயக்கு, மலர்தாங்கி, சரக்கொன்றை இவைகளின் வேர் வகைக்குக்களஞ்சு (உ) சுக்கு, மிளகு, திற்பிலி, கடுக்காய்த்தோல், இந்துப்பூ, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, செந்நகரம்பழம், கடுரோகணி, வெளுத்தறப்பிசின், அதிமதுரம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளைச்சூரணஞ்செய்து பசுப்பாலில்விட்டரைத்துக்கரைத்து ஒருபடி நல்லெண்ணெயுடன்கலந்து பதமாய்க்காச்சி வடித்து ஒருதேய்க்கறண்டிவீதம் காலை மாலை உள்ளுக்கும்கொடுத்து தலைக்குப்வைத்து உடம்பிலும்பூசி மூன்றுநாளைக்கொருக்கால் முழுகிவரவும்.

சிரங்குகளின் குணமும் பரிகாரமும்.

குணம் :—தொற்றினும், அசுத்தத்தினுலும் இது பெரும்பாலுமுண்டாகும் மிகுதியாய் கைவிரல்களுக்கிடையிலும் பொருத்தின் மடக்குகளிலும் உண்டு படும் சிலருக்கு தேகமுழுதுமுண்டாகி அதிகசொறியிருக்கும். பரிகாரம் இயங்கம்வேர்த்தைலம், இயங்கங்கிளங்கு பலம் (௬) இடித்து சூரணமாக்கி எட்டுப்படிதண்ணீரில் போட்டவித்து ஒருபடியாய் வற்றவைத்த கஷாயத் தில் பசுப்பால், செவ்விழநீர், நல்லெண்ணெய் வகைக்குப் படி (௧) இதில் மிளகு களஞ்சு (அ) பூலாக்கிளங்கு, நற்சீரகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்குக் களஞ்சு (௪) இவைகளைச்சூரணஞ்செய்து பால்விட்டரைத்து எல்லாவற்றையு மொன்றுபடக்கரைத்து பதத்தில்காச்சி தலைக்கும்வைத்து உடம்பிலும்பூசி முழுகிவர சிறுசிரங்கு, சொறிசிரங்குதீரும்.

சகல கரப்பன் சிரங்கு வகைகளுக்குப்பொதுவான பரிகாரம்.

செங்கத்தாரிப்பட்டைத் தைலம்.

செங்கத்தாரிப்பட்டை, கருநொச்சி, முடக்கற்றான், களற்சி, புங்கு, இயங்கு, பீச்சுவிளாத்தி, கிரந்திகள், நாயன் சிறுசெருப்படை, சிறுசின்னி, முதியாள்கூந்தல், உத்தமாகாணி, கொடிவேலி, வேப்பம்பட்டை, சிவனார் வேம்வு, சிவதை, கண்டங்கத்திரி இவைவேர் பூதகரப்பன்பட்டை, வெள் ளறுகு சமூலம். நற்சீரகம், கருஞ்சீரகம் இவை வகைக்குக்களஞ்சு (க) சூரண மாக்கி ஆமணக்கெண்ணெய் படியொன்றிற்போட்டுப் பதமாய்க்காச்சி வடித் துக் காலை மாலை ஒரு தேய்க்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் பூசி முழுகிவரத்தீரும் வியாதிகள் புண் கரப்பன், கொள்ளிக் கரப்பன், வீங்கு கரப்பன், அரி கரப்பன், செங் கரப்பன், சிரங்குகள் இவையாவும்தீரும்.

உடம்புநோய்க் காச்சல்.

பேய்ப்புடோல் கஷாயம்.

பேய்ப்புடோல், பற்படகம், பேராமுட்டிவேர், மிளகு, சுக்கு, விஷ்ணு கிராந்தி சமூலம், லாம்பிச்சம்வேர், கோரைக்கிளங்கு, சிறுதேக்கு வகைக்குக் களஞ்சு (க) ஒருபங்கை அரைப்படி தண்ணீரில் அவித்து எட்டொன்ருக்கி நாளிரண்டுமுறை தேன்சேர்த்துக்கொடுக்கவும் மற்றப்பங்குகளையும் இவ் வண்ணமேசெய்துக்கொடுக்கவும் எவ்விதசுரங்களும்தீரும்.

உட் காச்சல்.

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி களஞ்சு (வ) குங்குமப்பூ களஞ்சு முக்கால் சுக்குக்களஞ்சு (க) கராம்பு களஞ்சு (இ) சாதிக்காய் களஞ்சு (இ) கோட்டம் களஞ்சு (இ) அக்கரா களஞ்சு (இ) இவைகளை இடித்து கல்வத்தில்போட்டு முலைப்பால்விட்டரைத்து அரைத்தமுடிவில் கஸ்த்தூரியையும்சேர்த்தரைத்து கடுகளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி குணங்கண்டு ஒருமாத்திரை இரண்டுமாத்திரை மூன்றுமாத்திரை காலை மாலை முலைப்பாலினுரைத்துக்கொடுக்க உட்காச்சல், மாந்தம், நெஞ்சிற்சளி, வலிப்பு, இசிவு, கபம் இவையாவுந்தீரும். மேற்படி வளர்ந்தபிள்ளைகளுக்கு ஐந்து அல்லது ஆறு மாத்திரைகொடுக்கவும்.

மேற்படி நன்னரிக் கஷாயம்.

நன்னரிவேர், சிறுகாஞ்சோண்டிவேர், பேராமுட்டிவேர், கொத்தமல்லி, நற்சீரகம், சுக்கு, அதிமதுரம், மிளகு, முந்திரிகைப்பழவற்றல், பேரீச்சம்

பழம் வகைக்குக்களஞ்சு (க) ஒருபங்கை அரைப்பங்குதண்ணீரிலவித்து எட்டொன்றுக்கி நாளிரண்டுமுறை தேன்சேர்த்துக்கொடுக்கவும் மற்றப்பங்குகளையும் இவ்வண்ணமே செய்துகொடுக்க முன்சொல்லிய ரோகங்களிலெழுந்த நாவரட்சி தாகந்தீரும்.

ஆம சுரம்.

கோரைக்கிழங்குக் கஷாயம்.

கோரைக்கிழங்கு, பற்படகம், பேய்ப்புடோல், சீந்திற்தண்டு, லாம்பிச்சம்வேர், பேராமுட்டிவேர், அதிமதுரம், கொத்தமல்லி, சுக்கு, மிளகு வகைக்குக்களஞ்சு (க) ஒருபங்கை அரைப்படிதண்ணீரிலவித்து எட்டொன்றுக்கி நாளிரண்டுமுறை தேன்சேர்த்துக்கொடுக்கவும். மற்றப்பங்குகளையும் இவ்வண்ணவே செய்துகொடுக்கத்தீரும்.

இரத்த சுரம்.

சிவப்புக் குளிகை.

சாதுலிங்கம், கோட்டம், நாவி, சித்தரத்தை, சுக்கு, மிளகு, திற்பிலி, கராம்பு, ஓமம், நற்சீரகம், வசம்பு, பொரிகாரம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளை நொருக்கி இஞ்சிச்சாற்றிலரைத்து குன்றியளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால் இவைகளிற்கொடுக்க இரத்தசுரம் முதலிய மற்றச்சுரங்கள் யாவுந்தீரும்.

அன்பனுதிச் சுரம்.

கோரோசனை மாத்திரை.

கோரோசனை, கோட்டம், கெருடைபச்சை, மதுரம், கல்நார், ஏலம், சாஸ்திரபேதி வகைக்குக்களஞ்சு (இ) கோரோசனை பிறநீங்கலாக மற்றவை

களை இடித்து கல்வத்தில்போட்டு முலைப்பால்விட்டரைத்து அரைத்தமுடிவில் கோரோசனை சேர்த்தரைத்து மல்லியளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்க முன்சொல்லிய ரோகந் தீரும்.

மாங்கிஷ சுரம்.

பச்சைக்கற்பூர மாத்திரை.

பச்சைக்கற்பூரம் நல்லாய்சுத்திசெய்த நெல்லிச்காய்க்கெந்தகம், இக்துப் பூ இலவங்கப், சாதிக்காய், வசுவாசு வகைக்குக்களஞ்சு (க) இதில் பச்சைக் கற்பூரம், பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை யிடித்து எலும்பிச்சம்பழச்சாற்றில் ஒருசாமமரைத்து அரைத்தமுடிவில் பச்சைக்கற்பூரத்தைச் சேர்த்தரைத்து சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால் இவைகளில்கொடுக்க மேற்சொல்லிய ரோகந்தீரும்.

அஸ்தி சுரம்.

கோரோசனை மாத்திரை.

கோரோசனை, புனுகு, சட்டம், கெருடபச்சை, செஞ்சந்தனம், வெட்டி வேர், விலாம்பிச்சம்வேர், புனலைக்காய், நற்சீரகம், கருஞ்சீரம், சாஸ்திர பேதி, மதுரம் வகைக்குக்களஞ்சு (இ) இவைகளில் கோரோசனை, புனுகு, சட் டம் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளையிடித்து நற்சீரகக்கஷாயத்தால் இரண்டு தினமரைத்து அரைத்தமுடிவில் கோரோசனை, புனுகு, சட்டம் இவைகளைச் சேர்த்து குன்றிபோல்மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை யொரு மாத்திரை முலைப்பால், கற்பூரவல்லி இலைச்சாறு இவைகளில் கொடுக் கத் தீரும்.

மேற்படி சிறுகாஞ்சோன்றிவேர்க் கஷாயம்.

சிறுகாஞ்சோன்றிவேர், சிறுதேக்கு, பற்படகம், கோரைக்கிழங்கு, சீந்திற்தண்டு, நன்னாரிவேர், தேவதாரம், கோஷ்டம், பேய்ப்புடோல், சுக்கு வகைக்குக்களஞ்சு (க) இவைகளையிடித்து மூன்றுபங்குசெய்து ஒருபங்கை அரைப்படிதண்ணீர்விட்டவித்து எட்டொன்றாக்கி நாளிரண்டுமுறை தேன் சேர்த்துக்கொடுக்கவும் மற்றப்பங்குகளையும் இவ்விதமே செய்துகொடுக்கத் தீரும்.

வாத பித்த சிலேத்பனசுரங்கள் மூன்றிற்கும்.

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி களஞ்சு (வ) கோரோசனை களஞ்சு (இ) ஏலம், மல்லி, சந்தனம், விலாம்பிச்சம்வேர், அக்கரா, மதுரம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளை இடித்து முலைப்பால்விட்டு மூன்றுசாமமரைத்து அரைத்தமுடிவில் கஸதூரி, கோரோசனை இவைகளைச்சேர்த்தரைத்து சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்கத்தீரும்.

அசீரண சுரம்.

இதற்கு இரத்த சுரத்திற்குச்சொல்லிய சிவப்புக்குளிகையைக் கொடுக்கவும்.

கிரந்திச் சுரம்.

இதற்குக்கஷாயம்:— தூதுளை வேர், சிறுகாஞ்சோன்றி வேர், ஆடாதோடை வேர், சீந்தில்தண்டு, நொச்சி வேர், பேராமுட்டி வேர், சிற்றாமுட்டி வேர், கோரைக்கிழங்கு வகைக்குச்களஞ்சு (உ) பற்படாகம், கடுக்காய்த

தோல், திற்பிலி வகைக்குக்களஞ்சு (இ) தண்ணீர் ஒருபடி நாலொன்ருய் வற்றச்காச்சி வளர்ந்தபிள்ளைகளுக்கு நாலுநாள் எட்டுநோக்கொடுக்கவும் சிறுபாலர்களுக்கு இம்மருந்துகளில் அரைவாசிப்பிரமாணமெடுத்துச் செய்து கொடுக்கவும் கொடுக்கும்போது கொஞ்சக்சற்கண்டுதூள் சேர்த்துக்கொள்ளவும் தொய்வு இருமலுக்கும்கொடுக்கலாம்.

அவியல் சுரம்.

இதற்குக்குடி நீர்:—சிறுகாஞ்சோன்றிவேர், செங்கத்தாரிப்பட்டை, ஆடாதோடைவேர், வட்டுக்கத்திரிவேர், கண்டங்கத்திரிவேர், தூதுளைவேர் நாயுருவிவேர் இவை வகைக்குக்களஞ்சு (க) சீந்திற்தண்டு, கற்பூரவல்லியிலை, வல்லாரயிலை, சுக்கு, மிளகு, திற்பிலி, நற்சீரகம், கருஞ்சீரகம், அக்கார, மாயாக்காய், ஏலம், ஓமம், கோரைக்கிழங்கு, ஈரவெண்காயம், பற்படாகம் வகைக்குச்களஞ்சு (வ) ஒருபடி தண்ணீர்விட்டவித்து எட்டொன்ருக்கி நாலுநாள் எட்டுநோம்கொடுக்கவும் காச்சலோடுகூடிய இருமலுக்கும் காச்சலுக்கும் கொடுக்கலாம்.

மேற்படி தக்காழிக் கோரோசனை மாத்திரை.

கோரோசனை களஞ்சு (க) திற்பிலி, மிளகு, சுக்கு, நெல்லிக்காய், தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த்தோல், கிராம்பு, வசுவாசி, கோட்டம், அக்கார, அதிமதூரம், ஏலம், சிறுகீரைவேர், பொன்னுங்காணிவேர், நன்னரிவேர், இவைவகைக்குக்களஞ்சு (க) கோரோசனை பிறநீங்கலாக வேர்களையும் சரக்குகளையும் காயவைத்திடித்து மணித்தக்காளிச்சாற்ருல் குளிகைப்பதம் வரும் வரைக்குமரைத்து மேற்படி கோரோசனையையுஞ் சேர்த்தரைத்து மிளகளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை அல்லது இரண்டு மாத்திரை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால் இவைகளில்கொடுக்க அக்காம், அவியல் சுரம், அவியலோடுகூடிய களிச்சல், பெலவீனம், தாக சுரம், கிரந்திச் சுரம் முதலிய ரோகங்கள்தீரும்.

முறைக் காச்சல்.

கஸ்தூரி மாத்திரை

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, சிற்றேலம், கொத்தமல்லி, நற்சந்தனம், அக்கரா, மதுராம் வகைக்குக்களஞ்சு (வ) முலைப்பாலிலரைத்து சிறுபயறளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை அல்லது இரண்டு மாத்திரை முலைப்பாலிலுரைத்துக்கொடுக்கவும்.

விடாச் சுரம்.

இதற்கு இரத்த சுரத்திற்குச்சொல்லிய சிவப்புக்குளிகையைக் கொடுக்கவும்.

மாந்த சுரம்.

இதற்குப்பரிகாரம் :—சீந்தில்தண்டு, களிப்பாக்கு, சுத்திசெய்த சிவதைவேர், கடுக்காய்த்தோல், சுக்கு, கடுகுரோகணி இவை சமனுயெடுத்திடித்து ஒருபடிதண்ணீரில் போட்டவித்து எட்டொன்ருக்கி தேய்க்கரண்டிவீதம் கொடுக்கவும். மேற்படி வளர்ந்தகுளந்தைகளுக்கு இரண்டு கரண்டிவீதம் கொடுக்கவும். வேறு, நற்சீரகம், கிராம்பு, திற்பிலி, நெல்லிவற்றல், வேப்பங்கூர், புளியங்கூர், விஷ்ணுகிராந்தி சமூலம், பேராமுட்டிவேர், சிற்றுமுட்டிவேர், ஓரிலைத்தாமரைவேர் இவைகளை ஓர்நிறையாக எடுத்திடித்து ஒருபடி தண்ணீரில்விட்டவித்து எட்டொன்ருக்கி, ஒருதேய்க்கரண்டிவீதம் அல்லது இரண்டுதேய்க்கரண்டிவீதம்கொடுக்கவும்.

"மாந்தகணசுரம், வயிற்றுப்பொருமல், உவாந்தி."

இவைகட்குபரிகாரம் :—கஸதூரிமாத்திரை, கஸ்தூரி களஞ்சு (வ) கோரோசனை, குங்குமப்பூ வகைக்குக்களஞ்சு (இ). ரச சிந்தூரம்களஞ்சு (வ) சுக்கு, மிளகு, திற்பிலி, நெல்லி, தான்றி, கடுக்காய், கஸதூரிமஞ்சள், ஏலம், கிராம்பு வகைக்குக்கசிஞ்சு முக்கால். இவைகளில், கஸ்தூரி, கோரோசனை,

குங்குமப்பூ, ரசசிந்தூரம், இவைகள்பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை இடித்து கருநொச்சிசாற்றால், குளிகைப்பதத்திலரைத்து, பிறநீங்கலாகவைத்திருந்த சரக்குகளையும்போட்டுச் சேர்த்தரைத்து சிறுபயறுப்பிரமாணம் மாத்திரை செய்து, நிழலுலர்த்தி காலை, மாலை ஒருமாத்திரை துளசிச்சாற்றில்கொடுக்க முற்சொல்லிய ரோகங்கள்தீரும்.

மாந்தசுர தோஷம்.

இதற்குப்பரிகாரம்:—சுக்கு, மிளகு, திற்பிலி, உள்ளி, கடுகு, வசம்பு, கறியுப்பு, வகைக்குக்களஞ்சு (வ) அரைப்படி தண்ணீர்விட்டவித்து எட்டொன்றாக்கி நாலுநேரம்கொடுக்கவும். இச்சரக்குகளை வறுத்தரைக்கவும்.

பித்தம், இருமல், உவார்தி, இவைசட்கு.

வாய்விளங்காதி மாத்திரை.

வாய்விளங்கம், சுட்ட ஆமையோடு, மிளகு, பொடுதலைக்காய், வசம்பு, திற்பிலி, கழற்சிப்பருப்பு, வகைக்குக்களஞ்சு (க) இவைகளை இடித்து பொடுதலைச்சாற்றாலரைத்து, தூதுளங்காயளவு மாத்திரைசெய்து, நிழலுலர்த்தி ஒரு மாத்திரை, காலை மாலை கண்டங்கத்திரி இலைச்சாற்றில்கொடுக்க, மாந்தமும், உத்தமாகாணிச்சாற்றில்கொடுக்க, பொருமலும், உவார்தியும், ஓமக்கஷாயத்தில்கொடுக்கக் களிச்சலும், தேனில்கொடுக்கச்சீதமும், முலைப்பாலில்கொடுக்க முக்குமாந்தமும், இஞ்சிச்சாற்றில்கொடுக்க மயக்கமுந்தீரும்.

குளிர் சுரம்.

திரிகடுகு மாத்திரை.

சுக்கு, மிளகு, திற்பிலி, சிறுதேக்கு, கோஷ்டம், சீந்தில்தண்டு, பற்படகம், நிலவேம்பு, கோரைகிளங்கு, விலாம்பிச்ம்வேர் வகை சமனெடுத்து

இடித்து ஒருபடி தண்ணீர்விட்டவித்து, எட்டொன்றாக்கி, காலை மாலை, ஒரு தேய்க்கரண்டி அல்லது இரண்டு கரண்டிவீதம்கொடுக்கவும்.

களிச்சற் தோஷம்.

இதற்கு

பூ மாதுளம்பூ மாத்திரை.

பூ மாதுளம்பூ, களஞ்சு (உ) அதிவிடையம், அதிமதுரம், சாதிக்காய், நற்சீரம், ஓமம், வசுவாசி, வகைக்குக்களஞ்சு (க). இவைகளை இடித்து புளியாரைச்சாற்றிலரைத்துத் அதுளங்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி, காலை மாலை ஒருமாத்திரை, மாதுளம்பழச்சாற்றிலுரைத்துக் கொடுக்கத்தீரும்.

காச்சல், அதிசாரம், சுவாசகாசம்.

இவைகட்கு

அதிவிடையச் சூரணம்.

இதற்கு அதிவிடையம், களஞ்சு (உ), அதிமதுரம், சடாமாஞ்சில், நெற்பொரி, அவுரிவேர், வகைகுக்களஞ்சு (க) இவைகளைச்சூரணம்செய்து காலை மாலை பேன்பிடி அல்லது வெருகடிப்பிரமாணம் தேனிற்கொடுக்கவும்.

விக்கல், உவாந்தி, சுரம், இருமல்.

இவைகட்கு

அசுவகெந்திச் சூரணம்.

அமுக்கிராய்க் கிளங்கு, களஞ்சு (௬), திற்பிலி, கண்டங்கத்திரி விரை, வகைக்குக்களஞ்சு (உ). இவைகளைச் சூரணம்செய்து, வெருகடிப்

பிரமாணம் அல்லது பேன்பிடிப்பிரமாணம், காலை மாலை, கற்கண்டு அல்லது தேனிற்கொடுக்கவும்.

பழையசுரங்களுக்கு.

நவமூலிக் கஷாயம்.

தூதுளைவேர், கிறுகாஞ்சோன்றிவேர், சீந்திற்தண்டு, பர்படகம், நொச்சிவேர், பேராமுட்டிவேர், சிற்றாமுட்டிவேர், நிலவேம்பு சமூலம், பேய்ப்புடோல் சமூலம், கடுக்காய்த்தோல், மிளகு, வகைக்குகளஞ்சு (உ). இவைகளைநறுக்கி இடித்து, இரண்டுபடிதண்ணீரிலவித்து எட்டொன்றாக்கி அக்கஷாயத்தில், திற்பிலித்தூள்தூவி, காலை மாலை, ஒரு தேய்க்கறண்டி அல்லது இரண்டு கறண்டிவீதம் கொடுக்கவும்.

சகல சுரங்களுக்கும்.

பால சஞ்சீவி மாத்திரை.

சாதிலிங்கம், களஞ்சு (க0), வெண்காரம், நாவி, திற்பிலி, வகைக்குக் களஞ்சு (ரு), இவைகளைச்சுத்திசெய்து, வேட்பம்பூச்சாற்றாலரைத்து, உளுந்தளவு மாத்திரைசெய்து, நிழலுலர்த்தி, காலை, மாலை ஒருமாத்திரை சுக்குக் கஷாயத்தில்கொடுக்கச் சகலசுரங்களும்தீரும். மேற்படி நற்சீரகம், கிராம்பு, இவைகள் அவித்தகஷாயத்தில் கொடுக்க சுரங்களினாலெழுந்த சகல தாகங்களும் தீரும்.

"சுரரோகங்களுக்கு நீக்கவேண்டிய பதார்த்தங்கள்."

பாவற்காய், பயற்றங்காய், பறங்கிக்காய், மாங்காய், என்னும் சகல புளிவகைகள், பால், நெய், நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், இள

நீர், தயிர், மோர், பச்சைமீன், இறைச்சிவகைகள், தேங்காய், பருப்புவகைகள், முட்டை வகைகள், சந்தனம், புனுகு, அவல், பொரிவகைகள், கடலைவகைகள், பழவகைகள், பழையசாதம், இவைகளை அனுசரித்தால், சன்னி ரோகங்கள் தோற்றுவதற்குக்காரணமாகும்.

மாந்த சன்னி.

இதற்கு

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரி களஞ்சு (வ) கோரோசனை களஞ்சு (இ) குங்குமப்பூ களஞ்சு முக்கால், முலைப்பால்விட்டரைத்துக் குன்றிபோல் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை, ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்கவும்.

ஆம சன்னி.

இதற்கு

கோரோசனை மாத்திரை.

கோரோசனை களஞ்சு (இ) கோஷ்டம், மாயாக்காய், திற்பிலி, கருஞ்சீரகம், அக்கரா, வகைக்குக் களஞ்சு முக்கால். இவைகளை முலைப்பால் விட்டரைத்து குன்றிபோல் மாத்திரைசெய்து, நிழலுலர்த்தி, காலை மாலை, ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்கவும்.

கோராம சன்னி.

"ஏலாதி மாத்திரை."

இதற்கு ஏலம், கிலவங்கம், அதிமதூரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரிக்கிழங்கு, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், லாம்பிச்சம்வேர், தாழிசபத்திரி, நிலப்பனைக்கிழங்கு, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திற்பிலி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி, வகைக்குக்களஞ்சு (க) கோரோசனை களஞ்சு

(வ) குங்குமப்பூ களஞ்சு (இ) இவைகளில், கோரோசனை, குங்குமப்பூ, பிற னீங்கலாக, மற்றச்சரக்குகள்யாவும் இடித்துக் கல்வத்தில் இட்டு, முலைப்பால் விட்டரைத்து, அரைத்தமுடிவில், கோரோசனை, குங்குமப்பூ இரண்டு சரக்கு களையும் சேர்த்தரைத்துக் குன்றிபோல் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி, ஒரு மாத்திரை குணங்கண்டு முலைப்பாலில்கொடுக்கவும்.

தாந்திரிக சன்னி.

கஸ்தூரி மிறுத்தியாதி மாத்திரை.

இதற்கு :—கஸ்தூரி களஞ்சு (வ) கோரோசனை களஞ்சு (இ) குங்குமப்பூ களஞ்சு முக்கால் ஏலம், கொத்தமல்லி, சந்தனம், அக்கரா, அதிமதுரம் வகைக் குக் களஞ்சு (க) இவைகளை முலைப்பாலிலரைத்து சிறுபயறளவு மாத்திரை செய்து நிழலுலர்த்தி ஒவ்வொருமாத்திரை முலைப்பால், இஞ்சிச்சாறு, தேன் இவைகளிலுரைத்துக் குணங்கண்டுகொடுக்கவும்.

அந்தக சன்னி.

இதற்கு

சுவர்ன கோரோசனை மாத்திரை

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், சுத்திசெய்த ரசகற்பூரம், ரசசெந்தூரம், தங்கரேக்கு, முத்து, பவளம், அப்பிரக செந்தூரம், ஏலம், கிராம்பு, சாதிக்காய், வெண் கோட்டம், அக்கரா இவை வகைக்குக்களஞ்சு (வ) இம்மாத்திரை அரைக்கும் சாறுகளின்விபரம். வெற்றிலைச்சாறு, சந்தனக் கஷாயம், செண்பகப்பூக்கஷாயம் இவைகளை முறைப்படிவிட்டு மூன்றுநா ளரைத்து மல்லிபோல்மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை முலைப் பால், வெற்றிலைச்சாறு இவைகளிற்கொடுக்க சளி, இருமல் சுரம், சகலதும் சன்னி சகலதும், காசரோகம் இவைகள்யாவுந்தீரும்.

காமாலை ரோகமைந்துக்கும் விஷபாகவீக்கம் இவைகட்கும் பொதுவான

மண்டூர பஸ்பம்.

நாட்சென்ற மண்டூரம் முறைப்படி சுத்திசெய்து இடித்த சூரணம் களஞ்சு (ய௲) காந்தம், உருக்கசைபொடி, அன்னபேதி வகைக்குக்களஞ்சு (க) இவைகளையும் முறைப்படி சுத்திசெய்துவைத்துக்கொண்டு நற்சீரகம், கருஞ்சீரகம், உள்ளி, மிளகு, மஞ்சள், ஓமம், கராம்பு, வசுவாசி, சாதிக்காய், மதுரம், திற்பிலி, கடுக்காய்த்தோல் வகைக்குக் ளஞ்சு (க) இவைகளைச்சூரணஞ்செய்து மண்டூரசூரணத்துடன்கலந்து அம்மியிலிட்டு அரைக்கும்போது காந்தம் உருக்கசைபொடி, அன்னபேதி இவைகளைப்போட்டுப் பஸ்பமாயரைத்து காலை மாலை பேன்பிடி அல்லது வெருகடி பஸ்பமெடுத்துப் பனம்கருப்பட்டியிற் கலந்துகொடுக்க முன்சொல்லிய ரோகங்கள்தீரும்.—மேற்படி இப்பஸ்பம் வளர்ந்தபிள்ளைகளுக்கும்கொடுக்கலாம்.

வைசூரி ரோகங்கள் யாவற்றிற்கும்.

வைசூரியின்பேரிற் கபேப்புச் சீதம் இரத்தங்கண்டால்.

இதற்குப்பரிகாரம்:—கடுகுரோகணி, கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம், நாயுருவிவேர் வகைக்குக்களஞ்சு (க) இவைகளையிடித்து அரைப்படிதண்ணீர் விட்டவித்து எட்டொன்றுயெடுத்து இரண்டுசறண்டி கஷாயமும் ஒருசுறண்டி முத்தாமணக்கெண்ணெயுடன் கலந்து காலமேகொடுக்கவும்.

வைசூரியின்பேரில் அதிசாரம்கண்டால்.

இதற்குப்பரிகாரம்:—சீந்திற்தண்டு, கோஷ்டக்கிளங்கு, சுக்கு, அதிவிடயம் வகைக்குக்களஞ்சு (க) ஒருபடிதண்ணீர்விட்டவித்து நாலொன்றுக்கி காலை மாலை தேய்க்கறண்டிவீதம் தேன்சேர்த்துக்கொடுக்கவும்.

வைசூரியின்பேரில் சுரங்கண்டால்.

சந்தனக் கஷாயம்.

சந்தனம், ஏலம், எலும்பிச்சம்வேர், லாமிச்சம்வேர், சீந்திற்தண்டு, பற்படகம், கோரைக்கிளங்கு வகைக்குக்களஞ்சு (க) இவைகளை யிடித்து ஒருபடி தண்ணீர்விட்டவித்து எட்டொன்றாக்கி காலை மாலை தேய்க்கறண்டிவீதம் கொடுக்கவும். சுரம் அதிகம் இருந்தால் கஷாயத்தைக் கூட்டிக்கொடுக்கவும்.

வைசூரியினால் மலசலங்கட்டி வயிறு உப்பிசங்கொண்டால்,

ஏரண்டைத் தைலம்.

ஆமணக்கெண்ணெய்ப் படி அரைக்கால் இதில் ஈரவெண்காயம், கற்கண்டு வகைக்குக்களஞ்சு (உஇ) இவைகளையரைத்து எண்ணெயிற்கலக்கி காலை மாலை தேய்க்கறண்டிவீதங்கொடுக்கவும்.

வைசூரியினால் தாகங்கண்டால்.

கலங்கொம்புக் கஷாயம்.

கலங்கொம்பு அராவியிடித்த சூரணம்களஞ்சு (அ) இதை வெந்நீரிற் போட்டூறவைத்து குணங்கண்டு ஒருகறண்டி அல்லது இரண்டு கறண்டி வீதம் கொடுக்கவும்.

வைசூரியினால் கண்ணில் விதனங்கண்டால்.

நற்சீரகத்தை நன்றாய்ச் சுத்திசெய்து சீலையில்போட்டுப் பொட்டண மாய்க்கட்டி முலைப்பாலிலூறவைத்து கண்ணில் ஒத்தணஞ்செய்துவரவும்.

வைசூரியினால் வாயால் இரத்தங்கக்குவதற்கும் நீர்த்தாரையில் இரத்தம் காணுவதற்கும் பரிகாரம்.

(நன்னாரிக் கஷாயம்.)

நன்னாரிவேர், கலங்கொம்பு; பூநாகம் வகைக்கு கள்ஞ்சு (உ) பூநாகத்தை நன்றாய்ச்சுத்திசெய்து மற்றமருந்துகளுடன்சேர்த்துச் சாந்துபோலரைத்துக் கலங்கொம்பு ஊறினதண்ணீரிற்கரைத்துக் குணங்கண்டு ஒருகறண்டி அல்லது இரண்டு கறண்டி வீதங்கொடுக்கவும்.

வைசூரி நோய்கள் உற்பத்தியாகிச் சாந்தமானபிற்பாடு நடக்கவேண்டிய முறைமைகள்.

(1) பருத்திப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், நற்சீரகம் இவை ஓரள வெடுத்து மோர்விட்டரைத்து மோரிற்கரைத்து உள்ளுக்குக்கொடுக்கவும்.

(2) வேப்பிலை, மஞ்சள், அறுகு ஓரளவாயெடுத்தரைத்து உச்சிமுதல் பாதம்வரையும் தேய்த்து குளிர்ந்த தண்ணீரில் ஒன்றைவிட்டொருநாள் மூன்றுமுறை ஸ்நானஞ்செய்துவரவும்.

(3) வேப்பிலை, மஞ்சள் ஓரளவாயரைத்து வைசூரிப்புண்களில்பூசி பின் தயிரைத்தேய்த்துக் குளிர்ந்தண்ணீரில் முன்போல் மூன்றுமுறை ஸ்நானஞ் செய்வித்து அதன்மேற் ஆவரையிலையை மோரிலரைத்து சிரசிலும் உடம்பி லுந்தேய்த்து மூன்றுமுறை குளிர்ந்தசலத்தில் ஸ்நானஞ்செய்விக்கவும்.

(4) ஆமணக்கெண்ணெய் சிரசில்தேய்த்து உசிலமிலை, அரப்பு இவைகளை யரைத்துத்தேய்த்து குளிர்ந்தசலத்தில் ஸ்நானஞ்செய்யவும்.

(5) மோரும், ஈரவெண்காயமும் அன்னத்துடன் சேர்த்துக்கொடுக்கவும்.

(6) தேகங்குளிர்ந்து பெலக்கும்வரைக்கும் இந்நோய்கண்டவர்களுடைய கருவி கருணுதிகள் பெலங்கெட்டிருப்பதால் ஆறுமாசஞ்செல்லும் வரைக்கும் காரமான ஔஷதங்கள் உணவுகள் யாதுங்கொடுக்கலாகாது.

இம்முறைகளைத் தட்டிநடந்தவர்கள் உவாதிப்படுவார்கள்.

சின்னம்மை அல்லது சின்னமுத்து கொப்பளிப்பான்.

இவைகட்குப்பரிகாரம்:—கடுக்காய்த்தோல் நாயுருவிவேர், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைசமன் ஒருபடி தண்ணீர்விட்டவித்து எட்டொன்றுக்கி காலை மாலை இரண்டுகறண்டிவீதம் பனங்கல்லுக்காரஞ்சேர்த்து விரேசனமாகும். மேற்படி குடாநியகஞ்சித்தெளிவில் கல்லக்காரம்போட்டு இதே முறைப்படி கொடுக்கவும்.

கூகைக் கட்டு.

இதற்குப்பூச்சுமருந்து:—நத்தையோடு, செஞ்சந்தனம், அழுக்கிராய்க் கிழங்கு, எலுமிச்சம் புளிவிட்டரைத்து கண்டத்திற்பூசவும்.

அக்கரம்.

இதற்குக் குடிநீர்:—சந்தனம், கொத்தமல்லி, கடுக்காய்த்தோல் வகைக்குக்களஞ்சு (இ) செவ்வள்ளி, நாயுருவிவேர், தூதுளைவேர், வட்டுவேர், மாதுளம் பிஞ்சு, அத்திப்பட்டை, கொட்டைப்பாக்கு இவை வகைக்குக்களஞ்சு (வ) இலந்தையிலை, வல்லாரயிலை இவை வகைக்குப்பத்து அரைப்படி தண்ணீர் போட்டவித்து நாலொன்றுக்கி ஒருவயது தவங்கி இரண்டுவயது வரையிலும் ஒரு தேய்க்கறண்டியளவும் மேற்பட்டபிள்ளைகளுக்கு இரண்டு அல்லது மூன்று தேய்க்கறண்டிவீதம்கொடுக்கவும்.

மேற்படி நெய்:—சுக்கு, அதிமதுரம், மாயாக்காய், ஏலம், கிராம்பு, ஓமம், திற்பிலி, வசுவாசி, கோட்டம், கல்நார், வெளுத்தற்பிசின், நற்சீரகம் வகைக்குக்

களஞ்சு (இ) சித்தரத்தை, இலாம்பிச்சம்வேர், சந்தனம், சாஸ்திரபேதி, அக்கரா, அதிவிடயம். வகைக்குக்களஞ்சு (க) இவைகளையிடித்துச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு பசுநெய் படி வீசம் அடுப்பில்வைத்துக்காச்சி வெற்றிலை வெடிபதத்திலிறக்கி முற் சூரணத்தைப்போட்டாறவைத்து அரைக்காசளவு உள்ளுக்குக்கொடுத்து வாய்புண்ணுக்கும்பூச மேற்படி தீரும் நோய்கள் சணைக் காச்சல், சுரம், வீக்கம், கிரந்தி, சத்தி, இறுகிறுப்பு, தாகம்முதலிய நோய்கள் தீரும்.

குக்கல்.

அதிமதுரப் பாணி.

இதற்குப்பரிகாரம்:—அதிமதுரம் களஞ்சு (கசு) நறுக்கிக் காயவைத்திடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டவித்து நாலொன்றாக்கிவடித்து அக்கஷாயத்தில் சீனக்கற்கண்டுபோட்டு அடுப்பில்வைத்துப் பாகுபதத்திற்காச்சி குளந்தை குக்கல்நோயினல் வருந்தும்போது ஒரு தேய்க்கரண்டியளவு எடுத்து நாவில்தடவிவிடவும்.

மேற்படி நற்சீரகம், நருஞ்சீரகம், ஓமம், நாயுருவிசமூலம் வேலிப்பருத்தி சமூலம். வகைக்குக்களஞ்சு (வ) இவைகளையிடித்து அரைப்படிதண்ணீர்விட்டவித்து நாலொன்றாய்க்காச்சி வடித்து அக்கஷாயத்தில் மூன்றுகளஞ்சு கற்கண்டுபோட்டுப் பாணிப்பதமாய்க்காச்சி மூன்றுநாள் ஆறுநேரம்கொடுக்கவும். மேற்படி வளர்ந்தபிள்ளைகளுக்கு அணில் இறச்சியை பசுநெய்யிற் பொரித்து மூன்றுநாளைக்குக்கொடுக்கவும்.

தடிமன்.

இதற்குப்பரிகாரம்:—தூதுளை சமூலம், ஆடாதோடைவேர், கண்டங்கத்திரிவேர், கொத்தமல்லி, சித்தரத்தை, அரிசித்திற்பலி வகைக்குக்களஞ்சு (க) இவைகளை இடித்து அரைப்படிதண்ணீர்விட்டவித்து எட்டொன்றாக்கி மூன்றுநான் ஆறுநேரங் கற்கண்டுசேர்த்துக்கொடுக்கவும்.

காதிற்குத்து, காதடைப்பு, காதிலிருந்து சீவடிதல்.

இவைகட்குப்பரிகாரம் :—வேப்பெண்ணெய் படி அரைக்காலில் மூசுத்து முட்டை, பூநாகம், நண்டு இறைச்சி, உள்ளி, கோழிமுட்டையின் மஞ்சள்கரு, குக்கில், வசம்பு வகைக்குக்களஞ்சு (க) இவைகளை யிடித்துப்போட்டுக்காச்சி வடித்து காதிற்குள் இரண்டு மூன்று சொட்டுவிட்டு பஞ்சியினாலடைத்து விடவும்.

இருமல்.

கற்பூரவல்லியிலைச் சூரணம்.

கற்பூரவல்லியிலை நிழலிற்காயவைத்திடித்த சூரணம் களஞ்சு (கூஇ) நற்சீரகம், கருஞ்சீரகப், ஈரவெண்காயம், கிராம்பு, வசுவாசி, ஏலம், தூதுளங்காய் இவை வகைக்குக்களஞ்சு (இ) இவைகளை யுங்காயவைத்துச்சூரணமாக்கி முற்சூரணத்துடன்கலந்து அரைத்துப் பேன்பிடிப்பிரமாணம் காலை மாலை கற்கண்டுதூள் சேர்த்துக்கொடுக்கவும். மேற்படி அதைச்சுரத்திற்குச்சொல்லிய கோரோசனைமாத்திரையை கற்பூரவல்லியிலைச்சாறு, முலைப்பால் இவைகளிலுரைத்து முன்னேரம், பின்னேரம்கொடுக்கவும்.

கண்ணோய்.

இதற்குப்பரிகாரம் :—காலமே நித்திரைவிட்டெழுந்தவுடன் அடுக்கு நந்தியாவட்டப்பூவால் நீராகாரத்தண்ணீரில் பூவால்தொட்டுக் கண்ணைக் கழுவிவரவும் மேற்படி கண்ணில் வலியிருந்தால் கற்கண்டைப்பொடித்துப் பொட்டணஞ்செய்து புளிமாதுளம் பழச்சாற்றிலூறவைத்துக் கண்ணில் பிழிந்துவிடவும்.

உடற்கிருமி.

இதற்குப்பரிகாரம் :—மாதுளம்வேர், மிளகு, வாய்விளங்கம், கடுகுரோகணி வகைக்குக்களஞ்சு (க) இவைகளையிடித்து ஒருபங்கு தண்ணீர்விட்டு

நாலொன்ருய்க்காச்சி அக்கஷாயத்தில் ஆமணக்கெண்ணெய் அரை அவுஞ்சு விட்டு சீனிசேர்த்துக் கலக்கிக்கொடுக்கவும்—இதற்கு கிருமிகள்விளாதிருந்தால் மேற்படி சகலநோய்களுக்கும் பொதுவான பரிகாரங்களிற்சொல்லிய கிருமிநாசமாத்திரையைக்கொடுக்கவும்.

காச்சற் சட்டி.

கருங்கோழிப் பஸ்பம்.

இதற்கு:—இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, கறியுப்பு, கிராம்பு, சிறுநாகம்பு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திற்பிலி, கருஞ்சீரகம், உள்ளி, நற்சீரகம், வாய்விளங்கம், சாதிக்காய், இலவங்கபத்திரி, ஏலம், தாளிசபத்திரி, ஓமம், நவாச்சாரம், சத்திசாரம் இவைகள் வகைச்சுக்களஞ்சு (க) இவைகளில் இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, கறியுப்பு, நவச்சாரம், சத்திசாரம் இவைகள் பிறநீக்கலாக மற்றச்சரக்குகளைச்சூரணஞ் செய்து பிரண்டைச்சாறு, கொடிவேலிவேர், அவித்தகஷாயம், வேலிப்பருத்தியிலைச்சாறு, பேய்த்தும்மட்டிக்காய்ச்சாறு இவைகள் ஒவ்வொன்றையும் ஓரளவாய் எடுத்து முற்சூரணஞ்செய்துவைத்திருந்த சரக்குகளையும், உப்புவகைசாரவகைகள் எல்லாவற்றையும் சல்வத்திலிட்டு ஒவ்வொருசாறுகளையும் தனித்தனிமுறையேவிட்டு ஒவ்வொருசாமமரைத்து முதல் முதல் முட்டையிடுங் கன்னிப்பருவத்துக் கருங்கோழியைத்தோலுரித்துத் தலை குடல் கால் முதலியவைகளைநீக்கி கோழியின்நெஞ்சைப்பிளந்து அரைத்துவைத்திருந்த மருந்தை உட்செலுத்தி நூலினுல்தைத்துவிட்டு அளவான பெருஞ்சட்டியாக இரண்டு எடுத்து இரண்டுசெட்டிக்கும் உட்புறத்தில் மேற்படிசாறுகளை தழமாய்ப்பூசி ஒருசட்டியில் கோழியைவைத்து கையாந்தகரைச்சாறு கொத்து (க) குப்பமேனியிலைச்சாறுகொத்து (க) கோசலம்கொத்து (க) ஆகக்கொத்து (ங) இவைகளைச்சட்டியிலிட்டு பாகம்செய்துவைத்திருந்த கோழியை சாறு கன்விட்ட சட்டிக்குள்வைத்து மேற்சட்டிமூடி வாய்ப்புறத்துக்குவலுவாய்ச் சீலைமண்செய்து ஒருசாதிவிறகால் எரிக்கவும். சாறெல்லாம் வற்றியபின்

இறக்கிவைத்து எலும்புகள்யாவற்றையும் இறைச்சியிலிருந்து நல்லாய்ப் பிரித்து எடுத்து அவ்வெலும்புகளை எறிந்துவிட்டு மற்ற இறைச்சியையும் மருந்தையும் வெய்யிலிற்காயவைத்து சூரணமுறைப்படிசெய்து முன்னேரம் பின்னேரம் பேன்பிடிப்பிரமாணம் அல்லது வெருகடிப்பிரமாணம் நோயின் குணமறிந்துகொடுக்கத்தீரும் வியாதிகள் வெட்புக்காச்சலினால்வரும் காச்சல்க் கட்டி, சோகை, காமாளை, மகோதரம், குன்மவகைகள், பாண்டு, வாதம் இவையாவுந்தீரும். பத்தியம், மரக்கறி, மீன்வகை நீக்கவும். மேற்படி பால், நெய், மோர், கோழிமுட்டைசேர்க்கவும் பிரதானமாகச் சுத்திசெய்ய வேண்டிய மருந்துகளைக் கவனமாய்ச்சுத்திசெய்யவும்.

வெள்ளைபடுதல்.

பூரணச்சந்திராதி மாத்திரை.

இதற்கு:—காண்டாமிருகக்கொம்பு களஞ்சு (௪) பால்க்கருடபச்சை களஞ்சு (௨) சுக்கு, அதிவிடயம், விழாலரிசி, அக்கரா, தேவதாரம், அதிமதுரம், கிராம்பு, நன்னாரிக்கிழங்கு, வால்மிளகு, நற்சீரகம், சாதிக்காய், சிற்றரத்தை, சிற்றேலம், கறுவாப்பட்டை வகைக்குக்களஞ்சு அரைக்கால் நத்தைச் சூரிவிரைகளஞ்சு ஒன்றேமுக்கால் இதிற் கொம்பை மிருதுவாக அராவி கருடபச்சையையும் சுத்திசெய்து மற்றச்சரக்குகளையுஞ் சூரணஞ்செய்து யாவற்றையும் கல்வத்தில்போட்டு சீந்தில்தண்டுச்சாற்றால் ஒருநாளும் பொன்னாங்காணிச்சாற்றால் ஒருநாளும் ஓரிலைத்தாமரையிலைச்சாற்றால் ஒருநாளும் முறைப்படியே அரைத்து குன்றியளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை பசும்பாலில் உரைத்து சீனிசேர்த்துக்கொடுக்க பாலர்களின் கணைச்சூட்டினாலெழுந்த அத்திச்சூடு, வெள்ளைபடுதல் இன்னும் அநேகநோய்கள் தீரும். மேற்படி நத்தைச்சூரிவிரையைத் தண்ணீரில்போட்டு நல்லாய் ஊறியபின் எடுத்தரைக்கவும்.

வெந்தயச் சூரணம்.

வெந்தயங்களஞ்சு (ச) பசுநெய்விட்டுப்பிசறி சட்டியிற்போட்டுப்பொன்னிறமாய்வறுத்து கொட்டிவைத்துக்கொண்டு அதிவிடயம், குருசாணி ஓமம், நற்சீரகம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளையும் முன்போலப்பொன்னிறமாக வறுத்து எல்லாவற்றையும் ஒன்றுபடக்கலந்து அம்மியிற்போட்டு பஸ்பமாக வரும்வரைக்கும் அரைத்துவைத்துக்கொண்டு பேன்பிடி அல்லது வெருகடிப் பிரமாணம் காலமே தயிரிலும் பின்னேரந்தேனிலும்கொடுக்கவும்.

மேற்படி நற்சீரகநெய்.

நற்சீரகம்களஞ்சு (ச) அதிவிடயம்களஞ்சு (க) ஓமம், வசுவாசி, காசுக்கட்டி, சுக்கு, கிராம்பு வகைக்துக்களஞ்சு (இ) இவைகளைச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு பசுநெய் படி (வ) சட்டியில்விட்டு அடுப்பேற்றிக்காச்சி வெற்றிலை வெடிபதத்திலிறக்கி முற்சூரணத்தைப்போட்டுக்கிளறி ஆறவைத்து ஒரு தேய்க்கரண்டிவீதம்கொடுக்க வயிற்றுளைவு, இரத்தக்களிச்சல், மூலக்கிருணி, வறட்சி, உட்காச்சல் இவையாவுந்தீரும்.

செங்கண்மாரி.

இதற்குப்பரிகாரம்:—கீழ்காய்நெல்லிச்சாறு ஒருபங்கு, பசுப்பால் இரண்டுபங்கு, நற்சீரகம், அவித்தசஷாயம் ஒருபங்கு இவைகளை யொன்றுபடக் கலந்து மூன்றுநாள் ஆறுநேரங்கொடுக்கவும் தீராவிடில் பூரணசந்திராதி மாத்திரையை முன்மருந்தில் உரைத்துக்கொடுக்கவும்.

மேற்படி வெட்டிவேர்த் தைலம்.

வெட்டிவேர், இலாம்பிச்சம்வேர், நற்சீரகம், அதிவிடயம், அதிமதுரம், கோட்டம், சந்தனம் வகைக்குக்களஞ்சு (உ) பொன்னாங்காணி, கையாந்தகரை, சிறுகீரை வகையொன்றுக்குச்சாறு படி (வ) எலுமிச்சம்புளி, நல்லெண்ணெய் வகைக்குப்படி (இ) இதில் சரக்குகளை சூரணஞ்செய்து எலும்

பிச்சம்புளிவிட்டரைத்துக்கரைத்து எண்ணெய்சாறுகளுடன்கலந்து பதத்திற் காய்ச்சி வடித்து தலைக்குவைத்து ஸ்நானஞ்செய்துவரவும்.

தொய்வு.

இதற்குப்பரிகாரம்:—இக்கிரி சமூலம், சித்தரத்தை, மிளகு, மதுரம் இவைசமனெடுத் திடித்தவித்தகஷாயத்தில் அஸ்தி சுரத்திற்குச்சொல்லிய கோரோசனை மாத்திரையையுரைத்து முலைப்பால்கலந்துகொடுக்கவும்.

சர்வ வாதங்களுக்கும்.

வாதகேசரித் தைலம்.

புளியிலைச்சாறு, நொச்சியிலைச்சாறு, எருக்கிலைப்பழுத்தவிலைச்சாறு, வாதமடக்கியிலைச்சாறு, முடக்கொத்தானிலைச்சாறு, வெள்ளாட்டுப்பால், ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி (இ) உள்ளி, வசம்பு வகைக்குக்களஞ்சு (உ) இவைகளை முற்சாறுகளிலரைத்துக்கரைத்து எண்ணெய்யுடன் சேர்த்துக்காய்ச்சிப் பதமாய்வடித்து தலைக்கும்வைத்து உடம்பிலும்பூசி முழுகிவர பாலர்களின் அநேக வாதரோகங்கள்தீரும்.

படர் தேமல்.

இதற்குப்பரிகாரம்:—பண்டித்தகரை விதை அல்லது புரசப்விதை இவைகளை எலும்பிச்சம்புளிவிட்டரைத்துப் பூசவும். மேற்படி கலைமான்கொம்பு, மாயாக்காய் இவைகளிலொன்றை முன்சொல்லிய சாற்றிலரைத்துப்பூசவும்.

சணைநோய் இதற்கு

பொன்னாங்காணி நெய்.

பொன்னாங்காணியிலைச்சாறு, கீழ்காய்நெல்லிச்சாறு, துளசியிலைச்சாறு, பளம்பாசியிலைச்சாறு, வல்லாரையிலைச்சாறு, சொவ்வையிலைச்சாறு, சாத்தா

வாரிக்கிழங்குச்சாறு வகைக்குப்படி அரைக்கால் நன்னாரிவேர், சிற்றாமுட்டி வேர், வில்வவேர், மருதம்பட்டை, கருவேலம்பட்டை, ஆடுதின்னாப்பாலைக் காய் வகைக்குக்களஞ்சு (க) சாதிக்காய், வசுவாசி, கல்நார், அதிமதுரம், திற்பிலி, நற்சீரகம் வகைக்குக்களஞ்சு (வ) வேர்சரக்குகளைக் காயவைத்திடித்து சாறுகளைவிட்டரைத்துக்கரைத்து பசுநெய் படி (வ) உடன்சேர்த்துப் பதத்திற் காச்சிவடித்து காலை மாலை தேய்க்கரண்டிவீதம்கொடுக்கவும். மேற்படி வளர்ந்தபாலர்களுக்கு இரண்டு கரண்டிவீதம்கொடுக்கவும்.

மேற்படி சாத்தாவாரி நெய்.

சாத்தாவாரிக்கிழங்குச்சாறு, வெள்ளாட்டுப் பால், பசுப்பால், தேங்காய்ப்பால் வகைக்குப்படி அரைக்கால், சீனிகற்கண்டு வகைக்குக்களஞ்சு (ச) சேர்த்து மெழுகுபதமாகவடித்து ஒருதேய்க்கரண்டியளவு காலை மாலை கொடுக்கவும்.

வேறு ஆட்டுப்பால் எண்ணெய்.

ஆட்டுப்பால், பசுப்பால், நல்லெண்ணெய் வகைக்குப்படி (இ) சிற்றாமுட்டிவேர் களஞ்சு (ச) செங்கழுநீர்க்கிழங்கு, லாம்பிச்சம்வேர், கோரைக்கிழங்கு, நன்னாரிவேர் இவை வகைக்குக்களஞ்சு (உ) சுக்கு, ஏலம், கோட்டம், மதுரம், சந்தனம், இருவேலி இவை வகைக்குக்களஞ்சு (இ) வேர்சரக்குகளைக் காயவைத்திடித்து பசுப்பால்விட்டரைத்துக்கரைத்து எண்ணெய்யுடன் சேர்த்து பதத்திற்காச்சி வடித்து தலைக்குவைத்துச் சீயாக்காய்தேய்த்து முழுக்காட்டவும்.

வலி.

முலைப்பால் குளிகை.

அத்தம், துரிசி, திற்பிலி, சாஸ்திரபேதி, பொரிகாரம், நெல்லிவற்றல், சாதலிங்கம் வகைக்குக்களஞ்சு (இ) முறைப்படி சுத்திசெய்த வாளம்களஞ்சு (கஇ) இவைகளை முலைப்பால்விட்டரைத்து மிளகுபிரமாணம்குளிகைசெய்து

நிழலுலர்த்தி முலைப்பாலி லரை மாத்திரை யல்லது ஒருமாத்திரை கொடுக்கவும்.

முலைக்கொடுக்கும்மாதர் பத்தியமாயிருக்கவேண்டும்.

இந்நோயிற் தோன்றிய சிலகுணங்களுக்கு அக்கராக்குளிகை சிவன் குளிகை இவைகளையுங்கொடுக்கலாம்.

வீக்கத்துக்கு.

வாத கரப்பனுக்குச்சொல்லிய கஷாயத்தைக்கொடுக்கவும்.

விக்கல்.

இதற்குப்பரிகாரம்:—தேற்றுவிரைகளஞ்சு (உ) சந்தனம், மான்கொம்பு வகைக்குக்களஞ்சு (க) இவைகளை முலைப்பால்விட்டரைத்து இலந்தைக்கனியளவு எடுத்து இளநீரிற்போட்டுக்கலக்கி வெண்காரம் பொரித்து மாவாக்கிப்போட்டு வெல்லம்சேர்த்துக் காலை மாலை கொடுக்கவும்.

மேற்படி நற்சீரகச் சூரணம்.

நற்சீரகம் களஞ்சு (ய) திற்பிலி களஞ்சு (அ) இவைகளைச்சூரணமாக்கி மயிலிறகு, சுட்டசாம்பல் களஞ்சு (உ) மூற்சூரணத்துடன் கலந்தரைத்து வெருகடி சூரணம் தேனிற்கொடுக்கவும்.

வேறு.

திற்பிலிச் சூரணம்.

திற்பிலி களஞ்சு (உ) கடுகுரோகணி, மயிலிறகு சுட்டசாம்பல் வகைக்குக்களஞ்சு (க) இவைகளைச்சூரணஞ்செய்து தேனிற்கலந்துகொடுக்கவும்.

வேறு எனுதி.

திற்பிலி, நெற்பொரி, சர்க்கரை இவை சமனெடுத்து அம்மியிற்போட்டு மாதுளம்பழச்சாறு, தேன் இவைகளை முறைப்படிவிட்டு எனுதிப் பதத்திலரைத்து இலந்தைக்கனியளவுகொடுக்கவும்.

உவாந்தி ஓங்காளம்.

இவைகட்குப்பரிகாரம்:—கலங்கொம்பு களஞ்சு (உ) திற்பிலி, அதிவிடயம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளைத் தேனிலரைத்துத் தூதுளங்காயளவு மாத்திரைசெய்துகொடுக்கவும்.

உவாந்தி விக்கல்.

இவைகட்குப்பரிகாரம்:—கோரைக்கிளங்கு, நாவற்றுளிர், வேப்பந்துளிர் சுக்கு, ஓமம் வகைக்குக்களஞ்சு (க) ஓமத்தை பொன்னிறமாகவறுத்து துளிர்கள் சுக்கு முதலியவற்றுடன்கலந்து ஒருபங்கு தண்ணீர்விட்டவித்து நாலொன்றுய் எடுத்து குணங்கண்டு பிரமாணமறிந்துகொடுக்கவும் இம்மருந்து வெள்ளோங்காளம், சத்தி, விக்கல், பித்தம் இவைகட்கும்கொடுக்கலாம்.

மார்பிற் சளி, கோழைகட்டு.

இந்நோய்களுக்கு அஸ்திசுரத்திற் சொல்லிய கோரோசனை மாத்திரையைக்கொடுக்கவும்.

சாம்பல் மண் புசிக்கிறபிள்ளைகட்கு.

இதற்குப்பரிகாரம்:—கீழ்க்காய்நெல்லிவேர் களஞ்சு (ங) கடுக்காய்த்தோல்களஞ்சு (உ) மிளகுகளஞ்சு (ங) புளித்தமோரிலரைத்து ஒரு இலந்தைக்கனியளவு எடுத்து மோரிற்போட்டுக் கலக்கி காலை மாலை கொடுக்கவும். மேற்

படி முகவுரையிற்சொல்லிய குணங்களுக்கு மண்டேபஸ்பமும்கொடுக்கலாம்.

எண்ணைத் தொங்கலுக்கு.

இதற்குப்பரிகாரம்:—செங்கட்டியைச் சட்டியிற்போட்டு நல்லாய்ப் பழுக்கவறுத்து ஒருபடிதண்ணீர்விட்டு அவித்து எட்டொன்றாயெடுத்து மூன்று நேரங்கொடுக்கவும். மேற்படி இஞ்சி, மிளகு ஓாளவெடுத்து வறுத்து ஒருபங்கு தண்ணீர்விட்டு அதில் எட்கிளாய்சுட்டு சாம்பலாக்கிப்போட்டு அவித்து நாலொன்றாய்க்கிக்கொடுக்கவும்.

அதிசாரக் கழிச்சல்.

இதற்குப்பரிகாரங்கள்:—அத்திப்பட்டை, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வில்வவேர், திற்பிலி, சிறுநாகப்பூ வகைக்குக்களஞ்சு (க) இவைகளை யிடித்து இரண்டுபடிதண்ணீர்விட்டவித்து எட்டொன்றாகவெடுத்து குணம் கண்டு தேய்க்கரண்டிவீதம் தேன்விட்டுக்கொடுக்கவும்.

வேறு பூ மாதுளம்பூ மாத்திரை.

பூ மாதுளம்பூ களஞ்சு (உ) அதிவிடயம், மதுரம், சாதிக்காய், நற்சீரகம், ஓமம், வசுவாசி வகைக்குக்களஞ்சு (க) இவைகளை அத்திப்பட்டைக் கஷாயத்திலரைத்து தூதுளங்காயளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை காலை மாலை மேற்சொல்லிய கஷாயத்தில் தேன்சேர்த்துக் கொடுக்கவும்.

வேறு கபாட மாத்திரை.

சாதிக்காய், வசுவாசி, நற்சீரகம், அதிவிடயம், இலவங்கம், மூங்கிலரிசி வெர்தப்பம், கழற்சிப்பருப்பு, குருசாணி, அசுமதாகம் வகைக்குக்களஞ்சு (இ)

அவின் களஞ்சு (வ) இவைகளைக் கஞ்சாச்சாறுவிட்டரைத்து சிறுபயறுப்பிர மாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை யொருமாத்திரை இதனை வாழைப்பூச்சாற்றில் தேன்கலந்துகொடுக்கவும் அல்லது அத்திப்பட்டைக் கஷாயத்தில்கொடுக்கவும்.

வயிற்றிரைச்சல், விஷமூலக்கடுப்பு, களச்சற், கணம்.

அதிவிடைய மாத்திரை.

இவைகட்குப்பரிகாரம்:—அதிவிடயம் களஞ்சு (க) கோஸ்டம், கிராம்பு, மதுரம், முள் இலவம்பிசின், விழாம்பிசின், சாதிக்காய், வசுவாசி, சடாமாஞ்சில், சன்னலவங்கம் வகைக்குக்களஞ்சு (இ) இவைகளைச்சூரணம்செய்து பாதுளங்காயொன்றெடுத்து அதற்குள்ளிருக்கும் வித்தைநீக்கிப்போட்டு சூரணத்தையதற்குள்செலுத்தி அணிசுத்தி அதற்குமேல் சாணிபூசிக்காயவைத்து கருகாமல் பிடம்விட்டெடுத்து கவசம்நீக்கி கஞ்சாச் சாறுவிட்டரைத்து குன்றிபோல்மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை யொருமாத்திரை கஞ்சாவிலை, தென்னங்குரும்பை, தென்னம்பூ, இதாவாழைப்பூ இவைகளிடித்தசாற்றிலாவது அல்லது தேன், எருமைத்தயிரிலாவது உரைத்துக் கொடுக்கவும்.

விடாக்கழிச்சல்.

அவின் மாத்திரை.

அவின் களஞ்சு (இ) சாதிக்காய், அதிவிடயம், வசுவாசி வகைக்குக் களஞ்சு (க) அத்திப்பட்டைக் கஷாயத்தாலரைத்துக் குன்றிபோல்மாத்திரை செய்து நிழலுலர்த்தி காலை மாலை ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்கவும்.

நற்சீரக மாத்திரை.

நற்சீரகம் களஞ்சு (க) சாதிக்காய், வசுவாசி, இலவங்கம், ஏலம், அதிமதூரம், அதிவிடயம், கஞ்சா, குருசாணி, கோரைக்கிளங்கு, வெந்தயம், சிறுநாகப்பூ, புளியம்விதைத்தோல், அத்திப்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு வகைக்குக் களஞ்சு (இ) அபின் களஞ்சு (வ) அபின் பிறநீங்கலாக மற்றவைகளையிடித்துக் காயவைத்துச் சூரணமாக்கிப் பொட்டலங்கட்டி பசுப்பாலில் புட்டவியல் செய்து அபினையும்சேர்த்து மாதுளம்பழச்சாற்றிலரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை காலை மாலை சர்க்கரை அல்லது தேனிற்கொடுக்கவும்.

பாலர்களுக்கு மருந்துகொடுக்கவேண்டிய நல்நாட்கள்.

வியாழக்கிளமை, செவ்வாய்க்கிளமை இந்நாட்களில் கொடுப்பதுநன்று மேற்படி ஞாயிற்றுக்கிளமை எல்லாநாட்களிலும்பார்க்க உத்தமம்.

மருந்துகொடுக்கக்கூடாத நாட்கள்.

சனிக்கிளமை, புதன்கிளமை, திங்கட்கிளமை ஆகிய இந்நாட்களில் மருந்து கொடுக்கக்கூடாது. வெள்ளிக்கிளமை உட்கொள்ளில் நோயதிகப்படும்.

கடூரமான நோய்களுக்கு நாட்கள் பார்க்கதேவையில்லை.

"சகல நோய்களுக்கும் பொதுவான பரிகாரங்கள்."

கஸ்தூரி மாத்திரை.

கஸ்தூரிகளஞ்சு (வ) கோரோசனைகளஞ்சு (இ) குங்குமப்பூகளஞ்சு (இ) பச்சைக்கற்பூரம் களஞ்சு (இ) சாம்பிராணிப்பதங்கம் களஞ்சு (இ) சுக்கு, மதூரம், அக்கரா, வெண்கோட்டம், ஏலம், வகைக்குக்களஞ்சு (க) இதில் முன்னெழுதியசரக்குகள் ஐந்தையும் பிறனீங்கலாகவைத்துக்கொண்டு, மற்றச் சரக்குகள்யாவையும் சூரணம்செய்து கல்வத்திற்போட்டு மாசிபத்திரி, குங்குமப்பூ, சந்தனம், வெட்டிவேர், இந்தச்சரக்குகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே கஷாயம்செய்து, ஒவ்வொருசாமம் முறையே யரைத்து, பிறனீங்கலாகவைத்திருந்த சரக்குகளையும்போட்டுச்சேர்த்தரைத்து, சிறுபயரளவு மாத்திரைசெய்து, நிழலுலர்த்தி, காலை மாலை அரைமாத்திரை அல்லது ஒரு மாத்திரை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், இவைகளிற்கொடுக்கச் சன்னி, தொண்டைக்கட்டு, சுரம், தோஷம், இவைமுதலிய ரோகங்கள்தீரும். முலை கொடுக்கும்மாதர், புளி நீக்கி இச்சாபத்தியமாயிருந்தால் நன்று.

கிரந்தியெண்ணை.

நற்சீரகம், கருஞ்சீரகம், திற்பிலி, கிருமிசத்துரு, மதூரம், கடுக்காய்த் தோல், சுக்கு, மிளகு, வகைக்குக்களஞ்சு (க) செங்கத்தாரி வேர்பட்டை, குன்றுமணிவேர், சடைக்காவிளாய்வேர், வகைக்குக்களஞ்சு (ச) சரக்குகளையும், வேர்களையும் காயவைத்திடித்துத் தூளாக்கி கஞ்சாம்கோரைச்சாறு, இயங்கிலைச்சாறு, கிரந்திகள் நாயன்சாறு, கறுத்தப்பூக் கொடியிலைச்சாறு, சரக்கொன்றையிலைச்சாறு, மொசுமொசுக்கையிலைச்சாறு, கற்பூரவல்லி இலைச்சாறு, கையாந்தகரையிலைச்சாறு, செம்பரத்தம் பூச்சாறு, நீரவெண்காயச்சாறு, வகைக்குப்படி (வ) இந்தச்சாறுகளில், முன்னிடித்த சூரணத்தை அரைத்துக்கரைத்து நல்லெண்ணை படியொன்று கூடவிட்டுக்கலந்து, காய்ச்சிப் பதத்தில்வடித்து காலை மாலை ஒரு தேய்க்கறண்டிவீதம் உள்ளுக்கும்

கொடுத்துத் தலைக்கும்வைக்கவும். மேர்படி எண்ணை தலைக்குவைத்து மூன்றும்நாள் சீயாக்காய்தேய்த்து முழுக்காட்டவும். சிறுவர்களாயிருந்தால் இலந்தை இலை அரைத்து தலைக்குப் பிரட்டிமுழுக்காட்டவும்.

"கணை நெய்."

வசுவாசி, ஓமம், மஞ்சள், ஏலம், திற்பிலி, நற்சீரகம், கடுக்காய்த்தோல், மதுரம், மிளகு, மல்லி, அக்கரா, கோட்டம், மாயாக்காய், கிராம்பு, கல்நார், கருஞ்சீரகம், பீநாறி, செஞ்சந்தணம், லாம்பிச்சம்வேர், வகைக்குக்களஞ்சு (வ) பசு நெய்படி (வ) சரக்குகளைச்சூரணம்செய்து நெய்யைச்சட்டியில் விட்டு அடுப்பின்மீதுவைத்து ஈரவெண்காயம் களஞ்சு (உ) வேலிப்பருத்திப் பூ களஞ்சு (க) இவைகளை நெயிற்போட்டு சிவந்துவருகிறபதத்தில், சூரணம் போட்டுகிளறி, இறக்கி, நெய்யைவடித்துக் காலை, மாலை தேய்க்கரண்டிவீதம் கொடுக்க அக்கரம், தனிச்சுரம், களிச்சல், தோஷம், இவைகள்நீங்கும்.

"மந்தநாச மாத்திரை."

கருவேப்பந்துளிர், நிலபாவற்றுளிர், சாறணைக்கிளங்கு, இவைகளைக் காயவைத்திடித்த சூரணம் வகைக்குக்களஞ்சு (ச) கடுகு, உள்ளி, மிளகு சுக்கு, கிராம்பு, வெந்தயம், மல்லி, பெருங்காயம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளையும் இடித்துச்சூரணமாக்கி முற்சூரணத்துடன் கலந்து இஞ்சிச் சாறுவிட்டு இரண்டுசாம மரைத்து இலந்தைக்கனிபோல் மாத்திரைசெய்து காலை, மாலை ஒருமாத்திரை வெந்நீரிற்கொடுக்க மாந்தம், பெருங்களிச்சல், மலசலக்கட்டு, பொருமல், சூத்து, ஓங்காளம், புளித்தேப்பம் இவைகள் யாவும்தீரும்.

அக்கினிகுமாரன் மாத்திரை.

சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, அதிவிடயம், ஓமம், கருஞ்சீரகம், திற்பிலி, குருசாணி, விளாலரிசி, கடுக்காய் சுட்டகரி, சீலை சுட்டகரி வகைசமன்

களஞ்சு (க) இவைகளைச்சூரணமாக்கி நாவற்கொளுந்தெடுத்து பிட்டவியல செய்து பிழிந்தசாற்றால் மாத்திரைப் பதத்திலரைத்து தேற்றுவிதைப்பிர மாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரைதேனிற்கொடுக்க ஊது மாந்தம், மந்தம், வயிற்றுக்குத்து, அக்கினிமாந்தம் இவையாவும்தீரும். மேற் படிநாவற்றுளிர்பிட்டவித்தகஷாயத்தில் ஒருமாத்திரைகொடுக்க வயிற்றுப்பல், பொருமல், செமியாக்குணம், கழிச்சல்தீரும். மேற்படி வேப்பம்பிசின் அவி த்த கஷாயத்தில் ஒருமாத்திரைகொடுக்க நீர்ப்படுவன், அதிசாரம்நீங்கும்.

சந்திரோதய மாத்திரை.

மான்கொம்பு, உருத்திராக்கம் வகைக்குக்களஞ்சு (க) சித்தரத்தை, பேரா த்தை, கோரைக்கிளங்கு, தேற்றுங்கொட்டை, அதிமதுரம், சுத்திசெய்த சாதிலிங்கம் வகைக்குக்களஞ்சு (க) இவைகளுள் சாதிலிங்கம் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளில் தேற்றுங்கொட்டையை பிருதுவாய்வெட்டி தண்ணீரிற் போட்டு மூன்றுநாளூறவைத்து சரக்குகளைச்சூரணமாக்கி சந்தனத்தூள், வில்வவேர் இடித்ததூள் வகைக்குக்களஞ்சு (௪) ஒருநாழி தண்ணீர்விட் டவித்து எட்டொன்றாய்க்கஷாயஞ்செய்து சரக்குகளை கல்வத்தில்போட்டு இக்கஷாயத்தைவிட்டு மூன்றுசாம மரைத்து ஊறவைத்திருந்த தேற்றுங் கொட்டையைப்போட்டு ஒருசாம மரைத்து அரைத்தமுடிவில் சாதுலிங்கத் தையுஞ்சேர்த்தரைத்து குன்றியளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத் திரை காலை மாலை இஞ்சிச்சாறு, தேன், முலைப்பாலிலுரைத்துக்கொடுக்க அக்கரம், இருமல், சுவாதம், மூச்சு இன்னுமனேக ரோகங்கள்தீரும்.

மாந்தக் குளிகை.

ஓமம், திற்பிலி, சுக்கு, வசம்பு, பெருஞ்சீரகம், நற்சீரகம், சாரணைக் கிளங்கு, கொத்தமல்லி, குருசாணி வகைக்குக்களஞ்சு (இ) வெந்நீர்விட் டரைத்து துவரையளவுமாத்திரைசெய்து நிழலுலர்த்தி குணங்கண்டு ஒரு மாத்திரை அல்லது இரண்டுமாத்திரை வெந்நீரிலுரைத்துக்கொடுக்க மாந்த வகைகள்தீரும்.

தேற்றாங்கொட்டைக் குளிகை.

தேற்றாங்கொட்டை, மதுரம், திற்பிலி, கிராம்பு, மாயாக்காய், கடுக்காய்த் தோல், சிறுதேக்கு, இந்துப்பு, சித்தரத்தை, வெளுத்தசற்பிசின், கடுகுரோகணி, அக்கரா வகைகளுக்களஞ்சு (க) இதில் தேற்றாங்கொட்டையைச் சந்திரோதயமாத்திரைக்குச் சேர்க்கும்மாதிரிச்செய்து மற்றச்சரக்குகளை ஆடாதோடைச்சாற்றிலரைத்து தூதுளங்காயளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை காலைமாலை முலைப்பாலில்கொடுக்க அக்காமும், நாய்முள்ளுந் தீரும். மேற்படி அதிமதுரம், வில்வவேர் அவித்தகஷாயத்திற்கொடுக்க உள்வேகமும், மேற்படி பொடுதலைச்சாறு, வேலிபருத்தியிலைச்சாறு, இந்துப்பு இவைகள் சேர்த்துக்கொடுக்க மார்தமும், அத்திப்பட்டை, ஆவாசம்பட்டை, மாதுளங்காயோடு இவைகளவித்த கஷாயத்திற்கொடுக்கக் காச்சல், கழிச்சல் தீரும்.

ஊறுகாய் மாங்கொட்டைக்குளிகை.

ஊறுகாயின் மாங்கொட்டைப்பருப்புக்களஞ்சு (உ) வெந்தயம், கிராம்பு, வசுவாசி, இஞ்சி, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், திற்பிலி வகைக்குக்களஞ்சு (க) வசம்புகளஞ்சு (அ) வசம்பை எருமைசாணியில்பொதிந்து நெருப்பிற்பிட மிட்டெக்கவசம் நீக்கி இடித்துச் சூரணஞ்செய்து மற்றசரக்குகளையுஞ்சூரணஞ் செய்து ஒன்றுபடக்கலந்து கல்வத்தில்போட்டு நொச்சிச்சாறுவிட்டு குளிகைப்பதத்திலரைத்து தூதுளங்காயளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலைமாலை ஒருகுளிகை வெந்நீரிற்கொடுக்க மாந்தவகைகள் செரியாமை இவைகள் தீரும்.

வெள்ளைவெண்காயக் குளிகை.

வெள்ளைவெண்காயம் தோலுரித்து களஞ்சு (சஇ) மல்லி, கிராம்பு, கருவா, சித்தரத்தை, வசப்பு, சாதிக்காய், ஓமம், நற்சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, காந்தம், மிளகு, வெண்காரம், கடுக்காய், சதகுப்பை, பொரிகாரம், வசுவாசி, பெருங்காயம், அக்கரா, கோட்டம், கடுகு, கல்லுப்பு, திற்பிலி

வெந்தயம், இந்துப்பு, கடுகுரோகணி வகைக்குக்களஞ்சு (வ) இச்சரக்குகளில் வெள்ளைவெண்காயம், காந்தம், வெண்காரம், பொரிகாரம், கல்லுப்பு, இந்துப்பு இவைகள் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை இடித்துச் சூரணமாக்கி கல்வத்தில்போட்டு மேற்படி பிறநீங்கலாக வைத்திருந்த சரக்குகளில் வெள்ளைவெங்காயம் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை சுத்திசெய்து சரக்குகளுடன் கலந்து உத்தமாகாணிச்சாற்ருல் நல்லாயரைத்து முடிவில் வெள்ளைவெண்காயத்தைப்போட்டு யரைத்து தூதுளங்காயளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை பொதுவாக வெந்நீரிற்கொடுக்க வலி, மாந்தக்களிச்சல், சகலவாய்வுகள், செரியாமை, மாந்தம் இவைதீரும். மேற்படி குணங்கண்டு இஞ்சி, தேன், முலைப்பாலிலும் கொடுக்கலாம்.

மாந்தத்துக்கு எண்ணெய்.

நற்சீரகம், ஏலம், மிளகு, கடுக்காய்த்தோல், உள்ளி, வசம்பு, கோட்டம், இலவங்கம், சுக்கு, திற்பிலி, கருஞ்சீரகம், தேவதாரம் வகைக்குக்களஞ்சு (க) சிற்றவரை, உத்தமாகாணி, ஓரிதழ்த்தாமரை இவைசமூலம் இவைகளை நிழலில் காயவைத்து தனித்தனி இடித்த சூரணம் ஒவ்வொன்றும்களஞ்சு (உ) ஒன்றுபடக் கலந்துவைத்துக்கொண்டு சரக்குகளையுமிடித்துச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு நல்லெண்ணெய் கொத்து (வ) சட்டியில்விட்டுகாச்சி நெற்பொரிபதத்திலிறக்கி சரக்குச்தூளில் நாலு களஞ்சு போட்டுத்துளாவி மேற்படி இலைத்தூள் களஞ்சு ஆறு போட்டுத்துளாவி ஆறியபின் காலை மாலை தேய்க்கறண்டிவீதம்கொடுக்க மாந்தவகைகள்மாறும்.

மாந்த வில்லை.

சுக்கு, மிளகு, திற்பிலி, வசம்பு, பெருங்காயம், ஓமம், உள்ளி, கருஞ்சீரகம், மூலம், காஞ்சொறி கொச்சி, தயிர்வேளை, குப்பைமேனி இவைகள் துளிர் வகைக்குக்களஞ்சு (க) குப்பைமேனி, நொச்சி இவைகளின் சாறுவிட்டு முறையே ஒவ்வொருசாம மரைத்து வில்லைசெய்து சட்டி சாயவைத்து

வில்லைகளை சட்டியில் பதத்துக்குவறுத்தெடுத்துக் காலை மாலை ஒருவில்லை அல்லது இரண்டுவில்லை வெந்நீரில் உரைத்துக்கொடுக்க முற்சொல்லிய நோய் தீரும்.

சிவன் குளிகை.

நெல்லிக்காய்க்கெந்தகம், வாலரசம், குருசாணி, அரிசிதிற்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், ஊமத்தம்விதை, குன்றுமணிப் பருப்பு, வெண்காரம் வகைக்குக்களஞ்சு (வ) இவைகளில் கெந்தகம், ஊமத்தம்விதை, வெண்காரம், வாளம் இவைகளை நல்லாய்ச்சுத்திசெய்து மற்றச்சக்குகளில் ரசமும், கெந்தகமும் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை கல்வத்தில்போட்டு முலைப்பால்விட்டரைத்து அரைத்த அரைவாசியில் கெந்தகத்தைப்போட்டு நசுக்கி அதற்குமேல் ரசத்விட்டு ஒன்றுபட எல்லாவற்றையும் மருந்து கறுக்கும்வரைக்கும் அரைத்து உளுந்தளவு மாத்திரைசெய்து ஒருமாத்திரை, இரண்டுமாத்திரை எடுத்து வலிவகைகளுக்கு தயில்வேளைச்சாறு, இஞ்சிச்சாறு, முருங்கைவேர்ச்சாறு, வேப்பெண்ணெய் இந்த அனுமானங்களில்கொடுக்க வலி வகைகள்யாவும் இன்னும் அநேக நோய்களுந்தீரும்.

அக்கரா குளிகை.

சான்திரபேதி, தத்தம், நெல்லிவற்றல், தான்றிக்காய்த்தோல், கடுக்காய்த்தோல், அக்கரா, திற்பிலி வகைக்குக்களஞ்சு (வ) வாளம் களஞ்சு (௧௨) இவைகளில் சுத்திசெய்யவேண்டிய சரக்குகளைச் சுத்திசெய்து இடித்து முலைப்பால்விட்டு குளிகைப்பதத்திலரைத்து சிறுபயறுப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை அல்லது இரண்டுமாத்திரை குணங்கண்டுகொடுக்க மாந்தவலிகள், நெஞ்சில் சளிக்கட்டும், மலச்சிக்கல் தூங்கிய மாந்தம் இவைகள் சூரியனைக்கண்ட பனிபோல்தீரும்.

பிரப்பங்கிளங்குக் குடிநீர்.

பிரப்பங்கிளங்கு, பறங்கிக்கிக்கிளங்கு வகைக்குக்களஞ்சு (அ) நன்னாரிக்கிளங்கு, அமுக்கிருய்க்கிளங்கு, முதுமரத்து வேப்பம்பட்டை கொடிவேலிவேர், வெள்ளறுகு, கொடியாள்கூந்தல், ஏலம், சிற்றரத்தை, சுக்கு வகைக்குக்களஞ்சு (உ) இவைகளில் இலைவகை பிறநீங்கலாக மற்றச்சரக்குவகை பட்டைவகை, கிளங்குவகைகளை நறுக்கிக் காயவைத்திடித்து மாவாக்கி இலைவகைகளையும் ஒன்றுபடச்சேர்த்து மூன்றுகொத்துத் தண்ணீர்கொள்ளத் தக்க மண்பாத்திரத்திற்போட்டு நாலொன்றாகவெடுத்து ஆறுநாள் (கஉ) நேரங்கொடுக்கவும் இக்குடிநீர் ஐந்துவயதுக்குமேற்பட்ட பிள்ளைகளுக்கு கொடுக்கவும். பத்தியம் டாலும் சோறும் வேறு யாதொருபதார்த்தங்களும் கொடுக்கப்படாது.

கிருமிநாச மாத்திரை.

கிருமிசத்துரு களஞ்சு (உ) நறசீரகம், கருஞ்சீரகம், கடுக்காய்த்தோல், கடுகுரோகணி, மிளகு, வாய்விளங்கம், மாதுளம்வேர், சாசுக்கட்டி வகைக்குக்களஞ்சு (வ) இவைகளைச் சூரணஞ்செய்து மாதுளம்வேர், கடுகுரோகணி, மிளகு, கடுக்காய் இவைசமன் எடுத்தவித்த கஷாயத்திலரைத்து தூதுளங்கா யளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி ஒருமாத்திரை பொடித்து இரவில் சர்க்கரையிற்கலந்துகொடுத்து மறுநாட்காலை ஆமணக்கெண்ணெய் தேகதிடமறிந்துகொடுக்க கிருமிகள், மலச்சிக்கல் இவையாவும் நீங்கும்.

அபின் மாத்திரை.

அபின் களஞ்சு (கஇ) சுக்கு களஞ்சு (கஜ) திற்ப்பிலி களஞ்சு (உ) நற்சீரகம் களஞ்சு (உவ) மிளகு களஞ்சு (உஇ) இவைகளில் அபின் பிறநீங்கலாக

மற்றச்சரக்குகளை இடித்து கல்வத்தில்போட்டு விட்டுணுகிராந்திச்சாற்றால் நாலுசாமமரைத்து அபினையும் சேர்த்தரைத்து குன்றிபோல் மாத்திரை செய்து நிழலுலர்த்தி (க) மாத்திரை வில்வவேர், விட்டுணுகிராந்தி, நற்சீரகம், வெற்றிலைக்காம்பு இவைகளைக்கஷாயஞ்செய்து இக்கஷாயத்தில் ஒரு குளிகைகொடுக்க சுகம், கழிச்சல் தாபசுரம் நீங்கும். முலைகொடுக்கும் மாதர்கள் புளி நீக்கவும்.

ஏலாதிமிருத்தியாதி மாத்திரை.

ஏலம், இலுப்பைப்பூ, சிறுநாகம்பூ, சந்தனம், செண்பகப்பூ, சுக்கு, அகில், சாஸ்திரபேதி, கோட்டம், நெல்லி, தான்றி, கடுக்காய், மாஞ்சில், கடுகுரோகணி, திற்பலி, சிற்றரத்தை, இலவங்கம், உருத்திராஷம், தேவதாரம், அதிவிடையம், அதிமதுரம், இலாம்பிச்சம்வேர், இருவேலி, சீந்தில் தண்டு, நன்னாரிக்கிழங்கு, தூதுளைவேர், கோரைக்கிளங்கு, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், வகைக்குக்களஞ்சு (இ) இவைகளில் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை சூரணஞ்செய்து கல்வத்திபோட்டு முலைப்பால், இஞ்சிச்சாறு, கருப்பஞ்சாறு, செவ்விளநீர் இவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே முறையாக ஒவ்வொருநாளைக்கு அரைத்து அரைத்தமுடிவில் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம் இவைகளையும்போட்டு சேர்த்தரைத்து கடலைப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி காலை மாலை முலைப்பாலில்கொடுக்க தோஷம், ஈளை, இருமல், விக்கல், சத்தி, யிளைப்பு, தாகம் இவை தீரும். மேற்படி முலைப்பால், செவ்விளநீர், கருப்பஞ்சாறு, இஞ்சிச்சாறு இவைகளில்கொடுக்க சலக்கடுப்பு, உட்டணம், கை காலெரிவு வயிற்றில் புகைச்சலிவைதீரும்.

கஸ்தூரி மெழுகு.

கஸ்தூரி களஞ்சு (வ) பச்சைக்கற்பூரம் களஞ்சு (இ) கோரோசனை களஞ்சு (க) குங்குமப்பூ களஞ்சு (க) புனுகு களஞ்சு (வ) சவ்வாது களஞ்சு

(வ) இலவங்கம் களஞ்சு (௧) வால்மிளகு களஞ்சு (௧) சிற்றேலம் களஞ்சு (௨) சிறுலவங்கம் களஞ்சு (௨) இதில் கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், கோரோசனை, குங்குமப்பூ, புனுகு, சவ்வாது இவைகள் பிறநீங்கலாக மற்றச்சரக்குகளை இடித்து கல்வத்தில்போட்டு கற்பூரவாசனை, வெற்றிலைச்சாறு, கற்பூரவல்லி யிலைச்சாறு, ஆதளை இலைச்சாறு, சுண்ணம்பு நீக்கிய இஞ்சிச்சாறு, மிளகு அவித்தகஷாயம், கொடிவேலிவேர், அவித்தகஷாயம், பொற்றலைக் கையாந் தகரையிலைச்சாறு தனித்தனியே ஒவ்வொருசாமமரைத்து அரைத்தமுடிவில் பிறநீங்கலாகவைத்திருந்த சரக்குகளையும்போட்டு சேர்த்தரைத்து கல்வத்தில் விட்டு கல்லாய் உலர்ந்தபின் சுத்திசெய்த தேன்விட்டு மெளுகாயரைத்து இந்தமெளுகில் சிறுபயறுப்பிரமாணம் தேனில்சாப்பிட சன்னி, சீதளம், சுரங் கள், முகவாதசன்னி, தொய்வு, இழுப்பு, இருமல், மார்பில் சழியடைப்பு இன் னும் அநேக ரோகங்கள்தீரும்.

பாலர் ஔஷதங்களின்

சரக்குவகை மூலிவகைகளின் சுத்தி.

நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய்.	இவைகளை உள்விரை நீக்கி எடுக்கவும்.
சுக்கு ...	மேல்த்தோல்சீவி எடுக்கவும்.
அமுக்கிராக்கிழங்கு ...	பசுப்பாலிலவித்தெடுக்கவும்.
சிவதைவேர் ...	பாலிலவித்து உள்வயிரம்நீக்கி எடுக்கவும்.
சித்திரமூலம் அல்லது கொடிவேலி வேர்.	தண்ணீர்விட்டவித்து உள்வயிரம் நீக்கி எடுக்கவும்.
நேர்வாளம் ...	எருமைச்சாணியில் தண்ணீர்விட்டுக் கரைத்துச் சட்டியிலிட்டு வாளத்தைப்போட்டவித்து இறக்கி ஆறவைத்துக்கழுவி மேலோட்டை உடைத்து உள்நஞ்சு பிறநஞ்சு நீக்கி எடுக்கவும்.
தேற்றான்கொட்டை ...	மிருதுவாகச்சீவி தண்ணீரில் ஊறப்போட்டு நல்லாய் ஊறியபின் மருந்துகளுடன் சேர்க்கவும்.
ஊமத்தம்விரை ..	எலுமிச்சம் புளியிலொருநாளைக்கு ஊறவைத்தெடுக்கவும்.
படிகாரம், வெண்காரம், பொரிசாரம் இவைகளைப் புதுச்சட்டியிற்போட்டுப் பொரித்தெடுக்கவும்.	{ ரசகற்பூரம், வெற்றிலை, மிளகு, இவைகளை இடித்துக் கஷாயம்செய்து சட்டியிலிட்டு கிழிகட்டி அவித்தெடுக்கவும்.